# வெற்றி விளையாட்டு காட்டுகிறது





எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed.

386

# வெற்றி விளையாட்டு காட்டுகிறது!

(ஒரு மாறுபட்ட நாவல்)


மூன்று முறை தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt. D.Ed., FUWAI,



வெள்ளிவிழா ஆண்டு 1970-95

ராஜ்மோகன் பதிப்பகம்

8, போலீஸ் குவாட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : 1988
இரண்டாம்பதிப்பு : 1996

**விலை ரூபாய் 12-00**

கிரேஸ் பிரிண்டர்ஸ்
சென்னை-17.



# முன்னுரை

---

வெற்றி விளையாட்டு காட்டுகிறது என்னும் நூல் ஒரு ண்ட கதையின் முழுவடிவமாகும். ஒரு புதிய முயற்சியாக ருவம் பெற்றிருககிறது.

நாவல் என்றவுடன், காதலன், காதலி, வில்லன், அவன் ட்ட வெறி போன்ற நிகழ்ச்சிகள் தான் சாதாரணமாக பறு.

இவையெல்லாம் இல்லாமல், புதுமையாக ஒரு நாவல் ழுத வேண்டும் என்ற என் நெடு நாளைய ஆசை, இன்று றைவு பெறுகிறது.

இலட்சிய வேகமும், பிறர்க்குதவும் பண்புகளையும் காண்ட குணசேகர் என்பவர் தான் இக்கதையின் நாயகர். வருக்கு ஓர் ஆசை பிறக்கிறது. அது இலட்சியமாக வளர் றது.

ஆனால் இலட்சியத்தை வளர்க்க வந்தவர்கள் எல்லாம் காட்டிய அலட்சியமும், ஆணவமும் அவரை வெற்றி யடைய விடாமல் தடைபோடுகிறது. இடைமறிக்கிறது. ஏளனம் செய்கிறது. இதயத்தையே எரிமலையாக்கி விடுகிறது

அவரது இலட்சியத்தில் அவர் வெற்றி பெற்றாரா? வேதனைகளை விரட்டினாரா ? என்பது தான் இந்த நாவலின் கதையோட்டம்.

வெற்றி என்பது தானாக மடிமீது வந்து விழும் கனி அல்ல. அது உழைப்பினால், பெறுகின்ற செல்வமாகும்.

அந்த அற்புத வெற்றியானது, குணமுள்ள குண சேகருக்கு எப்படியெல்லாம் விளையாட்டு காட்டுகிறது என்ற நிகழ்ச்சிகள் தாம் கதை முழுதும் கண்சிமிட்டிக் காட்டு கின்றன.

யாரும் படிக்கலாம், எந்த வயதினரும் படிக்கலாம் என்னும் அளவில் எழுந்த குடும்ப நாவல் இது.

மனித வாழ்வு இலட்சியத்தினால் நடத்தப்படுகிறது என்பதைப் படிக்கும் ஒவ்வொருவரும் உணர்ந்து, நடந்து, முயன்று, வென்று பயன் பெற வேண்டும் என்ற எனது ஆசை, நியாயமானது தான்.

உங்களுக்கு இந்த நாவல் நிச்சயம் பிடிக்கும். ஏனென்றால் விளையாட்டுத் துறையில் வருகின்ற முதல் நாவல் முற்றிலும் புதிய கோணத்தில் அணுகுமுறை கொண்டது. அதனால் தான் உங்களை நிச்சயம் கவரும், என்ற நம்பிக்கையுடன் உங்களிடம் அளிக்கிறேன்.

வெற்றி மட்டும் விளையாட்டு காட்டவில்லை. உற்சாகமும் உவப்பும், உண்மையான இன்பமும் உங்களுடன் விளையாட(

கள் காட்டும், படிக்கப் படிக்க சுவைகளை ஊட்டும் என்றும் நம்புகிறேன்.

ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை' என்று விளையாட்டுக் களஞ்சியம் மாத இதழில் தொடர்ந்து வெளி வந்த நாவல் தான் இது. பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்து மகிழ்ந்த இந்த தொடர்கதை-இப்பொழுது அழகான நூலாக வந்திருக்கிறது.

இதற்கான ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொண்ட R. ஆதாம் சாக்ரட்டீஸ், மற்றும் கிரேஸ் பிரிண்டர்ஸ் அச்சகத் தாருக்கும் என் அன்பார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானமலர் இல்லம்
தி.நகர்
சென்னை—17

எஸ்.நவராஜ்செல்லையா
30-12.88.

# இந்த நாவலைப் படிக்குமுன்

திரு. எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் எழுதிய புத்தகங்களுள் இது தனித்தன்மையைப் பெற்றுத் திகழ்கிறது!

நாவல் தான் இது என்றாலும் தற்காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் நாவல்களில் இடம் பெறும் காதல், கலாட்டா போன்ற நிகழ்ச்சிகளை சேர்க்காமல் இந்தப் புத்தகத்தை அவர் எழுதியிருப்பது நம்மை நிச்சயம் வியப்பிலாழ்த்தும்!

விளையாட்டுத்துறை நூல்களையும் கதை, கவிதை, நாடக நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ள இந்நூலாசிரியர் நவராஜ் செல்லையா, தான் சுவீகரித்துக் கொண்டுள்ள விளையாட்டுத் துறையைப் பின்னணியாகக் கொண்டு குணசேகர் என்ற ஒரு கதாபாத்திரத்தையும், அவரைச் சுற்றிப் பலரையும் நமது சிந்தனையில் நிலைக்கும் வண்ணம் உலவவிட்டிருக்கிறார்.

தான் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றி தோல்வியைக் காணும் ஒரு மனிதனின் மனநிலையை சுவையோடு நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த ஆசிரியர் கதாபாத்திரங்களை நகர்த்தியுள்ள முறை பிரமிக்க வைப்பதாக அமைந்துள்ளது!

காதல் இல்லாமல், கலாட்டாக்கள் இல்லாமல் ஒரு சுவையான கதையைச் சொல்ல முடியும் என்ற மாயா ஜாலத்தை நவராஜ் செல்லையா அவர்கள் இந்த நாவலின் வாயிலாக நிரூபித்து, எழுத்துலகத்திற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியத்தை செய்திருக்கிறார்.

அவரது மாறுபட்ட முயற்சியின் சாதனையைப் படித்து சுவைக்க நாங்கள் தடையாக நிற்க மாட்டோம் என்ற உத்திரவாதத்துடன், உங்களை நூலினுள் நுழைய அழைக்கிறோம்.

பதிப்பகத்தார்

# ஒரு முன்னோட்டம்

ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை என்பார்கள். ஏனெனில் ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு என்பதால்.

ஆத்திரப்படுபவன் ஏமாந்து போகிறான் என்பார்கள். ஏனெனில் ஆத்திரம் அன்பை மறைத்து விடுகிறது, ஆராயும் பண்பினைக் குறைத்து விடுகிறது என்பதால்.

இவ்வளவு தெரிந்தும் ஏன் ஆத்திரப் படுகிறோம்? ஆங்காரம் கொள்கிறோம்? ஆவேசமடைகிறோம்? ஆடிப் பெருக்கு வெள்ளம் போல அடங்காது குதிக்கிறோம்? ஏன்?

ஏமாற்றம்தான் எல்லாவற்றிற்கும் காரணம். ஏமாற்றம் எப்பொழுது வருகிறது? எதிர்ப் பார்க்கும்பொழுது தான், எந்த முடிவும் தனக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கும் பொழுது, திடீரென்று எதிர்மாறாக நடந்து விட்டால்............?

அப்பொழுதுதான் ஆத்திரம் வரும். அப்படி ஆத்திரப் படுவதற்கு அர்த்தமேயில்லை. ஏனென்றால் நம்முடைய வாழ்க்கையே அப்படித்தான் அமைந்திருக்கிறது.

இருட்டு வெளிச்சம், பள்ளம் மேடு, வெண்மை கருமை, இன்பம் துன்பம் என்பதாகவே வாழ்க்கை எதிர்மாறாகவே அமைந்து விட்டிருக்கிறது. இந்த உலகத்தின் உருவகமாகவே வாழ்க்கையும் வழி காட்டுகிறது.

நினைப்பது நம்வசம் இருக்கிறது. ஆனால் நடப்பது நம் கையில் இல்லை என்பதை மட்டும் நாம புரிந்துகொண்டு விட்டால், நெஞ்சத்திலே தெளிவு வந்து விடும். நினைப்பிலே வலிமை வந்து விடும். வழியிலே நிதானம் வந்துவிடும். வாழ்க்கையில் அமைதி வந்து விடும்.

ஆகவே, ஆத்திரப் படக்கூடாது என்று இருந்துவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்து விடலாமா என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அதுவும் நியாயம் தான்.

கோபப்படாதவன் கோழை என்பார்கள் சிலர். கோபப் படத் தெரியாதவன் வாழ்க்கையில் முன்னேற முடியாது என்று வாதம் பண்ணுபவர்களும் உண்டு.

கோபப்படலாம், கொந்தளிப்படையலாம், குமுறலாம், ஆனால் இவையெல்லாம் நடைமுறைக்கு, வாழ்வின் முன்னேற்றத்திற்கு, வெற்றிக்கு ஒத்துவருமா !

அனுபவமில்லாதவர்கள் ஆத்திரப்பட்டு வார்த்தைகளை இறைத்து விடுவார்கள். அடக்கும் சக்தியற்றவர்கள் சிலர் அடிதடியில் இறங்கி விடுவதுமுண்டு. அடாவடிக்காரர்கள் என்பவர்களோ ஆர்ப்பாட்டத்தில் புகுந்துவிடுவார்கள்.

இவையெல்லாம் ஏன் ?

**ஆத்திரமடைந்த மனதை அமைதிப் படுத்திக் கொள்வதற்காக. ஆனால், அறிவுள்ளவர்கள் என்ன செய்வார்கள் ? என்ன செய்ய வேண்டும் ?**

ஆத்திரம் ஊட்டுவதற்குரிய சூழ்நிலையை அறிந்து கொள்ள வேண்டும். அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தது ஏனென்ற நியாய தர்மங்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் அடங்காது குதித்து ஆத்திரப்படும் மனதை சமாளிக்க முடியும், சமாதானப் படுத்தவும் முடியும்.

வேறு வழி இல்லை என்று விளங்கிக் கொள்பவர்களால் தான் வாழ்க்கையை சமாளிக்க முடியும். வளர்ச்சியடைய முடியும். மற்றவர்களை விட அதிகமாக முன்னேறவும் முடியும்.

இப்படி உள்ளதை விளங்கிக் கொள்ளாதவர்கள் வாழ்வு எப்பொழுதும் விடிவதேயில்லை. எப்பொழுதும் இருட்டிலேயே வாழ நேர்ந்து விடும்.

இங்கே தொடங்க இருக்கின்ற ஒரு புது விளையாட்டுத் துறை நாவலுக்குரிய முன்னுரை தான். நீங்கள் இதுவரை படித்து வந்தது. தலைப்பும் ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை என்பதுதான்.

அர்த்தமில்லாத தலைப்பாக இது இருக்கலாம், அர்த்த மில்லாத விஷயங்கள் கூட இதில் வரலாம். ஆனால் இது நமது விளையாட்டுத் துறையின் நிகழ்காலத்தையும் எதிர் காலத்தில் வரலாறாகக் காட்டும் காலக் கண்ணாடியாகவும் இருக்கும் என்பதற்காக எழுதப்படுகின்ற நாவல் இது.

இதில் வரும் கதாநாயகன் குணசேகர் தனது வாழ்க்கை யில் எத்தனையோ வேதனைகளைச் சந்தித்தவர். இங்கே பல சோதனைகளைச் சந்திக்க இருக்கின்றார். கதாநாயகன் என்ற வுடன் வழக்கமாகத் தமிழ் நாவல்களில் வரும் 'பாணிகள்' 'பாவனைகள்' 'தோரணங்கள்' 'குடைச்சல்கள்', குமட்டல்கள் காதலர்கள், கவிழ்ப்புகள், மோதல்கள் இதிலிருக்காது.

புதுவிதமாக இந்த நாவலை எழுத முயன்று இருக்கிறேன். நீங்கள் படித்துக் கொண்டு வரும்பொழுது ஆத்திரப்பட்டு விடக்கூடாது. ஏனென்றால் ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை என்றும் முன்கூட்டியே உங்களுக்கு சொல்லி விட வேண்டுமென்று விரும்புகிறேன்.

உலக அரங்கில் ஒரு தங்கப்பதக்கம் கூட விளையாட்டுப் போட்டிகளில் வாங்க முடியவில்லையே என்று ஏங்கும் உணர்வுகளின் வெளிப்பாடாக, விளங்கி வரும் சூழ்நிலைகளை விளக்கி விட முயன்றிருக்கிறேன். இந்த உண்மையை நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டால் போதும். இனிமேல் நீங்கள் படிக்கத் தொடங்கலாம்.

# 1. கடல் சிரித்தது !

கடலுக்கு ஒரே சந்தோஷம் !

கலையழகு மிக்க தன் அலைக்கரங்களால் கரையைத் தழுவித் தழுவி தன் களிப்பெருவகையை அதிகமாகக் காட்டிக் கொண்டிருந்தது.

காலைக் கருக்கல் பொழுதினிலே கடலுக்கு என்ன அவ்வளவு மகிழ்ச்சி? வளைத்துக் கொண்டிருந்த இரவின் கருமையோ, வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டதே அதற்காகவா !... அல்ல.

பிரிந்த குழந்தையின் இளஞ்சிவப்பு முகமாக சூரியன் ஆழியிலிருந்து உந்தி வந்திருக்கிறனே என்பதற்காகவா... அல்ல... அல்ல...

பின் வேறென்ன காரணமாக இருக்கும் ?

கடற்கரையில் மக்கள் கூட்டம் மகிழ்ச்சி கூட்டம்...

மாலையில்தானே கூட்டம் வரும்? நோட்டம் விடும்... ஆட்டம் போடும்... தினம் நடக்கும் திருவிழாக்கோலம். அது

வேறு காரணம்... ஆனால் காலைப் பொழுதினில் எதற்காக... ஏன் ?

வைத்தியர்களைக் கடல் பெண் வாழ்த்திக் கொண்டிருந்தாள். வாலைக்குமரிப் பெண்களின் வாயாரச் சிரிக்கும் சிரிப்பு போல அவள் ஒலியோசைக் கேட்டுக் கொண்டிருந்தது. வந்தவர்களை வரவேற்பது போலத்தான், தன் அலைக்கரங்களால் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

'இனிமேல் உங்கள் உடல் தாங்காது நீங்கள் நிம்மதியாக இருக்கவேண்டுமென்றால்' நிம்மதியாக வாழ வேண்டுமென்றால், என்று மருத்துவர்கள் எச்சரித்ததற்குப் பிறகு...

மலை போல் பெருத்தவர்கள் இலைகள் காற்றில் அசைவது போல அசைந்து கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார்கள் அவர்கள் விட்ட பெருமூச்சு ஏதோ தொழிற்சாலைக்குளிருந்து வருவது போன்ற உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இதுதான் நோயென்று அரைக்கால் சட்டைபனியன் போட்டு, கான்வாஸ் ஷூவும் அணிந்து கொண்டு வீரர்கள் வீராங்கனைகள் போல வேகமாக மூச்சிறைத்துக் ஓடிக் கொண்டிருந்தனர் சிலர்.

கணவன் மனைவி சமேதராக சிலர் நடந்து கொண்டிருந்தனர். தானும் கூடப் போகாவிட்டால் எங்கே தன் கணவர் கடற்கரை 'வாக்' போக மாட்டார் என்பதாக நினைத்து, பொறுமை பேசி, இந்த திருக்கோலத்தை ஏற்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தனர். சில பெண்மணிகள்.

'இன்னும் வாலிபம் இருக்கிறது. வயதாக வில்லை' என்பதை பிறருக்குக் காட்டவேண்டும் என்பதற்காக வயோதிகர்கள் சிலர் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

வைத்தியர்கள் விரட்டியதற்காக வந்தவர்கள் தான் அங்கு அதிகமாகத் தோன்றியிருந்தார்கள்.

இளைஞர்கள் சிலர், தமது பிற்காலம் நற்காலமாக இருக்க வேண்டும்' என்ற எதிர்காலத் தயாரிப்புக்காக ஓடியும் தேகப் பயிற்சியும் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த இளங்காலைப் பொழுதிலும் ஒரு சிலர் வந்து வாய்பார்த்து கொண்டு நின்றனர். அதற்கு உண்மையான காரணம் வேறு.

விளையாட்டுப் போட்டிகளுக்காக, உடல் திறன் பெற பயிற்சி செய்ய வரும் பெண்களைக் குறைவான சீருடையில் பார்க்கும் ஆசைதான் அது!

இப்படிக் கோலாகலமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது சென்னை கடற்கரை. இந்தக் களிப்பில்தான் கடல் சிரித்துக் கொண்டிருந்தது.

கடலில் கால் நனைய நின்று கொண்டிருந்தார் குணசேகர், ஏதோ, ஒரு பிரச்சனையில் போராடிக் கொண்டிருப்பதை அவர் முகம் காட்டிக் கொண்டிருந்தது.

# 2. காலம் அழைத்தது!

குணசேகர் தன்னை மறந்து சிலையாக நின்று கொண்டிருந்தார். சிலையாக நின்ற அவரின் பாதங்களை அலைகள் வந்து தழுவிச் சென்றன, கழுவிச் சென்றன என்றும் சொல்லலாம்.

மனிதரைப் புனிதப்படுத்தும் வித்தையைக் கற்றதால் தான் என்னவோ, கடல்தாய் தன் அலைக் குழந்தைகளை நொடிக்கொரு தரம் கரையை நோக்கி அனுப்பிக் கொண்டிருக்கிறாள், மானிடர்களும் கரை ஓரம் வந்து, துணியை சற்று தூக்கியபடி நிற்க, வந்த அலைகள் அவர்களது கால்களை வலம் வந்து நீராட்டித் தூய்மைப்படுத்தி விட்டுப் போய் விடுகின்றன,

பன்னீரில் கழுவினாலும் மீன் வாடை போகாது என்பார்கள். கடலே வந்து கழுவினாலும், மனிதரைப் புனிதப் படுத்திவிட முடியுமோ!

குணசேகர் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டு இருந்தார். இறப்பு வரையில்

தண்ணீர் அவரை நனைத்து விட்டிருந்தது. இன்னும் கொஞ்சம் மேல் நோக்கிப் போகவும் அலைகள் முயன்று கொண்டிருந்தன.

காலைக் கருக்கல் நேரத்தில் வேலைபற்றுப் போய் இங்கு வந்து நிற்கிறாரே இந்த குணசேகர்? என்னவாக இருக்கும்?

வேலையற்றுப் போனவர் அல்ல—வேலையை விட்டுவிட்டு வந்தவர். வேலைக்குப் போகவே வேண்டாம் என்று முடிவெடுத்து, 'கால் சீட்டு' என்பார்களே, அதிலே, தன் ராஜினமாவை எழுதிக் கொடுத்து விட்டிருக்கும் வேலையை செய்திருப்பவர் இவர்.

தினமும் அவர் வேலைக்குப் போகுமுன், காலையில் 4 மணிக்கு எழுந்து வந்து கடற்கரையோரமுள்ள தார் சாலையில் மெதுஓட்டம் (Jogging) ஓடிக் கொண்டிருக்கும் பழக்கம் உள்ளவர். மற்றவர்கள் வந்து சேர்வதற்கு முன்னே, தன் பணியை முடித்துக் கொண்டு வீடு திரும்பி, வேலைக்குப் போய்விடுபவர்.

அவர் வருவதும் போவதும் யாருக்கும் தெரியாது. சிறு காரியத்தைக்கூட பிரபலப்படுத்திக் கொண்டு, பெருமையடித்துக் கொள்ளும் பண்புள்ள இந்த உலகத்திற்குச் சற்றும் அவர் பொருத்தமில்லாதவர்தான்.

இன்று வழக்கத்திற்கு மாறாக, சூரியன் வந்து சுள்ளென்று அடித்த பிறகும்கூட, தண்ணீரை விட்டு நீங்காமல், தன்னை மறந்து நின்று கொண்டிருந்ததை, சுப்பிரமணியம் என்பவர் பார்த்து விட்டார். ஓடோடி வரத் துவங்கி விட்டார்.

யார் இந்த சுப்ரமணியம்? உடற்பயிற்சி செய்யவோ, ஓடிப்பழகவோ, மருத்துவர் யோசனைப்படி காற்றாட கடற்கரைக்கு வருபவரோ அல்ல... எதைச் செய்தாலும் அதைக் காசாக்க முயற்சி செய்யும் ஒரு காரியவாதி.

பெரிய இடத்து சகவாசம் இருப்பதுதான் பிற்கால வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பது அவரது வாழ்க்கையின் கொள்கை. அதுவே அசைக்க முடியாத நம்பிக்கையும் கூட. அதுவே அவருக்கு உதவியும் வந்தது.

பெரிய மனிதர்களை இந்தக் காலை வேளையில், கடற்கரையில் பிடித்து விடலாம் என்று காற்று வாக்கில் கேள்விப்பட்டு ஓடோடி வந்தவர். பலமுறை முயற்சித்தும், தோற்றுப்போய் வந்தவர், இன்று இப்படி மேலிட ஓடி வந்தார்.

'சார் சார்' என்ற அழைப்புக் குரல், குணசேகரை நடப்புலகத்திற்குக் கொண்டு வந்தது. கண்களை மட்டும் சற்று ஓரமாகத் திருப்பினார் குணசேகர். 'பல்லெல்லாம் தெரிய, பல பாவனைகள் முகத்தில் விளையாட' 'எண் சாண் உடம்பானது ஏழு சாண்களாகக் குறைய, உடல் குழைய' ஒரு கும்பிடு போட்டு நிமிர்ந்தார் சுப்ரமணியம்.

பக்கத்திலே வரலாமா சார்! பகீரதன் தவம் செய்யற மாதிரி தனிமையிலே நின்னுகிட்டிருக்கீங்களே! முனிவர்கள் செய்யற தவத்துல ராட்சசர்கள் வந்து கெடுத்துடுவாங்களாமே! அந்த மாதிரி நான் வந்துட்டேன் என்று அசட்டுச் சிரிப்புக்கிடையே தத்துவ உவமைகளைக் கொட்ட ஆரம்பித்தார் சுப்ரமணியம்.

வசதியுள்ளவர்களிடமும், பெரியவர்களிடமும் இப்படி இதிகாசக்கதைகள், இராமாயண உவமைகள் சொன்னால், கொஞ்சம் மனதில் இடம் பிடிக்கலாம் என்று யாரோ சொன்ன உத்தியை இங்கே கையாண்டார் சுப்ரமணியம்.

ஒரு சிறு சிரிப்பை உதிர்த்து விட்டுப் பேசாமல் நின்றார் குணசேகர். சுப்ரமணியத்திற்குப் 'பகீர்' என்றது. எப்படிப் பேச்சைத் தொடங்குவது? தலையை சொறிந்து கொண்டார்.

குணசேகரின் மௌன நிலையிலிருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கு என்ன வழி என்று மீண்டும் யோசனை செய்தார் சுப்ரமணியம்.

இன்னைக்கி ஆபீசுக்கு போகலீங்களா! நேரமாயிடுச்சுங்களே! லீவு போட்டுட்டீங்களா?

தலையை மேலும் கீழும் அசைத்துவிட்டுப் பேசாமல் இருந்தார் குணசேகர்.

அப்புறமா வந்து பார்க்கிறேங்க! இப்ப நான் வந்த நேரம் சரியில்லே போலிருக்குது! என்று தலையை சொறிந்தபடி அவர் 'ஜகா' வாங்கினர். சுப்ரமணியத்தைப் பார்க்கும் பொழுது, குணசேகருக்கு மனசு இளகிவிட்டதோ என்னவோ, மெதுவாகக் கனைத்துக் கொண்டு பேச்சைத் தொடங்கினர்.

என்ன சுப்ரமணியம்! இந்தக் காலை நேரத்லெ, உங்களை நான் எதிர்பார்க்கலியே! என்ன சேதி! ஏதாவது முக்கியமானதா இருந்தா இங்கே பேசலாம்... இல்லேன்னா...

பரவாயில்லீங்க... உங்களை நான் வந்து ஆபீசுல பார்த்தே பேசிகிறேன்... காசிக்குப் போயும் கர்மம் தொலையலங்கற மாதிரி, காலைக்கு வந்தும் நம்ம பிரச்சினைகள் போகலேன்னு நீங்க நினைச்சுக்கப்படாது. அதுனால, நான் மத்தியானம் வந்து உங்களை ஆபீசுல...

சுப்ரமணியம் முடிப்பதற்குள் குணசேகர் குறுக்கிட்டார்.

இனிமே அங்கே என்னை பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. வேணுமின்னா வீட்டிலே வந்து கூடப் பார்க்கலாம்... நீங்க ரொம்ப முக்கியம்னு நினைச்சா, இங்கே கூடப் பேசலாம்... எனக்கு ஒன்னும் ஆட்சேபணை இல்லே!

தண்ணீரை விட்டு வெளியேறி வந்து, இப்பொழுது கடற்கரை மணலில் கால் அழுந்த இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள். பேச்சுவாக்கில், வேலையை ராஜினாமா செய்ததைச் சொன்ன பொழுது, சுப்ரமணியத்திற்கு சப்பென்று போய்விட்டது.

காரணம் என்ன என்று கேட்கலாமா என அவர் நினைத்தார். இதைக் கேட்கப் போய் ஏதாவது ஏடாகூடமாக நடந்து விட்டால்... நமக்கேன் வம்பு! நாளைக்காவது நமக்குக் காரணம் தெரியாமலா போய்விடும், என்ற நம்பிக்கையில் தன் ஆவலை அடக்கிக் கொண்டார்.

குணசேகரின் சரித்திரமே சுப்ரமணியத்திற்கு நன்றாகத் தெரியும். கிராமத்தில் நிறைய நிலபுலங்கள் உண்டு. கொழுத்த பணக்காரர் என்று இல்லாவிட்டாலும், நல்ல பணக்காரர் என்றே சொல்லலாம். நிறைய படித்த படிப்பு வீணாகிவிடக் கூடாது என்பதற்காக வேலைக்குச் சென்று வந்தவர்.

பெரிய தொழிற்சாலை ஒன்றில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றும் பொறுப்பில் சிறிது காலம் பணியாற்றினார்.

யார் வந்து எந்த சமயத்தில் எதைக் கேட்டாலும், மனம் கோணாமல் பதில் சொல்லக் கூடியவர். சட்டத்திற்குள்ளாக யார் யாருக்கு என்ன உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு அமைதியாக உதவிகள் செய்து மகிழ்பவர். பிறர் உழைப்பில் பெருமை தேடிக்கொள்ள வேண்டும் என்று விரும்பாதவர். உதவியதற்காக கைமாறு எதுவும் எதிர்பார்க்காதவர்.

நமக்குத்தான் வசதி இருக்கிறதே, நாம் ஏன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்று நினைக்காதவர். தான்

உண்டு, தன் வேலே உண்டு என்று எப்பொழுதும் செயல் படுபவர்.

இப்படி எண்ணிக் கொண்டே சுப்ரமணியம் குணசேகர் கூடவே நடந்து கொண்டேயிருந்தார்!

சுப்ரமணியம் ஏதோ பேசத் தொடங்கிவிட்டு நிறுத்திக் கொண்டார்! சுப்ரமணியத்திற்கே ஆச்சரியம்! இப்படி அவர் இடையிலே பேச்சை நிறுத்தியதே இல்லே. ஆனல். குணசேகர் மனதில் ஏதோ கவலே இருக்கிறது அதைச் சொல்லவேண்டும் என்று விரும்புகிருர் என்று எண்ணி, அவர் முகத்தைப் பார்த்தார்!

அவர் எண்ணத்தை ஏமாற்றுவதுபோல, பிறகு சொல் கிறேன் என்று வேகமாக நடந்தார் குணசேகர்...

காலம் அழைத்ததை அவர் உணர்ந்தாரோ இல்லேயோ, குணசேகர் அழைத்ததைக் கேட்டு சுப்ரமணியம் பின் தொடர்ந்தார்!

# 3. புதிய பார்வை

குணசேகரும் சுப்ரமணியமும் மணற் பரப்பை விட்டுத் தார் ரோட்டுக்கு வந்தபோது, மணி ஏழாயிற்று, வெயில் சற்று வேகத்துடன் காயத் தொடங்கியது.

அதைத் தாங்க முடியாதவர் போல காணப்பட்டார் குணசேகர். இருந்தாலும், சுப்ரமணியத்தை சமாளிப்பதற்காகப் பேசத் தொடங்கினார்.

என்ன சுப்ரமணியம்! ஏதாவது நான் செய்ய வேண்டுமா! இனிமேல் அலுவலகத்தில் என்னைப் பார்க்க முடியாது. அங்கே நான் உனக்காக செய்கின்ற எந்த சிபாரிசும் எடுபடாது. வேறு எங்கேயாவது இருந்தால், வந்து பார். முடிந்தால் உதவி செய்கிறேன்.

அதற்கென்னங்க! உங்க அன்பு எப்பொழுதும் எனக்கு இருந்தா போதுங்க—அப்புறம் வந்து பார்க்குறேங்க—சுப்ரமணியம் தலையை சொறிந்தபடி சொல்லி முடித்து விட்டு, பின்புறமாக இரண்டு தப்படி வைத்து நடந்து, பின்பு புறப்பட்டு விட்டார். அவர் அதற்குப் பிறகு அவரைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

சுப்ரமணியத்தின் நடவடிக்கையினை மிக சுவாரசியமாக ரசித்துக் கொண்டிருந்தார் குணசேகர்.

'மனிதன் தனக்கு உதவி வேண்டும் என்கிற பொழுது எப்படியெல்லாம் பணிவாக நடந்து கொள்கிறான். தனது தேவை தீர்ந்துவிட்ட பொழுது எப்படியெல்லாம் திமிராக மாறி விடுகிறான்! மனிதனைப் போல் கொடுமையான மிருகம் இந்த பூலோகத்தில் கிடையாது' என்பது சரியாகத்தான் இருக்கும் போல இருக்கிறது.

இப்படி சிந்திக்க எப்பொழுது ஆரம்பித்தோம் என்பது அவருக்கே புரியாமல், நின்று கொண்டிருந்தார்.

எதிரே ஒரு கார் வந்து, சத்தம் போட்டு நின்றது கூட அவரது கவனத்தை மாற்றவில்லை. பலத்த ஹாரன் சத்தம் கேட்டு, விழித்துக் கொண்டார். படுத்துத் தூங்குவதற்கு வீடு' இல்லை என்று, கார் ரோட்டில் வந்து நின்று கொண்டு தூங்குகிறீர்கள் என்ற குரல் அவருக்கு ஏற்கனவே பழக்கமான குரல் தான்.

அந்தக் குரலுக்கு உரியவர் இன்பநாதன். ஆப்த நண்பரும் கூட. தமிழ் படித்த அவர் சிலகாலம் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். பின்னர் அந்தப் பள்ளியின் உரிமையாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க உடற் கல்வித் துறை ஆசிரியராகப் பயிற்சி பெற்று, உடற் கல்வி ஆசிரியராகவும் இருந்தவர்.

பல விளையாட்டுகளுக்கும் மாநிலச் செயலாளராகப் பணியாற்றிவர். இப்பொழுது அதுபோன்ற பதவி, பொறுப்பு, பணி அனைத்திலிருந்தும், விடுப்பு பெற்று ஓய்வாக இருப்பவர். அறுபது வயது ஆனாலுங்கூட, இன்னும் மிடுக்காக நிற்பவர். மிலிடிரி நடை என்பார்களே, அப்படி நடப்பவர்.

இன்பநாதன் சிரிப்பொலி எதிரொலித்தது. குணசேகர் வெட்கப்பட்டவராய் மெதுவாக நகர்ந்தவாறு சிரித்துக் கொண்டார்.

உங்களை இங்கே நான் எதிர்பார்க்கலே என்றார் குண சேகர்.

எதிர்பாராதது நடப்பதுதான் வாழ்க்கை. சொல்லி நடப்பது incident. சொல்லாமல் நடப்பது Accident. நீங்கள் இன்னும் கொஞ்ச நேரம் தார் ரோட்டில் நின்றிருந்தால், சொல்லாததுதான் நடந்திருக்கும் என்று சிரித்தார் இன்ப நாதன்.

உண்மைதாங்க! இயற்கையைப் பற்றி நினைக்கும் பொழுது மனதுக்கு இதமாக இருக்குது. மனிதர்களைப் பற்றி நினைக்கத் தொடங்கிவிட்டாலே, மயக்கம்தான் வருது.

நீங்க சொல்றதுல ஞாயம் இருக்கத்தான் இருக்குது. மனம் இருக்குறதுனாலதான், மனுஷன் இப்படி இருக்கிறான். நொடிக்கு நூறாயிரம் சிந்திக்குற மனசுள்ளவன், எப்படி நல்லா இருக்க முடியும்! அதை அடக்க முடியுறவன் எல்லாம் ஆனந்தமா இருக்குறான். அடக்கத் தெரியாதவன், அல்லோல கல்லோலப்பட்டு அவஸ்தைப்படுறான். அவங்களை நினைச்சி கவலைப்படுறதை விட, முயற்சி பண்ணி உதவுறப்பதான் நமக்கும் நிம்மதி கிடைக்கும். பிறந்த பிறப்புக்கும் ஒரு விமோசனம் பிறக்கும்.

இன்பநாதன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார் குணசேகர் இத்தனை நேரம் சிலையாக நின்று சிந்தித்து சிந்தித்துக் குழம்பிப் போயிருந்த அவருக்கு, இன்பநாதனின் பேச்சு குழப்பத்தைப் போக்கும் மாமருந்தாகத் தெரிந்தது.

என்ன! இன்னும் யோசனை? வாங்க இப்படி உட்காரு வோம் என்று, சாலை ஓரத்தில் இருந்த பெஞ்சிற்கு அவரை

அழைத்தார். இருவரும் போய் உட்கார்ந்து கொண்டனர். அமைதி தேடித்தான் அங்கு வருவார்கள். ஆனால் அங்கே கார்களின் சத்தம் லாரிகளின் இரைச்சல் போன்றவை பயங்கர பூமியாக மாற்றிக் கொண்டிருந்தன.

இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் இருவரும் பேசத் தொடங்கினார்கள். குணசேகரின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பதிலல்லவா இப்பொழுது குழப்பம்!

நீங்க சொன்னதை நினைச்சு பார்க்குறேன். மனிதர்களை மோசம்னு திட்டி மகிழுறதைவிட, பாசமா நினைச்சு, முடிஞ்ச வரை உதவி பண்ணி மகிழுறதுல உள்ள ஆத்ம சுகம், வேறெந்தத் துறையிலும் இருக்காதுன்னு நினைக்குறேன், உங்க அபிப்ராயம் எப்படிங்க!

மனிதர்களுக்கு உதவி செய்யுறதுன்னு, முதல்ல யாருக்கு உதவி செய்யனும்? பாத்திரம் அறிஞ்சு பிச்சை போடுன்னுங்க, நிலம் தெரிஞ்சு விதையை போடுன்னுங்க. மனிதர்களில் எத்தனையோ விதம் எத்தனையோ வகை இருக்கு. அதுல, யாருக்கு என்ன செய்தா, எப்படி செய்தா நமக்கு நிம்மதி கிடைக்கும்ங்றது தான் நமக்கு முக்கியம்.

இனிமே நான் எந்தக் கம்பெனிக்கும் வேலைக்கு போறதா இல்லே. எல்லா விவரமும் தான் உங்களுக்குத் தெரியுமே! நான் வீட்டிலே உட்கார்ந்து வீண் காலம் கழிக்கவும் விருப்பலே. ஏதாவது நான் இருக்குற சமுதாயத்துக்கு உதவுற மாதிரி உழைக்கனும். அது தான் என் விருப்பம். உங்க உதவியும் ஆலோசனையும் எனக்கு வேணும். அதுவும் இப்பவே நான் முடிவு கட்டியாகனும். குணசேகர் கட கட வென்று பேசித் தன் கருத்துச் சிக்கலை அறுக்க முயற்சித்தார்.

இன்பநாதன் விழித்துக் கொண்டார். ஒருவனைப் பார்த்து "போர்க்களம் போ என்பதற்கும், கல்யாணம் செய்து கொள் என்பதற்கும் புத்திமதி சொல்லக் கூடாது" என்பது

பழமொழி. அதுபோல, ஒருவரது எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள முடிவு எடுத்துக் கொடுப்பதும் தவறு தான் என்பதை இன்பநாதன் அறிவார்.

தனது கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்னதாக குண சேகரின் கொள்கையைத் தெரிந்து கொள்ள முற்பட்டார் இன்பநாதன்.

சினிமா நாடகத் துறையில் தான் நீங்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களே! அந்தத் துறை உங்கள் கருத்துக்களை சமுதாயத்திடம் சொல்வதற்கு நல்ல சாதனம் ஆயிற்றே! அதில் ஏன் நீங்கள் ஈடுபடக் கூடாது?

சினிமாத் துறை நல்ல துறை தான்; ஆனால் அதிலே நல்ல சூழ்நிலை இல்லை. தங்க விலங்கு என்பார்களே! அப்படித் தான். அங்கே இருப்பவர்கள் நிலை, சுயமாக சிந்திப்பவர் களுக்கு சில சமயங்களில் பக்கத் துணை கூட அமைவதில்லை கொஞ்சங் கொஞ்சமாக ஒதுங்கி விடுகிறார்கள். அதிலே பணம் போடுபவர்கள் புத்திமதிப்படி தான் போக வேண்டி யிருக்கும். இன்றைய சூழ்நிலையில் அது எனக்கு ஒத்துவராது என்றார் குணசேகர்.

உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். வளைபவர் களால் தான் அங்கே வாழ முடியும். நெளிவு சுளிவு அற்றவர் கள் கூட நிமிர்ந்து நிற்க முடியாத இடந்தான் ... அதை விட கவர்ச்சிகரமான அமைப்பு அரசியல். உங்கள் சுதந்திர மனப்போக்குக்கு அது ஏற்ற இடம் தானே என்றார் இன்ப நாதன்.

அரசியலுக்கென்று தனிப்பட்ட குணம் வேண்டும். தாக்கவும் தெரிய வேண்டும். தடுக்கவும் தெரிய வேண்டும். அடித்து விட்டு அணைத்து ஆறுதல் சொல்வது போல் நடிக்க வும் தெரிய வேண்டும். பொய்யையும் மெய்யாகப் பேசும் சொல்லாற்றல் வேண்டும். உண்மையை உடைத்தெறிகின்ற

வழக்காடும் மனம் வேண்டும். என் மனமோ அப்படி அல்ல. சொல்லி விட்டதை இல்லை என்று மறுக்கக் கூடத் தெரியாது என் மனோபாவத்திற்கு அரசியல் ஏற்ற இடம் அல்ல.

குணசேகரை பாவமாகப் பார்த்தார் இன்பநாதன். கரி அடுப்புக்குள் நுழைந்து கரி ஒட்டாமல் வெளியே வருகின்ற சாமர்த்திய சாலிகள் நிறைந்த அரசியல் சாம்ராஜ்யத்தில், குணசேகர் ஒரு காவலன் வேலைக்குக்கூட லாயக்கற்றவர் என்பதையும் புரிந்தவர் தான்.

பத்திரிகை ஒன்று நீங்கள் நடத்தலாமே, உங்கள் மனம் போல, நீங்கள் நினைத்ததை நியாயம் என்பதை எழுதலாமே! இதில் ஏன் நீங்கள் முழு மூச்சாக ஈடுபடக் கூடாது?

கார் யாருது சார்! நோ பார்க்கிங் ஏரியாவிலே நிறுத்தியிருக்கு, போலீஸ்காரரின் அதட்டல் கேட்டது.

நிறுத்தக் கூடாதுங்கற இடத்துலதான் நிறுத்துவாங்க போகக் கூடாதுங்கற இடத்துக்குத் தான் போவாங்க. 'இந்தியர்கள் குணமே இப்படித்தான்' என்று ஒரு வழிப் போக்கர் விமர்சனம் செய்துகொண்டே போனார்.

பேசிக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு அவசரமாக இருவரும் எழுந்தனர்.

# 4. குழப்பமும் குறுகுறுப்பும்

போலீஸ்காரர் பளீரென்று அறைவது போல குரல் கொடுத்து, குழலூதி விட்டார். பொதுமக்களில் ஒரு புண்ணியவான், பொதுவான ஒரு விமர்சனத்தைக் கூறி தான் ஒரு புத்திசாலி என்று நிரூபித்துக் கொண்ட பெருமை யில், விசில் அடித்தவாறு போய் கொண்டிருந்தார்.

'இனிமேல் நோ பார்க்கிங் ஏரியாவில்' காரை நிறுத்த வைத்திருப்பது நல்லதல்ல' என்று இன்பநாதன் காரில் ஏறிக் கொண்டு கதவைத் திறந்து விட்டார். குணசேகர் போசலை யுடனேயே ஏறி அமர்ந்து கொண்டு எதிரே பார்த்தார்.

தன் பேச்சுக்குக் கிடைத்த மரியாதையை மனதில் ஏற்றிக் கொண்ட போலீஸ்காரர், நிமிர்ந்த தலையுடன் ராஜ நடை போட்டு, மறுபக்கம் புறப்பட்டு விட்டார்.

காரில் உட்கார்ந்து கொண்டே பேசலாம் என்று இன்பநாதன்.

இன்னும் கொஞ்சதூரம் தள்ளிப் போய் விட்டால் பிற இடையூறு எதுவுமின்றிப் பேசலாமே! ஒதுக்குப்புறமாக மூ

ஒதுங்கிச் சொல்வது நல்லதல்லவா! என்றதும் கார் புறப்பட்டது.

நான் கேட்ட கேள்வியை நீங்கள் மறந்துவிடக் கூடாது. உங்கள் அறிவுக்கும் அனுபவத்திற்கும், நீங்கள் ஒரு நல்ல பத்திரிகாசிரியர் ஆகலாம் என்பது என் எண்ணம். உங்கள் அபிப்ராயம் எப்படி? என்றார் இன்பநாதன்.

நல்ல பத்திரிகாசிரியரும் அவர் நடத்துகின்ற நல்ல பத்திரிகையும் இந்த நாட்டில் விலை போகாது என்பது உங்களுக்குத் தெரியாதா? தெய்வீகப் பத்திரிகை என்பார்கள். அதிலும் தேவியின் படத்தை ஒரு மாதிரியாகப் போட்டு விட்டு 'யாரவது' கேட்டால் பத்திரிகை விற்க வேண்டாமா என்கிற காலம் இது!

பிறரை கடுமையாக விமர்சிக்க வேண்டும். அப்படி இப்படி என்று கிசுகிசுக்க வேண்டும். 'பின் அப்', என்றெல்லாம் படம் போட வேண்டும். மற்றவைகளை சொல்வதற்கே நாகூசுகிறது

பண்பையும் பண்பாட்டையும், பெருமித எண்ணங்களையும் வளர்க்க வேண்டிய பத்திரிகைகள், தங்கள் வருமானம் பெருக வேண்டும். என்பதற்காக பெருவாரியாக லாபம் சம்பாதிப்பதற்காக, 'மக்களுக்கு இதுதான் பிடிக்கிறது' என்று தாங்களே ஒரு வரம்புகட்டிக் கொண்டு, வீணாக எழுதி விடுகின்றார்கள்.

தந்தையும் மகளும் அருகருகே உட்கார்ந்து படிக்கக்கூட முடியாத தரங்கெட்ட நிலையில் பத்திரிகையின் முன்னேற்றம் இன்று போய் கொண்டிருக்கையில், நல்ல பத்திரிகையை நடத்தி வெற்றியினை பெற முடியும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? குணசேகர் குமுறிக் கொண்டே கேட்டார்.

யோசிக்க வேண்டிய விஷயம் என்ருர் இன்பநாதன். கடைகளில் தொங்குகின்ற பத்திரிக்கையின் அட்டைப் படங்கள்' மொட்டைப் படங்களாகத் தானே இருக்கின்றன. லட்சியவாதிகளால் இந்தத் துறையில் வெற்றி பெற முடியாது என்பதையும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

எல்லாமே சொல்லியாகி விட்டது, இனி...ம்.........ஒரே ஒரு கருத்தைச் சொல்லப் போகிறேன். அதற்கும் மறுப்பு சொல்லாமல் இருப்பீர்களா என்று பீடிகையுடன் தொடங்கிஞர் இன்பநாதன். குணசேகர் மெதுவாக சிரித்துக் கொண்டு, நண்பரின் முகத்தைப் பார்த்தார்.

நீங்கள் ஏன் எங்கள் விளையாட்டுத்துறை பக்கம் வரக் கூடாது ?

விளையாட்டுத் துறையில் நான் என்ன செய்ய முடியும ? எனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ! குணசேகரின் கேள்வி குழப்பத்துடன் வெளிவந்தது.

விளையாட்டுத்துறையில் மேல் நிலையில் இன்று இருப்பவர்கள் எல்லாம் ஒரு சம்பந்தத்துடன் தான் இருக்கின்ருர்கள் என்று நினைக்கிறீர்களா ! இன்பநாதன் எதிர்க் கேள்வி போட்டார்.

வக்கில் படிப்பு படித்தவர்கள் தான் வழக்காடும் மன்றத்திற்குள் சென்று வாதிட முடியும். வீதியிலே நின்று அதிகப் பிரசங்கம் செய்பவர்கள், என்னதான் முயன்ருலும், உள்ளே நுழைய முடியுமா ! வாதாட முடியுமா ?

என்னதான் அனுபவம் இருந்தாலும் மருத்துவப் பட்டம் வாங்காமல் ஊசி போட முடியுமா ? அறுவை சிகிச்சை செய்ய முடியுமா ! அரசாங்கம் தான் அதற்கு இடம் கொடுக்குமா !

மிஸ்டர் குணசேகர்! நீங்கள் நியாயத்தைப் பேசுகின்றீர்கள். இன்று விளையாட்டுத்துறை ஒரு பொது மேடையாகப் போய்விட்டது. வசதியுள்ளவர்கள், வாய்ப்புள்ளவர்கள், சிபாரிசு உள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் வந்து தலைமை ஏற்கலாம். வழிகாட்டலாம் என்பதுதான் இன்றைய நிலை. உண்மையுங்கூட. என்றாலும், இது ஒன்றும் தவறில்லை. நீங்கள் விருப்பப்பட்டால் நிச்சயமாக விளையாட்டுத்துறையில் ஈடுபடலாம். அதற்காகப் பின் வாங்கிப் போக வேண்டாம் என்றார் இன்பநாதன்.

விளையாட்டுக்களில் எனக்கும் விருப்பம் உண்டு. பள்ளிக்கூட நாட்களில் நிறைய விளையாடி இருக்கிறேன். அதை வைத்துக் கொண்டு, இந்தத் துறையில் எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொள்ளவோ, ஏற்ற முறையில் பொறுப்பேற்று நடத்த முடியும் என்று முன் வரவோ, எனக்குத் தைரியமில்லை, அதனால்தான் யோசிக்கிறேன் என்றார் குணசேகர்.

உங்கள் பண்பட்ட மனம் அப்படி நினைக்கிறது. அதற்காக நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பணமும், பலரை ஏவி வேலை வாங்கவேண்டுமென்ற மனமும், பதவியும் அதிகாரமும், வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள், இன்று பரவலாக இந்தத் துறையில்வந்து பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிலே ஒருவராக நீங்கள் இருக்கலாம். இதை நீங்கள் ஒரு மைனஸ் பாயிண்டாக நினைக்க வேண்டாம் என்றார் இன்பநாதன்.

விளையாட்டு என்பதும் ஒரு கலை தானே! கலையை முறையாகப் பயின்றவர்கள் தானே இதனை முழுமையாகக் கற்பிக்க முடியும். அதில் அதிகம் அனுபவப்பட்டவர்கள் தானே அறிவுடன் வழிநடத்திட முடியும். அப்படியிருக்க, விளையாட்டுக்கலை என்பது எல்றாராலும் எளிதாகக் கற்றுக் கொள்ளக் கூடிய கலையாகவா இருக்கிறது? என்பதுபற்றி எனக்குக் கொஞ்சம் விளக்க முடியுமா?

குணசேகரின் ஆவலைத் தெரிந்து கொண்டார் இன்பநாதன். விளக்கம் தர வேண்டியது அவரது தலையாய கடமையாகப் போய் விட்டது. ஆரம்பித்து விட்டார்.

விளையாட்டுக் கலை என்பது ஒவ்வொருவர் உடலோடும் மனத்தோடும் பிறந்து வளர்வது. அதை வளர்த்துக் கொள்ளும் ஆர்வம் அனைவருக்கும் உண்டு. ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உதவும் பொழுதுதான் அந்தக் கலை அதிகமாக ஆற்றலுடன் வளரும். அந்த விளையாட்டு உணர்வே இல்லாமல் வளர்பவர்கள் தான் இன்றைய நாளில் அதிகப் பேர் இருக்கின்றார்கள்.

அந்த உணர்வே இல்லாமல் இருந்துவிட்டு வளர்ந்த பிறகு, இந்தத் துறையில் எப்படியோ வசதியை வைத்து உள் புகுந்து கொண்டு, இதனை குழப்பியும், தங்களது குதர்க்கத் தனத்தால் குழி தோண்டிப் புதைக்கும் அளவிற்குத் தேய்த்து விடுகின்ற திமிர் கொண்டவர்களாகவும் சிலர் இருக்கின்றார்கள்.

அதனால் அவர்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது?

அந்தத் துறையில் உள்ள ஒரு சிலர்மீது எப்பொழுதோ ஏற்பட்டிருந்த தனிப்பட்ட மனவேற்றுமை, சச்சரவு இவற்றை வைத்துக் கொண்டு அவர்கள் உள்ள துறையையே அழித்து விடத் துடிக்கின்றவர்களைப் பற்றி நான் இப்பொழுது ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. காலம் தான் பதில் சொல்லும் என்று பெருமூச்சு விட்டார் இன்பநாதன்.

இந்தத் துறையுள்ளே ஏதோ பல குழப்பங்கள் இருக்கும் போல் இருக்கிறது என்று எண்ணத் தோன்றியது குணசேகருக்கு. நேரடியாகக் கேட்கலாம் என்று நினைத்தால் இன்பநாதன் கோபித்துக் கொள்ளக்கூடும் என்று சிறிது நேரம் பேசாமல் இருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் அமைதியாக அமர்ந்திருந்தனர்,

இந்தத் துறைக்கு என்று பயிற்சி பெற்றவர்கள் பலர் இருக்கின்றார்களே! அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றார் குணசேகர்.

ஆப்பிரிக்க அமெரிக்கப் பகுதிகளுக்கு அந்நாளில் சென்று அந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, அங்குள்ள மக்களை ஏவலுக்கென்று பயன்படுத்திக் கொண்ட வெள்ளையர்கள் போல, அவர்களுக்கு உதவியுடன் சென்று அடிமையாக வாழ்ந்த அப்பகுதி மக்கள் போல, விளையாட்டுத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் இன்று இருக்கின்றார்கள் என்றார் இக்பநாதன் மிகவும் சோகத்துடன்.

எப்படி என்று புரியாமல் கேட்ட குணசேகர் முகத்தில் பல கேள்விக்குறிகள் மின்னலாய் தோன்றி மறைந்தன.

# 5. விளங்காத விளக்கம்

விளையாட்டுத் துறையில் தன் இளமைக் காலத்தை எல்லாம் கழித்து, வாலிபப் பருவத்திலும் விளையாட்டிலேயே நேரங்களை செலவழித்து, அதன் காரணமாக, அகலாத பாசத்திலும் உறவினுலும் அதே துறையில் பணியாற்றிட வேண்டும் என்ற விருப்பத்தினுலும் இந்தத் துறைக்கு வந்தவர்கள் தான் உடற்கல்வி ஆசிரியர்கள் என்று தன் கருத்தைக் கூறத் தொடங்கினுர் இன்பநாதன்.

இந்திய நாட்டில் விளையாட்டுத் துறை என்று இருந்தது உண்மைதான். அதில் தனி மனிதனுக்காக தேகப் பயிற்சிகள் தான் முக்கிய இடம் வகித்தன. தண்டால், பஸ்கி போன்ற பயிற்சி முறைகளும், உடற்பயிற்சிக் கூடங்களும் தலையாய துறையாக காலங்காலமாக விளங்கி வந்தன.

ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன்னுல் இந்திய விளையாட்டுத் துறையில் புதிய சகாப்தம் தொடங்கியது. அதை ஆரம்பித்து வைத்து அரும்பணி ஆற்றியவர் ஒரு அமெரிக்கர். பெயர் ஹேரி குரோபக்.

வெறும் ஐந்து பேரை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கப் பட்ட அந்தப் பள்ளியானது; அந்தக் காலத்தில் ஆட்களைத் தேடி அலைந்ததுண்டு. ஆரம்ப நாட்களில் வந்தவர்களை யெல்லாம் வரவேற்றுக் கொண்டு, பயிற்சி கொடுக்கத் தொடங்கிய அந்த ஸ்தாபனம், பள்ளியாக பரிமுனையில் இருந்து இன்று கல்லூரியாக மாறி நந்தனம் வந்து சேர்ந்தது.

பள்ளியானது கல்லூரியானதால் தான் பிரச்சினைகளா? என்றார் குணசேகர். குறுக்கிட்டு விட்டதற்காக அவர் வருந்து வதுபோல் தெரிந்தது.

எதையோ கேட்டோம், எதையோ சொல்கிறாரே என்று அவர் எண்ணத் தொடங்கி விட்டாரோ என்று யூகம் செய்து கொண்ட இன்பநாதன், தலையை அப்படியும் இப்படியுமாக அசைத்துக் கொண்டார்.

பள்ளி, கல்லூரியாக வளர்ந்தது மட்டுமல்ல. 64 ஏக்கர் பரப்பளவுள்ள பெரும் இடத்தை அரசாங்கத்திடம் பெற்றுக் கொண்டது மட்டுமல்ல; ஆசியாவிலேயே முதல் உடற்கல்விக் கல்லூரி என்ற பெருமையை சேர்த்துக் கொண்டது மட்டுமல்ல—எல்லாம் பெருமைதான்....பெருமைதான். என்றாலும்............

எப்படி அதைச் சொன்னால் குணசேகருக்கு விளங்கும் என்ற தோரணையில் இன்பநாதன் சிந்திக்கத் தொடங்கி விட்டார்.

அந்தக் கல்லூரிதானே, இன்று அகில இந்தியாவில் இருக்கும் அத்தனை உடற்கல்விக் கல்லூரிகளுக்கும் தாய்? என்றார் குணசேகர்.

ஆமாம்! ஏறத்தாழ 60 உடற்கல்விக் கல்லூரிகளுக்கு மேல் இந்தியாவில் இருக்கின்றன. ஆயிரமாயிரமாக ஒரு ஆண்டுக்கு உடற்கல்வித் துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்

கள் தேர்வு பெற்று, வெளியேறி வந்து வேலையே இல்லாமல் பல ஆண்டுகளாக வேண்டித் தவங் கிடந்தும், மனம் கசந்தும் கிடக்கின்றார்கள்.

வேலையில்லாத பிரச்சினை எந்தத்துறையில் இல்லை ?

நான் அதைச் சொல்ல வரவில்லை என்றார் இன்பநாதன் உடற்கல்வித் துறை பற்றி பொதுமக்களிடையேயும் அரசுத் தரப்பிலும் அக்கறையில்லாத ஓர் சூன்ய நிலைதான் சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

உடற்கல்வி என்றால், அது விளையாடிக் கொண்டிருக்கும் வேலையைத் தவிர, வேறு ஒன்றும் கற்பதற்கில்லை விசிலடித்து மாணவர்களை விரட்டிக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு ஒன்றும் சற்றுத் தரவில்லை என்ற தவறான கருத்து தவழ்ந்து கொண்டிருக்கிறது.

யார் வேண்டுமென்றாலும் அதிலே சென்று பாஸ் செய்து விட்டு வந்துவிடலாம். மூளை தேவையில்லை. முரட்டுத் தனமான தேகம், அல்லது சாக்குப் பிடிக்கக்கூடிய மனோ பாவம் இருந்தால் போதும் என்று பொது மக்களும், எண்ணி ஏசி மகிழ்கின்ற நிலையில்தான் இன்று உடற்கல்வி இருக்கிறது.

ஒரே மாதிரிக் கல்வி என்று இந்தத் துறையில் பயில் பவர்களே நினைக்கின்றார்கள். அடிப்படைப் படிப்பு பிரிக்கின்றார்கள். ஆசிரியர்களை முதல் நிலை, இரண்டாம் நிலை என்று பகுத்து விடுகின்றார்கள். அதனாலே, எல்லா நிலைகளுக்கு இடையிலும் கல்லா நிலையும் பொல்லா நிலையும் தான் பூரணத்துவம் பெற்று பூசல்கள் விளைவித்துக் கொண்டிருக்கிறதே தவிர, பெருமை தேடித் தரும் நிலையிலே, இந்த படிப்பு நிலை அமையவில்லை என்பதுதான் எல்லாச்

சிக்கல்களுக்கும் மூல ஊற்ருக சுரந்து கொண்டிருக்கிறது என்று முடித்தார் இன்பநாதன்.

எல்லோருக்கும் இந்த குழப்ப நிலை புரியாமலா இருக்கிறது? என்ருர் குணசேகர். அவருக்கு ஆச்சரியம்!

குழப்பம் இருப்பது தெரிகிறது. குழப்பம் எப்படி உருவாகியிருக்கிறது என்பதும் புரிகிறது. அந்தக் குழப்பத்தை எப்படிப் போக்குவது என்பதுதான் குழப்பமாக இருக்கிறது என்ருர் இன்பநாதன்.

நீங்கள் என்னைக் குழப்புகின்றீர்கள் என்ருர் குணசேகர்.

பாறையிலே வெண்ணெய் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைக் காவல் காக்க ஒருவன் உட்கார்ந்திருக்கிருன்; குளிராக இருந்தவரை ஒன்றும் நேரவில்லை. வெயில் காயத் தொடங்கியதும் தான் வேதனையும் சோதனையும் தொடங்கியது.

வெண்ணெய் உருக ஆரம்பித்து ஓடத் தொடங்குகிறது. காவல் காத்துக் கொண்டிருந்தவனின் கண்களில் கலக்கம் கண்ணில் பெருகெடுத்து ஓடுகிறது, ஓடிப் போய் அள்ளக் கூடாதா என்ருல், ஓடுவதற்கு இரண்டு கால்களும் இல்லை. உருண்டு போய் அள்ளக்கூடாதா என்ருல், இரண்டு கைகளும் இல்லை, சத்தம் போட்டு அழைக்கலாம் என்ருலோ அவன் ஊமை.

இந்த நிலையில்தான் வெண்ணெயாக உருகிக் கொண்டிருக்கிறது, எங்கள் விளையாட்டுத் துறை. ஏதாவது செய்ய வேண்டும் என்று எல்லோருமே ஆசைப்படுகின்ருர்கள். ஆனல் ?... ... ...

இந்தத் துறையில் உள்ள எல்லோரும் ஒன்று கூடிப் பேசி முடிவெடுத்து, முனைந்து, செயல்படக் கூடாதா?

எல்லோரும் ஒன்று கூடுகின்றார்கள். தலைவராக உள்ள ஒருவர் உடற்கல்வித் துறையினரிடத்தே உடற்கல்வியின் பெருமையைப் பேசுவார். பேசுவார். அப்படிப் பேசுவார். கை தட்டுவார்கள். தெரிந்த விஷயத்தை தெரியாததை சொல்லுவது போல, பேசியவரும் பேச்சைக் கேட்டவரும் கேட்பார்கள்.

முடிவு என்று தீர்மானம் போடுவார்கள் முனைந்து செயல் படுவோம் என்பார்கள். மாநாடு முடியும் அவர்களும் 'முடிந்து போன' விஷயமென்று மறந்து விட்டு, தங்கள் தங்கள் சொந்த வேலைகளைக் கவனிக்கப் போய் விடுவார்கள்.

பேசியது காற்றிலே போய் விடும் தீர்மானம் காகிதத்தில் ஏறிவிடும். பிரச்சினைகள் அப்படியே [illegible] கொண்டிருக்கும். இந்தத் துறையிலே தான் நான் [illegible] ஆண்டுகள் பணியாற்றி மீண்டும் எதுவும் புரியாமல் [illegible] திருக்கிறேன், என்றார் இன்பநாதன்

விரக்தியும் வேதனையும் அவர் பேச்சிலே விளையாடின. வேறு வழி பிறக்காதா, மாற்று வழி கிடைக்காதா. மறு மலர்ச்சித் தோன்றாதா ? பேரெழுச்சி சேர்ந்திடாதா என்ற ஆதங்கத்தில் தான் இவ்வளவு விஷயங்களையும் உங்களிடம் சொல்கிறேன்.

உடற்கல்வியின் பெருமையை பொது மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். அவர்கள் ஆதரவு கிடைத்தால் தானே எந்த திட்டமும் எளிதாக நிறைவேறும். பெற்றோர்களாக இருப்பவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கங்கள் கொடுக்கவேண்டும். அப்பொழுது தானே, அவர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தத் துறையில் ஈடுபடத் தூண்டுவார்கள்.

பிள்ளைகள் மனம் லயிக்கும்படி [illegible] புதுமைகளைப் புகுத்த வேண்டும். பயிற்சிகள் அளிக்க வேண்டும். போட்டிகள் நடத்த வேண்டும். பரிசுகளை வழங்க வேண்டும். புகழுடன் மட்டுமல்ல, பிற்கால வாழ்வுக்கு பொறுப்புள்ள

வேலைகளை வாங்கி தந்துதவவேண்டும் என்று எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால் எதுவும் நடக்கவில்லை... என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார் இன்பநாதன்.

நடக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. நடத்த முடியும் என்ற வழிமுறைகளும் உள்ளன என்கிறீர்கள்! நடைமுறை சாத்தியமில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? குணசேகர் குறுகுறுப்புடன் கேட்டார்.

'நான்கு மாடுகள் ஒரு சிங்கம்' எனும் கதை உங்களுக்குத் தெரியும். அந்தக் கதைதான் இப்பொழுது நடந்து கொண்டு இருக்கிறது. மாடுகள் மாடுகளையே முட்டிக் கொண்டிருக்கின்றன. சிங்கமோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. 'ஒரு குச்சியை ஒடிக்கலாம். ஒரு கட்டுக் குச்சியை ஒடிக்க முடியாது' என்ற உண்மைக் கதை உயிரில்லாமல் உள்ளத்தில் முடங்கிக் கிடக்கிறது. ஆசை ஆவேசம் இரண்டும்தான் இப்பொழுது எங்கள் துறையில் ஆரோகணம் பாடிக் கொண்டு இருக்கிறது.

ஒற்றுமை மட்டும் வந்துவிட்டால், உடற்கல்வித் துறை உயர்ந்த துறையாகிவிடும், நாட்டு மக்கள் திடமான மக்களாகி விடுவார்கள். நல்ல சூழ்நிலையும் நலமான வாழ்வும் அமையும் என்ற நம்பிக்கையுடன் வாழலாம்.

ஆனால், அந்த அருமையான ஒற்றுமை நிலை அமையாதா என்றுதான். இந்தத் துறையில் ஆர்வம் உள்ள ஒரு சிலர். உண்மையாகவே, எதிர்ப்புகளுக்கிடையே விடாமுயற்சியுடன் பணியாற்றி வருகின்றார்கள்.

உடற்கல்வித்துறை மிகவும் உயர்ந்த துறை என்கிறீர்கள். அதை உலகத்தார்க்கு உணர்த்திட முடியாதா என்றார் குணசேகர்.

இதற்கு காலம்தான் பதில் சொல்லும் என்று இன்பநாதன். அதற்குமேல் பதில் சொல்ல அவருக் விளங்கவில்லை.

66 கோடி மக்களுக்கு மேல் வாழ்கின்ற ஒரு நாட்டி ஒலிம்பிக் போட்டியில் ஒரு தங்கப்பதக்கம் கூட வாங் முடியவில்லையே என்று பேச்சுக்குப் பேச்சுப் பேசி எழுதியும் வருகின்ற இந்த நாட்டில். அப்படி ஒரு சூழ்நி அமையவில்லையே! ஏன் என்றுர் இன்பநாதன்.

ஒரு தங்கப்பதக்கம் வாங்கக்கூடிய ஒரு வீரன் அல்ல, ஒரு வீராங்கனையை உருவாக்க இந்த நாட்டில் ஏன் முடி வில்லை என்றுர் குணசேகர்!

இப்பொழுதே சொல்லவா என்றுர் இன்பநாதன்.

ஐயா! தந்தி வந்திருக்கிறது! என்று குணசேகா வேலையாள் வந்து சைக்கிளுடன் நின்றுன். தந்திை பார்த்ததும் குணசேகர் திடுக்கிட்டு எழுந்து நின்றுர்.

# 6. பாட்டும் பயனும்

சென்னை சென்டிரல் ரயில்வே நிலையத்திற்குள் நுழைந்தார் குணசேகர். கோயம்புத்தூரிலுள்ள தன் மாமனாருக்கு உடல் நலம் மிக மோசமாகி விட்டது என்பதாக வந்த தந்தியைத் தொடர்ந்து, அவர் அவசர அவசரமாகப் புறப்பட்டு விட்டார்.

ஏற்கனவே அவரது மனைவியும் ஒரே மகள் முத்துலட்சுமியும் ஊருக்குச் சென்றிருந்தார்கள். அதனால் அவர் தனியாகவே புறப்பட நேர்ந்தது.

முப்பது கோடி மக்கள் வாழ்ந்த காலத்தில் கட்டிய கட்டிடம் சென்ட்ரல் ஸ்டேஷன். அதன் நுழைவாசல் மிகவும் குறுகியதாக இருந்தது. வேகமாக அங்கே வந்து போகின்றவர்கள் சரக்கு ரயில் மோதிக் கொள்வது போல மோதியபடி வந்து போய்க் கொண்டு இருந்தார்கள். அதைப் பற்றி யாரும் கவலைப்படவே இல்லை. கவலைப் பட்டதாகத் தெரியவும் இல்லை

இரு கைகளையும் ஏந்தியபடி ஒருவர் கறுப்புக் கோட்டுடன் நின்று கொண்டிருந்தார் டிக்கெட் வாங்கு

வதற்குள்ளாக உள்ளே நுழைந்த குணசேகர், ஒருவர் இடித்த வேகத்தைச் சமாளிக்க முடியாமல் கறுப்புக் கோட்டுக்காரர் மேல் மோதிவிட்டு, 'சாரி'; என்று நகர்ந்தார்.

கறுப்புக் கோட்டுக்காரர் இதைக் கண்டு கொள்ளாதவர் போல நின்று கொண்டிருந்தார். இதுபோல எத்தனையோ பேரிடம் தினமும் இடி வாங்கியவராயிற்றே! டிக்கட் கலக்டரான அவருக்கு 'அலுத்து' போய் விட்டது போலும்!

நீலகிரி எக்ஸ்பிரஸ் நிற்கும் பிளாட்பாரம் நோக்கி நடந்தார். அங்கே ஒரு கூட்டம் கூடியிருந்தது. ஆவலோடு சிலர், அருவெறுப்போடு சிலர் அங்கே அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். குணசேகர் தன் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு என்ன கூட்டம் அது என்று எட்டி நின்றவாறே எட்டிப் பார்த்தார்.

சில இளைஞர்கள் சத்தம் போட்டுப் பாடிக் கொண்டும், நரிகுறவர்களைப் போல இடுப்பை, வளைத்துக் கொண்டும், நெளிந்து கொண்டும் 'நாகரிமாக' ஆடிக்கொண்டிருந்தார்கள். சில இளைஞர்கள் சற்றும் பிசகாமல் சத்தத்திற்கு ஏற்ப விசில் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

காசில்லாத காட்சியாக நடந்துகொண்டிருந்த இந்த நாட்டிய நிகழ்ச்சியைச் சுற்றித்தான் அவ்வளவு கூட்டம். கூட்டத்தைச் சமாளிக்க அங்கே இருந்த போலீஸ்காரரும் வராமல் தலையிலடித்துக் கொண்டு போய்விட்டார். என்ன காரணமோ?

இப்படிப் பொதுமக்களுக்கு இடைஞ்சல் பண்ணுகிறார்களே! இவர்களை எப்படித் திருத்துவது? தனக்குள்ளே இப்படிப் பேசிக் கொண்டே ஓரமாகப் போனார் ஒரு பொறுப்புள்ள அதிகாரி.

ஆனால் பாட்டும் கூத்தும் கனஜோராய்ப் போய்க் கொண்டிருந்தது. பாட்டு முடிந்ததும் அவர்களே கை தட்டிக் கொண்டார்கள். அந்த நேரத்தில் நீலகிரி எச்ஸ்பிரஸ் பிளாட்பாரத்திற்குள் வந்து கொண்டிருந்தது. கொஞ்சநேரம் அதற்காக ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டது.

அந்த ஆட்டம் போட்ட கூட்டம், இப்பொழுது முண்டியடித்துக் கொண்டு பெட்டிக்குள் ஏற ஆரம்பித்தது.

படித்த பிள்ளைகள் இப்படியா? என்று இடிபட்ட ஒருவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

அவர்கள் கையிலே ஆளுக்கொரு கோல் (Stick) இருந்தது. அதையும் அவர்கள் ஊன்று கோலாக வைத்துக் கொண்டு முரண்டு பிடித்தபடி ஏறினர்.

இன்னும் எவ்வளவோ நேரம் இருக்கிறதே! என்ன அவசரம்? அது அப்படித்தான் என்று பதில் வந்தது ஒரு பயணியிடமிருந்து.

குணசேகர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந் தார். இளைஞர்கள் நல்ல வசதியான குடும்பத்தில் இருந்து வந்தவர்கள்போல உடை தோற்றம். மாணவர்கள் போலவும் தெரிந்தது. பிறகு ஏன் இப்படி நடுத்தெரு நாட்டியம்? பேய்க் கூச்சல்? ஊளையிடுவது போலக் கூக்குரல்? யார் இவர்கள்?

பக்கத்தில் நின்ற ஒருவரைப் பார்த்துக் கேட்டார் குணசேகர்.

'இவங்க கோயம்புத்தூர்ல நடக்குற ஒரு டோர்னமெண்டுக்கு போறாங்க. இந்த மாவட்டத்து சார்பாக ஆடப்போறாங்க.

'இந்தக் களியாட்ட வீரர்கள் எல்லோரும் விளையாட்டு வீரர்கள்' என்று மனதுக்குள் நினைத்த குணசேகர், வெளிப் படையாக அப்படியா! என்று தலையாட்டிக் கொண்டார். மனதில் ஒரு மாதிரியான குமட்டல்.

ரிசர்வ் செய்திருந்த தன் இடத்தில் போய் அமர்ந்து கொண்டார். அவருக்குப் பக்கத்தில் விளக்கம் தந்த அவரும் அமர்ந்திருந்தார்.

நீங்களும் கோயம்புத்தூர் தான் வருகின்றீர்களா என்று கேட்டார். அவர் தன்னை தம்புசாமி என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஆமாம் என்ற குணசேகர், தன்னையும் அறிமுகப் படுத்திக் கொண்டார்.

ரயில் புறப்பட ஆரம்பித்தது. படபடவென்று பூட்ஸ் ஒலிகளின் வேகம். எட்டிப் பார்த்தார் குணசேகர். ஓடாத வண்டியில் முண்டியடித்துக் கொண்டு ஏறியவர்கள் தான் அவர்கள். இப்பொழுது வண்டி ஓடத் தொடங்கியதும், ஓடிவந்து தாவி ஏறித் தொத்திக் கொண்டார்கள். ஆகா! என்ன கண் கொள்ளாக் காட்சி!

ஒவ்வொருவனும் ஒவ்வொரு சினிமா பாட்டை விசிலடித்தபடி தங்கள் தங்கள் இடத்தை வந்து அடைந் தார்கள். இடம் பிடித்தவுடன் அவர்களில் ஒரு சிலர் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு சீட்டுக் கச்சேரியைத் தொடங்கி விட்டார்கள்.

இன்னும் சிலர் 'பிளே பாய் ஜோக்குகள்' சொல்லத் தொடங்கினார்கள். ஒரே சிரிப்புதான். அந்த கம்பார்ட் மெண்டில் உள்ளவர்களை ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருந் தார்கள் அவரவர்கள் காதை அடைத்துக் கொண்டும், மற்றவர்கள் அவர்களை சர்க்கஸ் மிருகங்களைப் பார்ப்பது போல வேடிக்கையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

குணசேகர் மிகமிக ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏன் இப்படி அவர்கள் கத்திப் பேசுகின்றார்கள் ? கத்திச் சிரிக்கின்றார்கள் பிறர் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்பதற்காகவா ?

தம்புசாமி சிரித்துக் கெண்டார்.

அவர்களை அழைத்து புத்திசொல்லாம் என்றார் குணசேகர். ஆனால் யாரிடம் சொல்வது என்பதுதான் சிக்கலாகி விட்டது.

அவர்கள் தனியாகவா போகின்றார்கள் ? யாரும் கூட வரவில்லை போல் இருக்கிறது என்றார் குணசேகர், தம்புசாமி மீண்டும் சிரித்துக் கொண்டார்.

அப்பொழுது ஒரு பையன் வந்து. அன்றைய பேட்டா பணம் வேண்டும் என்று கேட்டான் ! தம்புசாமி ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொடுத்து, எண்ணிப் பார்த்துக் கொள்ளப்பா என்றார். பையனும் வாங்கிக்கொண்டு போய் விட்டான்.

'நீங்கள்தான் கூட வந்தவரா ! சொல்லவே இல்லையே' என்றார்.

சொல்லத்தான் ஆசை. சொல்லாமல் இருக்கிறவரை சௌகரியம் என்றுதான் முன் கூட்டியே சொல்லவில்லை.

காரணம்?

நான்தான் மேனேஜர். ஆனால், என் சொல்லுக்கு அவர்கள் அடங்குவதில்லை. மேலிடத்தின் கட்டளைப்படி தான் கூடப் போகிறேன். ஆரம்பத்திலேயே ஒருத்தன் எதிர்த்துப் பேசிவிட்டான் நான் அவர்களைப் பார்த்துக் கொள்கிறேன். அவ்வளவுதான் ! தம்புசாமியின் குரலில் தெம்பில்லை.

ஏன்?

நான் அவங்களுக்குப் புதியவன். ஒவ்வொரு பையனும் ஒவ்வொரு இடத்துல இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன். இங்கவந்து பத்துநாள் பயிற்சி முகாமில் சேர்ந்து இருந்தாங்க. அதில் ஏற்பட்ட பழக்கம் ஆளுக்கொரு பழக்கம் எல்லாத்தையும் எல்லாரும் கத்துகிட்டு, அதை இப்படி பயணம் போறப்ப பகிர்ந்துக்குறுங்க. பரீட்சை பண்ணி பார்க்குறுங்க.

நாளைக்கு காலையில் விளையாடப் போருங்க! அப்படின்னு உடம்புல தெம்பு இருக்க வேணுமா? இப்படி கத்தி கலாட்டா பண்ணி, சிகரெட் குடிச்சி, கண் முழிச்சிகிட்டுப் போனு, காலையில் என்னதான் விளையாட முடியும? குண சேகர் குரலில் குமறல் தெரிந்தது.

இதையெல்லாம் ஆடுறவங்களே உணரணும். கிளிப் பிள்ளைக்கு சொல்ற மாதிரி எவ்வளவுதான் சொல்றது? கடைசியில், என்னையே கேலி பண்ருங்க. சில சமயங்களில் இந்த மாதிரி வேலைக்கு ஏன் வர்ரோம்னுகூட, வருத்தமா போயிடுறது!

நீங்க இதுலஎல்லாம் இரக்கம் காட்டக் கூடாது. சீரியஸா இருக்கணும்.

தம்புசாமி மௌனமானர்.

கூச்சல் இப்பொழுது பாட்டு ரூபத்தில் வந்து கொண்டிருந்தது. பெட்டிகளைத் தட்டித் தாளம் போட்டு தடித்தனமான நாட்டியம் தடபுடலாக நடந்து கொண்டிருந்தது.

இரவு பதினொரு மணியைத் தாண்டி விட்டது. இருந்தாலும் சத்தம் குறையவில்லை. ஒரு சிலர் தனிப்பட்ட முறையில் பயணிகள் சிலரைக் கிண்டல் செய்வது போலவும் 'தமாஷ்' செய்து கொண்டிருந்தனர்.

வயதான ஒரு மாமி, தம்பிகளா! தலையை வலிக்குது. தூங்கணும். கொஞ்சம் சத்தம் போடாம இருக்கிங்களா!

அந்த மாமி பேசியதைப் போலவே ஒருவன் பேசிக் காட்ட, அவர்கள் ஓவென்று சிரித்தார்கள். அந்த சிரிப்பைக் கேட்டு தூங்கிக் கொண்டிருந்த ஒரு குழந்தை விழித்துக் கொண்டு 'வீல்' என்று அலறியது.

குழந்தையின் தகப்பன் அவர்கள் இருந்த இடத்திற்கு வந்து, பேசாமல் இருக்க மாட்டீங்களா? பதினொரு மணி யாச்சு என்று கொஞ்சம் கோபமாகவே கத்தினர்.

அப்படித்தான் சிரிப்போம். நீ என்ன செய்வே என்றான் ஒருவன்.

அவ்வளவுதான்! அந்த ஆள் அவனை சட்டையைப் பிடித்துக் கொண்டான், மடார் மடார் என்று அடி, இதுவரை அவதிப்பட்ட மக்களில் பலர் அந்த ஆளுடன் சேர்ந்து கொண்டனர். அடிவிழும் சத்தம், அலறல் சத்தம், அந்த கம்பார்ட்மென்ட் ஒரு யுத்தகளம் போல இருந்தது.

# 7. ஏன் இப்படி ?

பொதுமக்கள் பலரும் இதுவரை பொறுமையாக இருந்தபடி, சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், இதுதான் சமயம் என்று புலிபோல பாய்ந்தனர். இப்படி ஏற்படும் என்று நிலைமையை எதிர்பார்க்காத 'கத்தியவர்கள்', கப்சிப் என்று அடங்கிப் போய் விட்டனர்.

'அடி கொடுத்தது லாபம்' என்று சிரித்தபடியே அவரவர்கள் இடத்தில் போய் அனைவரும் அமர்ந்து விட்டனர். அடிபட்டவர்களோ 'நமக்கு நேரம் சரியில்லை' என்று நினைத்தார்களோ என்னவோ பேசாமல் படுத்துக் கொண்டு விட்டார்கள். அடி அவர்களை அச்சப்படுத்தியது என்பது தான் உண்மையான நிலை.

புரட்சி மேடைபோல் தோன்றிய அந்தக் கம்பார்ட் மெண்ட், இப்பொழுது பூஜை அறைபோல மௌனமாகக் காட்சியளித்தது. அத்யாவசிய தேவைக்குகூட யாரும் அங்கே பேசிக் கொள்ளவில்லை. ஆர்ப்பாட்டம் வாலைச்சுருட்டி அடங்கிக் கொண்டது.

தம்புசாமியோ இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவித்து போனார். தடுக்கப்போன அவருக்கும் இரண்டு அடி விழுந்தது. அதனைக் கண்ட குணசேகருக்குப் பகீரென்றது. விளையாட்டுத்தனமாகவே வாய்ச்சண்டை ஆரம்பித்து திடீரென்று கைச் சண்டையாக மாறி விட்டதே என்று வருத்தப்பட்டார்.

அதற்குப்பிறகு அந்த இரவு வெகு அமைதியாகக் கழிந்தது. விடியற்காலையில் கோவை சந்திப்பில் வண்டி வந்து நின்றது. எல்லோரும் இறங்கினார்கள். அந்த விளையாட்டு அணியும் இறங்கியது. ஆனால் ஏறிக்கொண்ட பொழுது இருந்த அந்தவேகம், எழுச்சி சுறுசுறுப்பு, சத்தம், குறும்பு இப்பொழுது அவர்களிடம் ஒன்றையுமே காணோம்.

குணசேகருக்கு ஒன்று புரிந்தது. இந்த இளைஞர்கள் இப்படி நடந்து கொண்டதற்குக் காரணம் இயற்கையாகவே அவர்களிடம் இருந்த கெட்டப் பழக்கத்தினால் அல்ல. இடையிலே வந்த பழக்கம், பலர் கூடி இருந்ததால் மனதுக்குள்ளே ஏற்பட்ட புதிய தெம்பு— மிருக ஆசையின் எழுச்சி....

யானைகள் கூட்டமாக இருந்தால் மிக அமைதியாக இருக்கும். அவற்றின்முன்னே எதிர்பட்ட ஆளுக்கு எந்தவித ஆபத்தும் கிடையாது. ஆனால் தனியாக வரும் யானையிடம் சிக்கினால், தப்பவே முடியாது. அதாவது மிருகங்கள் கூட்டமாக இருந்தால் அடக்கமாக இருக்கும், ஆனால் தனியாக இருந்தால் தடித்தனமான விலங்காகவே விளங்கும் என்பார்கள்.

அதையே திருப்பிப் போட்டால் அதாவது எதிர்மாறாகத் தான் ஆறறிவுள்ள மனிதர்கள் இருக்கின்றார்கள். தனியே இருக்கும் பொழுது மனிதன் நல்லவனாகவே இருக்கிறான். ஆனால் கூட்டமாக சேரும் பொழுதுதான் அவன் சிந்திக்கும் பண்பினை இழந்து, சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறான்.

குணசேகருக்கு இந்தக் கருத்தின் உட்பொருள் இ
பொழுதுதான் புரிந்தது. ஜங்ஷனில் அவரைத் தேடி வ
கார் டிரைவர் 'சார்' என்று அழைத்ததும்தான். நிலவுலகிற்
அவர் வந்தார். அவரது எண்ணமெல்லாம் இரவு நட
நிகழ்ச்சியிலேதான் இருந்தது. இப்படி ஓர் ஆரம்ப
அவருக்கே அனுபவமாக எதிர்பட்டது.

வீட்டிலே அவரது மாமனார் ஆபத்துக் கட்டத்தை
தாண்டிவிட்டதாக அவரது மனைவி கூறியபொழுது, மனதுக்
சமாதானமாக இருந்தது. மிகவும் இளைத்துத் துரும்பாக
போயிருந்தார். மாமனார் தன் மருமகனைப் பார்த்ததும் எழுந்
உட்கார முயன்றார். சுறுசுறுப்பாகவே வாழ்ந்தவராயிற்ற

அவரை சமாளித்துப் படுக்க வைப்பதற்குள் பெரு
பாடாயிற்று. குடும்பப் பிரச்சினைகள் குழப்பமில்லாமல் தீர்ந்
போனதால், குணசேகரின் நினைவுகள் மீண்டும், ரயிலி
நிகழ்ந்த நிகழ்ச்சியையே நிழல்போல் தொடர்ந்து கொண்
ருந்தன.

மதிய உணவுக்குப் பிறகு குணசேகர் படுக்கையி
படுத்திருந்தார். மணி மூன்று இருக்கும். அவரது நண்ப
வாசு வந்திருப்பதாகச் சொன்னார்கள். வரச்சொல் என்
உள்ளே வரவழைத்துப் பேசிக் கொண்டிருந்தார். அவரே
குணசேகரை ஒரு விளையாட்டுப் போட்டியைப் பார்க்க வ
வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

பார்வையாளராக வருகிறேன் என்றவரை வா
விடவில்லை. 'உங்களை இரு அணிகளுக்கும் அறிமுகப்படுத்தி
போட்டியைத் தொடங்கி வைப்பதற்காக அழைக்கிறோம்
எங்கள் கழகத்தின் சார்பாக நான் வந்திருக்கிறேன்' என்றார்

முன்கூட்டியே அறிவிப்பில்லாத அழைப்புதான் அத
நண்பரின் வற்புறுத்தல் வேறு. விளையாட்டைப் பார்க்

வேண்டும் என்ற விருப்பம். சரி என்று அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைக்கும் விழாவில் அவர் முதன் முதலாகப் பங்கேற்கப்போகிறார். குண சேகருக்கு மனதில் ஒரு குறு குறுப்பு இருக்கத்தான் இருந்தது.

பார்வையாளர்கள் நான்கு பக்கம் இருந்தனர் என்பதை விட, கிடந்தனர் என்பதே பொருந்தும். போட்டியைப் பார்க்க இவ்வளவு கூட்டமா? அதவும் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். உட்கார்ந்து பார்க்க வசதியில்லாமலிருந்தும், அவர்கள் முணுமுணுக்கவில்லை. முழு மூரமான உற்சாகம்தான் அது. இந்தியாவில் இப்பொழுது இப்படி ஒரு முன்னேற்றம்.

மைதானத்தின் நடுவில் இரு அணியினரையும் நிறுத்தி வைத்து விட்டு, குணசேகரை அழைத்துச் சென்றார்கள் போட்டியை நடத்தும் நிர்வாகிகள். ஒரு அணியின் அருகில் சென்றதும் தான், அவர்கள் யாரென்று தெரிந்தது? நேற்றைய இரவின் ரயில் பயண நாயகர்கள்.

அவர்களைப் பாாத்து அவர் சிரித்தார். அவர் சிரிப்பு பொருள் பொதிந்ததாக இருந்தது. அவர்களின் சிரிப்போ வெட்கத்தில் கிடந்தது. சமாளித்துக் கொண்டார்கள். தொடக்கவிழா இனிதே நடைபெற, போட்டியும் ஆரம்பித்தது.

சென்னையிலிருந்து வந்திருந்த குழுவினரின் ஆட்டம் சிறப்பாக இருக்கும் என்று எல்லோருமே எதிப்பார்த்தார்கள் இயற்கைதானே! ஆனால் எதிபார்த்த அளவுக்கு அவர்கள் ஆட்டம் இல்லை.

'இரவு ரயில் பிரயாணம் முழுதும் ஓய்வில்லை' என்று அருகில் இருந்தவர் குணசேகரிடம் கூறினார்.

இல்லிங்க! இவங்கள்ளாம் ஒடம்பை நல்லா பார்த்துக்கறதே இல்லே—சிகரெட், காபி, சினிமா, ஊர் சுத்தறது... இதுலேயே பாதி பலத்தைப் போக்கிடுறாங்க. வேணும் விளையும்னு உடம்புல தெம்பை வச்சிருந்தா தானே ஓடிவிளையாட முடியும். நீங்களே உடம்பை பாருங்க! எலும்பை தவிர, அந்த உடம்புல என்னங்க இருக்குது?

மனம் நொந்து பேசினார் அவர். உண்மைதானே!

நம்ம ஊர் விளையாட்டு வீரர்களுக்கு வாழ்க்கையில வசதி இல்லேங்குறது உண்மை தான். ஏழை குடும்பத்துலயிருந்து வர்ரவங்க தான் அதிகமா விளையாடுறாங்க. நல்ல சாப்பாட்டுக்கு வழி இல்லே. ஓய்வெடுக்கவோ, உடம்பை கவனிச்சுக்கவோ வாய்ப்பும் இல்லே. அப்படி இருக்குற நிலைமையை அனுசரிச்சு, 'ஒழுங்கா, யோக்யமா' இருப்பாங்களான்னு அதுவும் இல்லே?

இயற்கையா உடம்புல இருக்குற இளமையும் திறமையும் சீக்கிரமா தீர்ந்து போயிடுற மாதிரி, சில சமயங்கள்ல ரொம்ப கேவலமாகவும் நடந்துக்குறாங்க...ரொம்பக் கேவலமா—

இப்படி ஒருவர் விளக்கம் கூறினார்.

இருந்தாலும், விளையாட்டுப் வீரர்களைப் பற்றி, பார்த்து ரசிக்கும் பார்வையாளர்களிடம் அவ்வளவு நல்ல மதிப்பீடு இல்லே. மரியாதையும் இல்லே. காரணம் பலப்பல இருந்தாலும், இன்னும் ஒருபடி மேலே போய் சொல்ல வேண்டுமென்றால், விளையாட்டைப் பற்றியும் நல்ல தெளிவும், தரமான அறிவும் இன்னும் பொதுமக்களிடம் போய்ச் சேரவில்லை.

குணசேகர் யோசித்துக் கொண்டேயிருந்தார்.

மேல்நாட்டுல, ஒரு விளையாட்டு வீரர் உருவாகி, உலக அளவில் வர்ராருன்னா, அவர் தன் வாழ்க்கையில பல

சந்தோஷ விவகாரங்களை ஒதுக்கித் தள்ளிடுறரு. பார்ட்டி சினிமா, விருந்து, பெண் நண்பர்களுடன் பொழுதுபோக்கு இப்படியாக உடலையும் மனதையும் கெடுக்கின்ற அல்லது வசமாக்கிக் கொள்கின்ற அத்தனை 'சமாசாரங்களையும், அவர்கள் தியாகம் பண்ணிடுருங்க.

அதோடு மட்டுமல்ல, தினம் தினம் தேகத்திற்கு எப்படி யெல்லாம் சக்தியையும், விளையாட்டுத் திறமையையும் சேர்க்கணு னு அதுக்கான புஸ்தகங்களைப் படிக்கறது, அது சம்பந்தமா பேசுறது, அதுல அறிஞர்களா இருக்கறவங்களைப் பார்த்து உரையாடுறது, தன்னுடைய பயிற்சியாளரை தெய்வமா நினைச்சு, அவரது ஆலோசனைய தெய்வ வாக்காக மதிச்சுப் பாராட்டிப் பின்பற்றுறது. இப்படியாக அவங்க பழக்கத்துல வர்ராங்க...

இங்கே பாருங்களேன்! நாளைக்கு காலையில போட்டின்னு சொன்னாகூட, இரவு முழுவதும் வீணான வழிகள்ல கண் முழிக்குறது. சீட்டாடறது, சினிமா பார்க்கறது, சிகரெட் குடிக்கறது, விடிஞ்சதும் விளையாடுறதை ஒரு கடமையா செய்யறது... இப்படித்தான் இந்த நாட்டுல நடக்குதே ஒழிய, திறமையா யாருங்க ஆடுறது! இதை சீரியஸாவே எடுத்துக்கிற தில்லே?

வயதான ஒருவர் குணசேகரிடம் பேசினார்.

நாமெல்லாம் தங்கப் பதக்கம் வேணுன்னு ரொம்ப சீரியசாத்தான் பேசுறோம். காரியம் பண்றோம். ஆனா நாம செய்யறதுக்கும், தங்கப்பதக்கத்துக்கும் கொஞ்சங்கூட ஒட்டு மில்ல உறவும் இல்லேங்கற மாதிரி ஆயிகிட்டு இருக்குதுங்க என்றார் அவர்.

என்ன செய்யறுங்கன்னு நீங்க சொல்ல வேணும்? இனிமே என்ன செஞ்சா நல்லா இருக்கும்னு நீங்க சொல்லலாமா?

யாரையும் குறிப்பிட்டு குறைசொல்ல நானும் விரும்பலே! ஆனா குறிப்பா சொன்னா, நீங்க புரிஞ்சுக்குவீங்கன்னு சொல்றேன். நம்ம கிட்ட முதல்ல தேவை... Dedication. அது இல்லிங்க. இந்த காரியத்தை நாம் செய்யப் போறோம், இப்படித்தான் நாம இருக்கனும். நாட்டு வைத்தியத்துல மருந்து சாப்பிடறப்ப, இருக்கற கட்டுத்திட்டம் பத்தியம் நடைமுறை போல, விளையாட்டு வீரர்கள், தங்களை சோதனையில நின்னு ஜெயிச்சுக்கனும். வேதனைய தங்களோட வெற்றியா நினைச்சுக்கனும்.

சாதாரண மனுஷங்களைப் போல நாங்களும் நடந்துக்குவோம். ஆனா, விளையாட்டுல பெரிய வீரரா ஆயிடுவோம்னு அவங்க தப்பா நினைச்சுதான் இப்படி தாறுமாறா நடந்துக்குறாங்க... என்னைக்கு அவங்க தங்கள் சாதாரண ஆசைகளை தியாகம் பண்ணிட்டு, சமர்த்தா விளையாட்டுல ஈடுபடுறாங்களோ, அப்பத்தாங்க உருப்பட முடியும்.

அடுத்தது தாங்கள் ஈடுபடுற காரியம் ஒரு சிறந்த காரியம் வெறும் பொழுது போக்கு மட்டுமல்ல, மத்தவங்களையும் தங்கள் பக்கம் இழுத்து, கொஞ்ச நேரம் வித்தை காட்டுற மாதிரி விளையாடிட்டுப்போயிடுறதுல்லங்கற எண்ணம் வேணும். தாங்கள் செய்யுற தொழில்ல Devotion வேணும். அது இருந்தா தாங்க திறமையும் நுணுக்கமும் வரும்.

அது இல்லேன்னு நீங்க நினைக்கறீங்களா?

நீங்களே பாருங்க... ஒரு மாவட்டத்துல ஜெயிச்சு, மாநிலத்துல வந்து ஜெயிச்சு தேசிய அளவுக்கு வரும்போது, ஒருவனுக்கு 'தம்' இல்லாம போயிடுது. என்ன காரணம்?

குணசேகர் யோசிக்க ஆரம்பித்தார். இந்தப் பிரச்சினைகளை ஆத்திரப்படாமல் யோசிக்க வேணும் என்று நினைத்தார்!

எங்கேயோ தவறு நடக்குது! அதனால தான் இப்படி நடக்குது என்று ஒருவர் கூறியது உண்மையென்றால் என்ன அது?

# 8. கேள்விக்கு என்ன பதில்!

எங்கேயோ தவறு நடக்கிறது!

இந்தச் சொற்கள் குணசேகரின் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. சென்னைக்கு வந்த பிறகும்கூட அவரது சிந்தையைவிட்டு அந்தச் சிந்தனைகள் இடம் பெயர மறுத்தன.

எத்தனையோ வேறு பல செய்திகளை, சுவையான சமாச்சாரங்களைத் தன் நினைவிற்கு கொண்டுவர முயன்றாலும், அவரது மனமோ மசியவில்லை. மலைபோல குறுக்கே படுத்துக் கொண்டு, பசு போல அசைபோட ஆரம்பித்து விட்டது.

இந்த பரந்த பாரத பூமியில் 66 கோடி எண்ணிக்கைக்கு மேலுள்ள மக்கள் தொகுதியில், ஒரு வீரன் கூட ஒலிம்பிக் பந்தயத்தில் தகுதி பெற முடியாமல் தள்ளிப் போய்க்கிடக்கு மாறு தள்ளப்பட்டுக் கிடக்கிறான். அவமானத்தின் சிகரம் அல்லவா இந்த நிலை?

அப்படி என்றால், ஒன்று இந்த நாட்டிலே ஆற்றல் போயிருக்க வேண்டும் அல்லது ஆண்மை குறைந்திருக்க

வேண்டும் அல்லது ஆர்வம் மடிந்திருக்க வேண்டும் அல்லது அந்த ஞானமே அற்றுப்போயிருக்க வேண்டும். எப்படித் தீர்மானிப்பது ?.

இவையெல்லாம் இல்லை என்று நாம் எண்ணிக் கொண்டால், எதுவுமே குறைந்து போய் விடவில்லை என்று நமக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொண்டால், "இந்த நாட்டுக்கு எந்த நாடு ஈடு" என்று பழம் புராணத்தை பாடிக் கொண்டாலும் பரவாயில்லை ! ஆனால் நாம் ஒன்றை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

எங்கேயோ தவறு நடக்கிறது. நடந்து கொண்டு வருகிறது. அதனால்தான் நாம் எதிர்பார்ப்பது நடக்கவில்லை ! அது ஏன் அப்படி ?

வயலுக்குத் தண்ணீர் போகவேண்டுமென்று வாய்க்கால் மூலமாக கிணற்றலிருந்து தண்ணீர் இறைக்கிறோம். தண்ணீர் இறைக்கும் வேலை தடபுடலாக நடக்கிறது. தண்ணீரோ தங்கு தடையின்றி தாராளமாகப் போய்க் கொண்டிருக்கிறது. வயலும் வளமாக நனைகிறது. வயலில் பயிரும் நடப்பட்டு இருக்கிறது. 'பயிர்கள் வளரும் ! கதிராய் முதிரும் ! கதிர்களும் கொழிக்கும் ! அமோக விளைச்சலைக் கொடுக்கும்' என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது நியாயந்தானே !

விளைந்து வருவதோ கதிர் மணிகள் இல்லை. விழுந்து பரவுவதோ பதர்கள், வெறும் பதர்கள் என்றால், செய்கின்ற விவசாயத்தில் ஏதோ தவறு நடந்திருக்கிறது என்பதுதானே பொருள் !

காய்களும் கனிகளும் கொடுக்காத ஒரு தோப்பு என்ன தோப்பு !?

மலர்களையும் மணங்களையும் விளைவித்துத் தராத தோட்டம் என்ன பூந்தோட்டம்?

தங்கப்பதக்கத்தை வாங்கப் போகிறோம் ஏந்தப் போகிறோம் என்று கணக்கான காலத்தையும், தண்ணீராகக் காசையும் செலவழித்து, அத்தோடு இந்நாட்டு இளைஞர் கூட்டத்தின் உழைப்பையும் பயிற்சி என்ற பெயரில் செலவழித்துவிட்டு, போட்டி நடக்கும்போது என்ன முடிவு என்று கேட்டால், அண்ணாந்து வானத்தைப் பார்ப்பதும் கால் விரலால் அகலமாக மண்ணைத் தோண்டுவதுமாய் இருந்தால், அதற்கு என்ன அர்த்தம்?

ஏன் தோற்றது என்ற கேள்வி வந்தால், ஒரு பேச்சு வந்தால் பிறர் மீது பழியைப் போட்டு விட்டுப் பொறுப்புள்ளவர்கள் போய் விட்டால் அதற்கு என்ன பொருள்? எங்கேயோ தவறு நடந்திருக்கிறது என்றுதானே சொல்லத் தோன்றுகிறது. அப்படியென்றால் அது என்ன தவறாக இருக்கும்?

இப்படி எண்ணிக் கொண்டே நடந்தார் குணசேகர் கேள்விகள் கிளைத்தெழுந்து அவர் மனதிலே குதிரை ஏறிக் கொண்டிருந்தன. கனத்த மனதுடன் தனித்து நடந்து கொண்டிருந்த குணசேகர் தன் கேள்விக்கு விடை காணும் ஆவேசத்தில், புத்தர் காட்டுக்குப் புறப்பட்டுப் போனதுபோல சென்னை மாநகர சாலையோரங்களில் நடந்து போய்க் கொண்டிருந்தார்.

பலநாள், பலமுறை இதற்கொரு பதிலை பெற முயன்ற அவரது பகீரதப் பிரயத்தனம் முனைமுறிந்து, முனைமழுங்கிப் போயினவே தவிர, முடிவையோ நல்ல விடிவையோ தரவில்லை.

வேகமாக லாரி வரும் சத்தம் கேட்டு பயந்து, ஓரமாக ஒதுங்கி நின்றார் குணசேகர். என்ன அவசரம் இந்த லாரி

டிரைவருக்கு என்று ஏறிட்டுப் பார்த்தார். போய்விட்ட லாரியையே பார்த்துக்கொண்டிருந்த அவரது கண்களில், பட்டுப் போயிருந்த ஒரு பெயர்ப் பலகை பட்டது.

பாதி உடலைப் பறிகொடுத்திருந்த அந்தப் பலகையில், மைதானம் என்று எழுதப்பட்டிருந்தது. இது ஒரு விளையாட்டு மைதானமாகத்தான் இருக்க முடியும் என்று கருதி ஒரு நோட்டம்விட்டார்.

ஆமாம்! சுற்றி வளைக்கப்பட்ட மதில் சுவரும் அதற்கு இருந்தது. ஆனால் அவையோ கடுமையான பீரங்கித் தாக்குதலுக்கு இரையான கட்டபொம்மன் கோட்டை போலக் காட்சியளித்தது. ஆள் ஏறிப் போவதுபோல் அரை அளவு இடிக்கப்பட்டும், உள்ளே நுழைந்து போவது போலக் குடையப்பட்டும் சுற்றுச் சுவர் இருந்தது.

மூன்று நான்கு பன்றிகள் முண்டியடித்துக் கொண்டு உள்ளே சென்று கொண்டிருந்தன. மைதானத்திற்குள்ளே அவைகளுக்கு என்ன வேலை என்ற ஆவலில் குணசேகர் உள்ளே பார்த்தார்.

உள்ளே பந்து விளையாடுவதற்கென்று சில பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மைதானங்கள் சிமிண்டால் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த தரைப் பகுதிகள் மீது அவர் கண்ட காட்சி, குணசேகரின் உச்சந் தலையிலே ஆயிரம் குளவிகள் ஆங்காரத்துடன் கொட்டியது போல் இருந்தது. தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டார். கண்களை இறுக்கி கெட்டியாக மூடிக்கொண்டார், இருந்தாலும் அந்தக்காட்சி மீண்டும் மீண்டும் அவர் கண் முன்னே வந்து பரந்து பாய்ந்து நின்றது.

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து உருவாக்கியிருந்த அந்த சிமெண்ட் தரை ஆங்காங்கே மலக்குவியலாகக் காட்சியளித்தது. கால்வைக்க ஓர் அடிகூட இடைவெளி

விடாமல் அந்தப் பகுதி மக்கள், திறந்த வெளிக் கக்கூஸாக அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். சுவர்களின் ஓரங்களிலே உடைந்த மட்பாண்டங்கள், சிதறிக்கிடந்த கண்ணாடி பாட்டில்கள், கிழிந்த கோணிகள், கந்தலான பாய்கள் இன்னும் என்னென்னவோ கிடந்தன. பாதுகாப்பான குப்பை மேடாக அம் மைதானம் பயன்பட்டுக் கொண்டிருந்தது. மறைந்திருந்து சீட்டாடும் மண்டபமாகவும் பலர் சேர்ந்து குடித்து மகிழும் குகைக் கோயிலாகவும் அந்த மைதானம் உதவிக் கொண்டிருந்தது.

எவ்வளவு செலவழித்து இந்த மைதானத்தை உருவாக்கியிருப்பார்கள்? எத்தனை எத்தனை இலட்சியக் கனவோடு இதை படைத்திருப்பார்கள்?

நிகழ்காலம் இறந்த காலத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது. இந்த நிகழ்காலத்தைப் பார்த்து எதிர்காலம் எப்படிச் சிரிக்குமோ?

ஆடுகின்ற மைதானமானது காட்சி தந்த அலங்கோலம் அவரைத் திகைக்க வைத்தது. திக்கு முக்காடச் செய்தது. செய்வதறியாது செயலாற்று நின்றார் குணசேகர்.

'ஒரு கிரவுண்டு இன்று என்ன விலை விற்கிறது! லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இடத்தை, விளையாடும் இடமாக ஆக்கி வைத்திருக்கின்றார்கள் என்றால், அப்படி செய்திருப்பவர்கள் அறிவற்றவர்களா என்ன? ஏன் இப்படி இந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பொதுமக்கள் தான் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

நமக்காகத்தானே இந்த இடத்தை விளையாட ஏற்பாடு செய்திருக்கின்றார்கள் என்று இளைஞர்களாவது எண்ணிப் பார்த்து செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டாமா?

ஒன்றுமே இல்லை, ஆதிகாலத்து மக்கள் போன்ற விளக்கம் பெறாத அறிவு. முற்றிப்போன நாகரிகத்தின் முடியில்

உட்கார்ந்திருப்பவர்கள் போன்ற இழிவான இச்சை செயல்கள். இவற்றில்தான் இந்திய மக்கள் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றார்களே ஒழிய, மைதானங்கள் எதற்கு என்ற, எந்த மரமண்டையிலும் ஏறவில்லை. நாமும் ஏற்ற முயலவில்லை.

சினிமாவுக்கென்றால் எந்த வழியும் பாக்கியில்லாமல் விளம்பரம் செய்கின்றார்கள், பல வண்ணங்களில் பளபளப்பான சுவரொட்டிகளை ஒட்டுகின்றார்கள். அதற்காக பல பத்திரிகைகளை நடத்துகின்றார்கள். சீரழியச் செய்கின்ற செக்சுக்கு மேற்கொள்கின்ற முயற்சிகளில் மயிரிழை அளவு கூட விளையாட்டுக்கென்று இந்தத் துறையில் உள்ளவர்கள் அக்கறை காட்ட மாட்டேன் என்கின்றார்கள். ஏன்?

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எத்தனை எத்தனை செலவு செய்கின்றார்கள்? அதில் கோடியில் ஒரு பங்காவது விளையாட்டைப் பற்றி பொது மக்களிடம் பேச வேண்டாமா?

ஆஸ்பத்திரிகளை அதிகமாக கட்டிக்கொண்டே போகின்றார்கள் என்றால் என்ன அர்த்தம்? நோயாளிகள் நிறைந்து கொண்டு வருகிறார்கள் நாட்டில் என்பதுதானே பொருள். மருத்துவ மனைகள் குறைய வேண்டுமானால், விளையாடும் மைதானங்கள் பெருக வேண்டும். இதை நாம் ஏன் நினைக்க மறுக்கிறோம். யார் எடுத்துச் சொல்வது?

கிரேக்க நாடுகளில் ஒரு சிறு நாட்டின் தலை நகருக்கு, கோட்டைச்சுவர் இல்லாமல் இருந்ததை, ஒருவர் அந்த நாட்டுத் தத்துவ ஞானியிடம் சுட்டிக்காட்டிக் கேட்டாராம். அதற்கு அவர் சொன்னாராம்... இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஒவ்வொரு செங்கல்தான். வெறும் கோட்டைச் சுவர் எதற்கு? வல்லமை வாய்ந்த குடிமக்களே செங்கல்லாக இருந்து சமுதாயமே சுவராக இருக்கும் பொழுது?

அத்தகைய வலிமையான சமுதாயம் இருந்ததால்தான் கிரேக்கம் உலகுக்கே கலைகளையும், விளையாட்டுக்களையும் ஒருங்கும் பேராண்மை பெற்று தலைமை வகித்திருந்தது. எப்பொழுது அதன் மக்கள் உடலால் வலிமையை இழக்க ஆரம்பித்தார்களோ - அப்பொழுதே அவர்கள் ரோமானியருக்கு அடிமைப்பட்டு போனார்கள்.

அதனால் என்ன ஆயிற்று? கிரேக்க நாகரிகம் பாழ்பட்டுப் போனது. ஒலிம்பிக் பந்தயங்கள் அழிந்தன? வளர்த்த அவர்களது உன்னத கலைகள் மறைந்தன. மகிழ்ச்சியோடு வாழ்ந்த மக்கள் வருந்தி ஓலமிட்டுத் தாழ்ந்தார்கள். நாடு சிதைந்தது.

இது ஒரு வரலாற்றுப் பாடம். விளையாட்டை மறக்க ஆரம்பித்த கிரேக்க மக்களின் சிறப்பு மிக்க வரலாறும் சீரழிந்து சின்னா பின்னமாகப் போனது.

நாமோ தொடர்ந்து விளையாட்டுக்களையும், உடற்பயிற்சிகளையும் வெறுத்துக் கொண்டே வருகிறோம். அதன் விளைவுகளைத்தான் நாம் இன்று அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம்.

மாலை நேரங்களில் மைதானங்களில் இளைஞர்கள் இருந்து விட்டால், விளையாடத் தொடங்கிவிட்டால், சமுதாயத்தில் தற்போது நிகழ்கின்ற நீசமான நிகழ்ச்சிகளில் பாதி மறைந்தே போய்விடும்.

எவன் ஒருவன் தன் தேகத்தை உயர்வாக நினைக்கிறானோ அவன் யோக்கியமானவனாக, மானமுள்ளவனாக வாழ முற்படுகிறான்? இது வரலாறு கூறும் உண்மை.

இந்த உண்மையை நாம் பொதுமக்களிடம் சொன்னோமா? இளைஞர்களின் உள்ளம் புரிந்து கொள்ளும்படி எடுத்

துரைத்தோமா ? பள்ளிகளில் மாணவர்கள் உணர்ந்து பின் பற்றுகின்ற வகையில் காரியங்கள் செய்தோமா?

இன்று விளையாட்டு நிகழ்ச்சிகள், போட்டிகள், எல்லாம் எப்படி நடைபெறுகின்றன தெரியுமா? ஏதோ ஞாபகம் தெரியாத வயதில் இறந்துபோன தந்தைக்கு, தனது ஐம்பதாவது வயதில் திதி செய்கின்ற ஒருமகனது செயலைப் போல.

'இது ஒரு தட்டமுடியாத கடமை— செய்யாவிட்டால் மற்றவர்கள் ஏதாவதுசொல்வார்கள்' என்பது போலத்தானே நடைபெறுகின்றது! இந்த வெறுப்பு விளையாட்டின் மேல் ஏன் ஏற்பட்டது· மற்றவர்களுக்குப் பிடிப்பில்லாமல் போக என்ன காரணம்!

நாம் ஒன்றையுமே கண்டு கொள்ளவில்லை. நேரம் போனால் சரி, நமக்கு ஏதாவது ஆதாயம் கிடைத்தால் சரி, என்ற மனப்போக்கில் அல்லவா போய்க்கொண்டிருக்கிறோம். அத்தகைய மறதியின் விளைவு தான் இந்த மைதானங்களின் அலங்கோலங்கள்.

குணசேகர் தன் நண்பர் முன்பு கூறியிருந்த கருத்துக்களை மீண்டும் நினைவு படுத்திக் கொண்டிருந்தார்.

அடுக்குத் தொடராக காரியங்களை ஆற்ற முடியாத சூழ் நிலைகள் இந்த நாட்டில் இருப்பதை இப்பொழுது அவரால் புரிந்து கொள்ள முடிந்தது-

பொது மக்களுக்கு விளையாட்டு பற்றிய தெளிவு இல்லாமை; பள்ளிக் கூடங்களில் போதிய உற்சாகம் தராமை, இதிலே பணி யாற்றுகின்றவர்களுக்கு வசதிகளையும் வாய்ப்பு களையும் தராமல் நடத்தும் தன்மை; இதிலே போதிய அறிவில்லாதவர்கள் இந்தத் துறைக்குள்ளே புகுந்துகொண்டு தங்கள் கருத்தை புகுத்தும் கொடுமை; விளையாட்டுத் துறையினர்களுக்குள்ளே நடக்கின்ற போட்டிப் பொருமை

அதனுல் உண்மையான திறமையுள்ள விளையாட்டு வீரர்கள், சக்தியுள்ள எதிரிகளால் சாய்க்கப்படுகின்ற வேதனை...

தனக்கு வேண்டியவர்களுக்கு ஒரு நீதி; வேண்டாதவர்களுக்கு புதிய விதிமுறை ஏற்படுத்தி விளைக்கின்ற அநீதி, அப்படி ஆட்சி செய்கின்ற அதிகாரயக்காரர்கள் ஆங்காங்கே இருப்பதால் தான் விளையாட்டுத் துறை தலையெடுக்க மாட்டேன் என்கிறது! என்ற எண்ணம், தனது நண்பர் வாசு பேசுவது போல அவர் காதில் ஒலித்தது.

வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்குள்ளே வீற்றிருக்கின்ற எலும்புகள், மற்றும் துகள்கள் போல, விளையாட்டுத் துறைக்குள்ளும் இப்படி ஒரு காட்சியா?

மைதானத்தைப் பார்க்கப்போய் மலைபாகக் கனக்கின்ற நெஞ்சுக்குள்ளே, அலைகளாக எழுந்து விழுந்த எண்ணங்கள் அவரை அந்த இடத்திலிருந்து நடத்திச் சென்றன. அவரையும் அறியாமல் அவரது கால்கள் ஓரிடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தன. அந்த இடம் அவருக்கு உகந்த இடம் தான்.

வாருங்கள்! இந்த நேரத்தில் வருகிறீர்கள்? நீங்கள் சொல்லி அனுப்பியிருந்தால், நானே வந்திருப்பேனே என்ருர் இன்பநாதன்.

இன்பநாதன் குணசேகரை கூர்ந்து கவனித்தார் குழப்பங்கள் மனதுக்குள்ளே குமைந்து கொண்டிருக்கின்றன என்பதை அவர் முகம் தெள்ளத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது.

ஏன் இப்படி! இன்பநாதனும் குழப்பத்துடன் காணப்பட்டார்.

இதுக்கு ஏதாவது பரிகாரம் கண்டால் தான், எனக்கு மனசு நிம்மதியா இருக்கும் போல இருந்தது. அதனுல்தான்

உங்களைப் பார்த்துப் பேசலாம்னு வந்தேன். குணசேகர் குரலில் தெம்பில்லாமல் இருந்தது.

அதுக்கென்ன? இருவரும் அறைக்குள்ளே போய் உட்கார்ந்து கொண்டார்கள். இருந்த களைப்பு தீர காபி சாப்பிட்டுக்கொண்டார்கள். இதமான மனது வந்த பிறகு, இருவரும் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார்கள்.

இடையிலே யாராவது வந்தால், தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று இன்பநாதன், தன் மனைவியிடம் கூறிவிட்டு வந்தார். குணசேகர் அதற்குள், தனது சுழும்பிய மனத்துக்கு ஒரு விடிவு கண்டவர் போல, பிரகாசமாகத் தோன்றினார்.

என்ன நடந்தது என்பது புரியாமல் கொஞ்சம் இன்பநாதன் திகைத்தார். அவர் கேட்காமல் ஆரம்பித்தார் இவர்.

குணசேகர் கொஞ்சங்கூட தாமதிக்காமல் தான் பார்த்த மைதானக்காட்சியை விளக்கினார். அலங்கோலத்தை முகச் சுளிப்புடன் விவரித்தார்.

இது பற்றி அரசாங்கத்துக்கு நாம் எழுதினால் என்ன? ஏதாவது நடக்குமே?

பொறுப்புள்ளவர்களுக்கு இது தெரியாமல் இருக்குதுன்னு நீங்க நினைக்குறீங்களா?

பத்திரிக்கைக்கு எழுதிப் பேட்டி... படம் புடிச்சி அனுப்பிச்சா...

இதுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தர மாட்டாங்க...! இதுல என்ன கவர்ச்சிஇருக்கு.... இதை போட்டா எத்தனை இதழ்கள் விற்கும்! எவ்வளவு லாபம் கிடைக்கும்! இப்படின்னு லட்சக் கணக்கா விற்குற பத்திரிக்கையே கணக்கு போடும் போது... இந்த சேதியை போட எந்தப் பத்திரிக்கை முன்னே வரும்....

பள்ளிக் கூடத்துலே சொல்ல வேண்டிய பாடம் இது !...

நிமிர்ந்து உட்காரணும்-நிமிர்ந்து நடக்கணும்-ரோட்டிலே ஓரமா போகணும்-ரோடு மத்தியில் போகக்கூடாது-சுத்தமா இருக்கணும்-நிறையபடிக்கணும் இதையெல்லாம் விட்டுட்டு எஸ்கிமோ, சிவப்பிந்தியர், தென் துருவம், இப்படியெல்லாம் குழந்தைகளுக்கு கத்துத் தர்ரோம். பாடங்களை மனப்பாடம் செய்யத்தான் வைக்கிறோமே-ஒழிய வாழ்க்கையில் நல்லா நடந்துக்கணுங்கற சங்கதிகளை இன்னும் நீத்து வேலை ஆரம்பிக்கலியே!

Moral instructionன்னு ஒரு பாடம்-அதுக்கு மதிப்பே இல்லை அந்த வகுப்புல வேறே பாடம் நடக்கும். விளையாட்டுன்னு ஒரு பாடம். அதுல வேற பாடம் இருக்கும். நாம எதுக்கு முக்கியத்துவம் தரணுமோ, அதுக்கு இன்னும் நாம தரணும்னு நினைக்கவே இல்லே!

ஒரு மனிதனுக்குத் தேவை உடல் நலமும் அறிவும்தான், அந்தப்பண்புகளை குழந்தைகளிடம் வளர்க்க நாம் என்ன செய்திருக்கிறோம்? அப்படி முயற்சி பண்ணியிருந்தால் அதுல என்ன முன்னேற்றம் இருக்குது கஷ்டப்பட்டு உழைக்கணும்னு யார் விரும்புறா? சுலபமா கிடைக்கிற சுகத்தைத்தான் எல்லாம் விரும்புறாங்க... அதனுலதான் சினிமா கண்டபடி முன்னேறுது. கண்ட மாதிரி எழுதுற பத்திரிக்கைங்க லட்சம் லட்சமா விற்குது, மத்தவங்களைப் பத்தியே பேசியும் ஏசியும் வாழ்ற கூட்டம் சுகமா இருக்குது. இன்பநாதன் கோபமாக பேசினர்.

இதை மாத்தனும்னு என்ன வழி என்ருர் குணசேகர்.

லட்சியத்தை புகுத்தனும். லட்சிய வாழ்க்கைக்கு வழி காட்டனும்...

லட்சியம்னு... என்ன? குணசேகர் ஆச்சரியத்துடன் கேட்டார்—

# 9. லட்சியமும் லட்சணமும்

லட்சியம் இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? லட்சியம் இல்லாத மனிதனுக்கும், வீதியில் திரிகின்ற மிருகத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்குது? கண்டதை சாப்பிட்டுட்டு கண்ட இடத்துல தூங்கறதும், கண்ணுல பட்டதைப் பார்த்து சந்தோஷப் படுறதும், கண்ட கண்ட செய்திகளைப் பேசிப் பொழுதை போக்குறதும் மட்டும் மனுஷருக்கு வாழ்க்கையில்லே.

மனுஷரா பொறந்தா ஒவ்வொருத்தருக்கும் ஓர் உயர்ந்த லட்சியம் வேணும். அதுதான் புகழ். அந்தப் புகழை அடையறதுக்காக, அற்ப வழிகளிலும் அநியாய முறைகளிலும் அறிவையும் உழைப்பையும் பயன்படுத்தக் கூடாது. நேர்மையான வழியில், நியாயமா செய்யுற காரியத்தால் வர்ற புகழ் தான் கடைசி வரையிலும் நிலைக்கும்.

இந்த மாதிரி லட்சியம் வேணும்னு, சின்ன குழந்தைகளுக்கு சொல்லித் தரணும். பத்து வயசுலேயே பழக்கப்படுத்துணு தான். இருபது வயசு வரும்போது, அவங்க இட்சியத்திற்காக உழைப்பாங்க. முன்னுக்கு வரணும்னு முயற்சிப்பாங்க.

சின்ன வயசுல ஒருத்தரை செல்லமா வளர்க்கறேம்னு சுத்தவச்சி, பாழாக்கிட்டு, பதினாறு வயசுல காதலங்கற சேதியை கத்துக்கத்தான் நம்ம ஆட்கள் உதவுறாங்களே தவிர, உருப்படியா புத்தி சொல்ல யார் முன் வர்றா! புகழ் பெற்ற ஆட்கள் கூட பொதுமக்கள் புத்தியைக் குழப்பி, அதனால் வருமானங்களையும் ஆதாயம் அடையத்தான் விரும்புறாங்களே தவிர, 'தனக்கும் பயன்படணும்' சமுதாயத்துக்கு உதவணும், நாட்டுக்கு உழைக்கணும், அரிய விஷயங்களுக்காக பாடுபடணும்னு நல்ல லட்சியத்தை யார் சொல்லித்தர்றா! பள்ளிக்கூடத்தில்தான் இப்படி லட்சியங்களை ஆரம்பிச்சி வைக்கணும்! ஆனா எல்லாம் தலைகீழா மாறிக்கிட்டுத்தானே போகுது!

இன்பநாதன் தன் மனதில் தேங்கியுள்ள சுமையை இவ்வாறு பேசி இறக்கி வைத்துக் கொண்டார்.

வரவர காசுக்குத்தான் மதிப்பு அதிகமாகுதே ஒழிய, உழைக்கும் உண்மைக்கும் மதிப்பு கால்தூசி அளவு கூட இல்லை! உட்கார்ந்து வசதியா சாப்பிட்டு உறங்கத்தான் சூழ்நிலைகள் சொல்லித்தருதே தவிர, 'உழைச்சு வாழணும்' உண்மையா பிழைக்கணும்னு பேசற பெரியவங்க கூட நம்ம நாட்டில் குறைஞ்சுகிட்டு வர்றாங்க.

விளையாட்டுத் துறையிலதான் இது போன்ற இலட்சியப் பிடிப்பான வாழ்க்கையை உருவாக்க முடியும்ங்கற நம்பிக்கை முன்னெல்லாம் இருந்தது. ஆனா, இந்தத்துறையிலும் இப்ப இருக்குற நிலையைப் பார்த்தா, நம்பிக்கை எல்லாம் சிறகொடிஞ்சு போய்கிடக்குது.

குணசேகர் இன்பநாதன் கூறுவதை மிகக்கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார்.

விளையாட்டுங்கறது ஒருத்தர் விருப்பமா வந்து ஈடுபடுற செயல். அதை கன்னாபின்னான்னு விளையாடினா காட்டு

பனிதர்கள் போல ஆயிடுங்கறத்துக்காகத்தான். போட்டி முறைகளை உருவாக்கி வச்சி, விபத்து நேராம மகிழ்ச்சியோடு முடியணும்ங்கற இலட்சியத்தோட அந்த நாளில் ஏற்பாடு செஞ்சி வச்சாங்க, கத்தும் கொடுத்தாங்க.

தனக்குத் திறமை எவ்வளவு இருக்குங்கறதை கண்டு பிடிக்க விளையாட்டுக்கள் உதவுது. பிறருக்குரிய திறமை எவ்வளவு? தனக்குரிய திறமை எவ்வளவுன்னு தெரிஞ்சுக்கத் தான், விளையாட்டுப் போட்டிகள் உதவுது. இப்படி இருந்த லட்சியம். இப்போ என்ன லட்சணத்தில் இருக்குதுன்னு நினைக்குறீங்க.

குணசேகர் நிமிர்ந்து உட்கார்ந்தார். இன்பநாதன் நிறுத்தாமல் அதே வேகத்தில் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

விளையாட்டுப் போட்டியில் பங்கு பெற்றால், எப்படியாவது ஜெயித்துவிட வேண்டும் தோற்றால் அவமானம் என்பதாக இப்பொழுதெல்லாம் 'இலட்சியம்' ஏற்பட்டிருக்கு. தனக்கு ஜெயிக்க வாய்ப்பில்லாம போனா அந்தப் போட்டியையே அசிங்கப்படுத்துற மாதிரி, கலாட்டா பண்ணி, குழப்பத்தை விளைவிச்சி, சமாதானம் அடையற பழக்கம் இப்ப ஒரு மரபு மாதிரி ஆக்கிகிட்டு வர்ரதை நினைச்சாதான் வருத்தமா இருக்கு!

இதுக்கெல்லாம் யார் காரணம்னு நீங்க நினைக்குறீங்க?

விளையாட்டு வீரர்களை நான் நிச்சயம் குறை சொல்ல மாட்டேன். அவங்க மேலே நான் எப்பவும் பழி சொல்ல மாட்டேன். அவங்களை தயார் பண்ற ஆட்கள் மேலதான் குறையிருக்கு. விளையாட்டைக் கத்துத் தரும்போதே விதிகளுக்கு அடங்கி விளையாடுற பண்பாட்டையும், கத்துத் தரணும். நடுவர்களுக்கு மரியாதை தந்து அவங்க வார்த்தைகளுக்குக் கட்டுப்படுற கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கத்துத்தரணும்.

ஒரு போட்டியில் தோத்துப் போயிட்டா அதனால் குடியே மூழ்கிப்போயிடாது. தோற்குறது அவமானம் இல்லே... அது ஒரு அறிவான அனுபவம் என்குற நோக்கத்தை அவங்களுக்கு சொல்லித்தரணும். எதிர்த்து ஆடுறவங்க தப்பாவே நடந்தாலும் ஆட்டத்தை நடத்துறவங்க அநியாயமா முடிவு சொன்னாலும், நம்முடைய கடமை விளையாட்டு விதிக்கு மதிப்பு கொடுத்து, அதுக்கு பெருமை சேர்க்கணுங்கற பெருந்தன்மையை கத்துதரணும்.

நீங்க சொல்றப்ப கேட்க நல்லா இருக்குது. ஆனா அதெல்லாம் நடைமுறையில் இல்லேங்குறப்போது மனசுக்கு கஷ்டமா இருக்குதே—குணசேகர் தன்பேச்சை ஆரம்பித்தார்.

நூற்றுக்கு நூறு இப்படி நடக்குதுன்னு நான் சொல்ல மாட்டேன். ஆனா அங்கே அடிக்கடி ஒன்னுரெண்டு நடக்குது, எல்லாமே இப்படித்தான் இருக்குமோ என்கிற எண்ணத்தைப் பொதுமக்களிடையே உண்டாக்கி விடுறது. என்ன செய்யறது ?

இதுக்கு ஒரே வழிதான் இருக்கு. விளையாட்டுப் பயிற்சியாளரா வர்றவங்க பாருங்க. அவங்க இந்த இலட்சியப் பிடிப்போட இருந்தாங்கன்னா இப்படிப்பட்டப் பிரச்சினைகள் பிறக்காமலே போயிடும் எனக்குத் தெரிஞ்சு, பலர் இருக்குருங்க. ஆனா எப்படி அவங்க பேர்களை சொல்றதுன்னுதான் தெரியலே ?

எது எப்படி இருந்தாலும், நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். நான் என இலட்சியக் கனவா இதை எடுத்துக்கப் போறேன். நானே மூன்று இளம் வீரர்களைத் தேர்ந்தெடுத்து, அவங்களுக்கு என் செலவிலேயே அத்தனை வசதிகளையும் செய்து தரப்போறேன்.

இப்படித்தான் விளையாட்டு வீரர்கள் இருக்கனும்ங்கற துக்கு ஒரு உதாரணமாக வளர்க்கப்போறேன், உருவாக்கப்

போன்ற அகில உலக அளவில் அவர்களை உயர்த்தப் போறேன். எத்தனை லட்சம் செலவானாலும் பரவாயில்லை. என்னுடைய லட்சியம்தான் எனக்கு லட்சியம் என்று குணசேகர் உணர்ச்சி வசப்பட்டு பேசினார்.

இன்பநாதன் மிகவும் சாவதானமாக குணசேகர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். குணசேகரின் இலட்சியம் அவருக்கு பிடித்திருந்தது. ஆனால், அது எப்படி முடியும் எங்குபோய் முடியும் என்பது போன்ற கேள்விக்குறியில் அவரது புருவங்கள் பலமுறை ஏறி இறங்கிக் கொண்டிருந்தன.

தெருப்பாற்றிலே மயிர்ப்பாலம் கட்டி வைத்தால் எப்படி இருக்கும்? உச்சி வெயில் வேளையில் பாறையின் மீது வெண்ணெய் குவியலைக் கொட்டி வைத்தால் எப்படி இருக்கும்?

குணசேகர் மேற்கொள்ளும் காரியம் இப்படித்தான் ஆகுமோ—இன்பநாதன் தன்னுடைய மனதுக்குள்ளே பேசிக் கொண்டார்.

இன்பநாதன்? நீங்க எனக்கு மூனுபேரை தேர்ந்தெடுத்து தாரீங்க—பிறகு நான் பார்த்துக்குறேன். வாங்க போகலாம். என்று குணசேகர் எழுந்தார்.

பேசிப் பேசி பொழுதைப் போக்கிய இன்பநாதன் தலையிலே ஒரு பொறுப்பு நெருப்பாக வந்து விழுந்தது. குணசேகரோ குதூகலமாக நின்று கொண்டிருந்தார்.

# 10. அனுபவங்கள் அலறுகின்றன !

'மூன்று பேர்கள் எனக்கு வேண்டும். என் இலட்சியம் அவர்களை சிறந்த விளையாட்டு வீரர்களாக உயர்த்தி, இந்த நாட்டுக்குப் பெருமை தேடித்தரனும்' என்று குணசேகர் கேட்டுக் கொண்டார். இன்பநாதனும் சரியென்று புறப்பட்டுப் போனார்.

ஆனால், இன்பநாதன் எதிர்பார்த்தது போல். மூன்று வீரர்களைத் தேடுவது அவ்வளவு எளிதான செயலாக தோன்றவில்லை. எங்கே போய் தேடுவது? யாரைப் பிடிப்பது? எப்படிச் சொல்லி அவர்களை ஈடுபடுத்துவது? பின் விளைவுகள் எப்படி இருக்கும்? என்றெல்லாம் இன்பநாதன் எண்ணி எண்ணிக் குழப்பத்தில் ஆழ்ந்து போனார்.

தனியாகப் போனால்தானே இத்தனை தர்க்கமும் தயக்கமும் உண்டாகின்றன! இருவராகப் போனால், இடர்பாடு எதுவும் தோன்றாது என எண்ணி, குணசேகரையும் கூடவே அழைத்துக் கொண்டார் இன்பநாதன்.

வீரர்கள் தேடும்படலம் வெகுவேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒருநாள் மாலை இருவரும் ஒரு விளையாட்டுப் போட்டியைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தார்கள். இன்பநாதனுக்குத் தெரிந்த ஒருவர் பரபரப்புடன் வந்து கொண்டிருந்தார்.

என்னப்பா லோகு! ஏன் இப்படி வருகிருய்? ஏதோ ஒரு கூட்டத்துக்குப் போறேன்னு போனியே! என்ன ஆச்சு!

உங்களுக்குத்தான் தெரியுமே! எங்க நடக்குதுன்னு அசோசியேஷன்ல பொதுக்குழு கூட்டம். அதுல புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கனும்னு இருந்தது. ஆனு, தனிப்பட்ட முறையில இருந்த விரோதத்தை கூட்டத்துல காட்டிட்டாங்க... நாற்காலி மேஜை உடைஞ்சது தெருச் சண்டை போடுற மாதிரி, திட்டிக் கொண்டது. போலீஸ் ஸ்டேஷன் வரை போய் புகார் செஞ்சது... நாலாந்தரத்தில் பேசிக் கொண்டது—இதுதான் கூட்டத்துல கனஜோரா நடந்தது... எனக்குப் பிடிக்காமதான் வீட்டுக்குப் போகிறேன்.

சரி! நீ போய்வா! நாளைக்குப் பேசிக்கலாம்... பார்த்தீங்களா! விளையாட்டுத்துறை படுறபாட்டை... ஸ்போர்ட்ஸ் மேன்ஷிப், ஸ்போர்ட்ஸ்மேன் ஸ்பிரிட்ங்கறதுல்லாம் பேசுறதுக்கு தான் நல்லா இருக்குது... நடைமுறையில் அது தினம் தினம் செத்து செத்துப் பொழைக்குது.

பதவிதான் பெரிசுன்னு நினைக்குற காலமா போச்சு... தனக்குப் பிடிக்காதவனை தரைமட்டமா ஆக்குறதுதான் இப்ப ஸ்பிரிட்டா இருக்குது. அதுதான் லட்சியமா வளருது!

ஒரு இடத்துல போய் கூட்டம் போடுருங்க... அங்கே கலாட்டா பண்ணிகிட்டு சண்டை போட்டா, மத்தவங்க விளையாட்டைபற்றி என்ன நினைப்பாங்கங்கற விவஸ்தைகூட இல்லாமல் போச்சுங்க...

அதனுல்தான் சொல்றேன், நாம இந்த விளையாட்டுத் துறையை விட்டுட்டு விலகிப் போயிடுவோம். வேற ஏதாவது புதிசா பண்ணுவோம்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, குணசேகரின் மனதை மாற்றிவிட வேண்டும் என்பதுதான் இன்பநாதனின் நோக்கம். குணசேகரா குழம்புவார்? மனம் மாறுவார்! குணசேகர் கொள்கைப் பிடிப்போடு நின்றார்.

அற்பத்தனமான ஆட்கள் எந்த துறையில இல்லே! பண்பாட்டை வளர்க்க வேண்டிய துறையில வந்து, காட்டு மிராண்டித்தனமா சிலபேர் நடத்துக்கறாங்கன்னு சொன்னா, அது தனிப்பட்டவங்களோட கயமைத்தனத்தைத்தான் காட்டுமே ஒழிய, விளையாட்டுத்துறை மோசம்னு எப்படி சொல்ல முடியும் ?

அவனவன் செய்யுற அட்டூழியத்துக்கு, நிச்சயம் ஒரு நாளைக்கு தண்டனைய அனுபவிப்பான். காலித்தனம் பண்ணுன்னு தூண்டிவிடறவன், அதே காலித்தனத்துல கஷ்டப்படுவான். தூண்டிவிடற துச்சாதனத்தனத்துக்கு இரண்டு பக்கமும் கூர்மை உண்டு. ஏவுற பக்கத்தையும் அது தாக்கும். ஏவிவிடும் ஆட்களையும் தாக்கும். இதை நீங்க மறந்துடக்கூடாதே இன்பநாதன் என்றார் குணசேகர்.

இந்த வார்த்தைகளை சரிதான் என்று இன்பநாதன் ஏற்றுக்கொண்டார்.

போகிற பாதையில் நாற்றம் எடுக்கிறது என்றால், பாதையை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, போய்ச் சேர வேண்டிய நோக்கத்தையே மாற்றிக் கொள்வது எந்த வழியில் பார்த்தாலும். அறிவுடைமை ஆகாது என்று பேசிக் கொண்டே சென்றார், குணசேகர்.

காலாற நடந்த பிறகு, காபி சாப்பிடலாமே என்று ஒரு ஓட்டலுக்குள் நுழைந்தார்கள்.

ஆ—5.

வாங்க வாங்க வரவேற்புக் குரல் கேட்டது. இவ்வள
சத்தம் போட்டு வரவேற்க ஓட்டலில் ஆள் அமர்த்தியிரு
கின்றார்களா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டே திருப்பி
பார்த்தார்கள் இருவரும். தயாளன் அங்கு அமர்ந்திருந்தா

விளையாட்டு உலகில் தயாளன் என்றால், தெரியாதவ
கள் இல்லை என்றே கூறலாம். விளையாட்டுத்துறை வள
வேண்டும் என்றால், இப்படி இப்படியெல்லாம் செய்தா
சிறக்கும் என்று பட்டியல் போட்டுத் திட்டம் தீட்டுவதி
வல்லவர். அதற்கேற்ற பொருளுதவி என்கிறபொழுது, அள்
அள்ளித் தந்த அருங்குண வள்ளலாகவும் திகழ்ந்தவர்.

காரியம் சிறப்பாக நடைபெற வேண்டும். அதற்கா
எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை என்பவர்
பரம்பரை பணக்காரர் அல்ல. அவர், உண்மையாக உழைத்
லட்சம் லட்சமாக சம்பாதிக்கும் தொழில் அதிபர்.

ஒரு குறிப்பிட்ட விளையாட்டுக்கு மாநில அளவில் தலை
ராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு ஆண்டில் மட்டும் ப
பத்தாயிரம் ரூபாய்கள் செலவழித்துப் போட்டிகள் நடத்திய
வர். இன்று அந்தப் பக்கமே போகக்கூடாது, என்
வைராக்கியத்துடன் இருப்பவர்.

தயாளன் இருவரையும் வரவேற்று, தனது இருபக்கத்
திலும் அமர்த்திக் கொண்டார். வழக்கமான பேச்சுபசாரங்கள்
நடந்தேறின. இன்பநாதன் தங்களது நோக்கத்தைக் கூறின
உடனே தயாளன், தனது இரண்டு கைகளையும் குவித்து
வைத்துக் கொண்டு வணக்கம் செய்தார்...

சுணு! உனக்கெதற்கு இந்த விஷப்பரீட்சை! விளை
யாட்டில் ஆர்வம் இருந்தால் நீ போய் விளையாடு...முடியா
விட்டால் விளையாட்டுப் போட்டியைப் போய்ப் பார். அதுவும்
முடியாவிட்டால், புத்தகத்தைப்படி...பேசாமல் பேசு... அதோடு

நின்றுவிடு...நெருப்பாற்றில் நீந்தப் போகிறேன் என்பது பேசுவதற்கு வீரமாக இருக்கும்... இறங்கும்போது கோரமாக போய் விடும்! உனக்கு ஏன் இந்த வம்பு?

ஏன் இப்படி பேசுறீங்க....நீங்க நடத்தாத போட்டியா? நீங்க பார்க்காத ஆட்களா! பெருத அனுபவங்களா? இப்படி வெறுத்துப் பேசுற அளவுக்கு என்ன நடந்துச்சு? ஏன் இப்படி மாறிப் போயிட்டிங்க?... குணசேகர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

என்னுடைய ஆணவம்தான் காரணம். இந்தக் கசப்பான அனுபவம் என்னோட அறியாமையினுல் கூட ஏற்பட்டிருக்க லாம். இல்லேன்னு, நான் சேர்த்துக் கொண்ட ஆட்களினுலே யும் வந்திருக்கலாம். மொத்தத்துல, நான் கொடுத்தது பணம் அடைஞ்சது அவமானம். நான் வேற எதையும் உங்களிடம் சொல்லத் தயாரில்லே என்ருர் தயாளன்.

அப்படிச் சொன்ன எப்படிங்க? நான் ஒரு லட்சியத் தோட இதுல ஈடுபடுறேன். நீங்க எனக்கு முன்னேடியா இருந்திருக்குறீங்க. நாங்களே உங்களைப் பார்க்க வரனும்னு நினைச்சுக்கிட்டிருந்தோம். கும்பிடப்போன தெய்வம் கூப் பிட்டது மாதிரி இருக்குது.

ஒரு காரியம்னு நல்லதும் இருக்கும்! கெட்டதும் இருக்கும். இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்துட்டு, அப்புறம் முடிவு எடுக்குறது தானே புத்திசாலித்தனம்!

ஆமா குணசேகர்! நீங்க சொல்றது நியாயம் தான். நல்லதுங்கறகாரியம் பணத்தை செலவு பண்றது. கெட்டதுங் கறமுடிவு நமக்கு வர்ற அவமானம். நான் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்து போட்டியை நடத்தச் சொன்னேன். கண்டவன் நின்னவன் எல்லாம் தொண்டைக்கு மேல நிக்குற வரைக்குத் தின்னே தொலைச்சானுங்க...எங்கேயோ ஆற்றுல

அன்னூற தண்ணி மாதிரி என் பணத்தை நினைச்சானுங்க... ஒரு பைசா செலவுன்னு பத்து பைசான்னு கணக்கு எழுதுறானுங்க...

எனக்கு எல்லாம் தெரிஞ்சாலும் ஏன்னு கேட்க முடியலே! செய்யுற தப்பைக் கண்டிக்க முடியலே... அப்படி ஒரு கூட்டமே இந்த பீல்டுல இருக்கானுங்க... கடைசியில், கொடுத்த பணத்துக்கு கணக்கு குடுன்னு கேட்டா... கலாட்டா... ஏச்சுபேச்சு !

பணம் வாங்குற வரைக்கும்தான் மதிப்பு. கௌரவம் விசுவாசம் எல்லாம், கைக்கு பணம் வந்துட்டா எல்லாமே மாறிப்போயிடும் !

புரியாமல் உட்கார்ந்திருந்தார்கள் இன்பநாதனும் குண சேகரும். தயாளனோ தணல்மேல் உட்கார்ந்திருப்பதுபோல இருக்கையில் அமர்ந்த வண்ணம் பேச்சைத் தொடர்ந்தார்.

# 11. ஆசைக்கோளாறு

தயாளன் தன்னை மறந்து பேசிக் கொண்டிருந்தார், குணசேகரும் இன்பநாதனும் குறுக்கே எதுவும் பேசாமல் குறுகுறுக்கும் நெஞ்சத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

விளையாட்டு என்பது தானே வளர்ந்திடுற ஒரு துறை இல்லே. ஆர்வமா விளையாடுற ஆட்டக்காரர்களால் மட்டும் அது வளர்ந்தடாது. ஆர்வத்தோட பணம் செலவு செய்து நடத்துற பணக்காரங்க உதவியினுல்தான் வளரும். அதை காசு குடுத்தும், இலவசமாகவும், பார்க்க வர்ர பொது மக்களினுலும் தான் நல்லா வளரும்.

இது ஒலிம்பிக் பந்தயத்தை ஆரம்பிச்ச கிரேக்க நாட்டில் இருந்து, அவங்க காலத்துலயிருந்து தொடர்ந்து வர்ர தர்மகாரியம் தான். அந்த மாதிரி தான் நம்ம நாட்டில யும், விரல் விட்டு எண்ணக் கூடிய பெரிய மனிதர்கள் பலர் உதவி செய்துட்டு வர்ராங்க.

'அந்த விரல் விட்டு எண்ணிக்கையிடும் நபர்களில் நீங் களும் ஒருவர்னு எங்களுக்குத் தெரியும்' என்றூர் இன்பநாதன்.

உண்மை தான் நாதன்! அந்தப் பேரையும் புகழையும் சம்பாதிக்கனும்னு நான் இந்தத் துறைக்கு வரலே. நானே

பல விளையாட்டுக்களில் சின்ன வயசுல கெட்டிக்காரனா இருந்ததுனால வந்த ஆசை தான் இது.

நான் விளையாட்டுக்காக நிறைய செலவு பண்ணுனேன், ஒரே வருஷத்துல பல போட்டிகளை நடத்துனேன். கெட்டிக்காரனா உள்ளவங்களை கொண்டு வந்து என் கம்பனியில வேலை போட்டுக் கொடுத்தேன். இன்னும் கொஞ்சம் ஓவரா போயி, மத்த முதலாளிங்க கிட்டேயும் கெஞ்சிக் கூத்தாடி வேலை வாங்கிக் கொடுத்தேன்,

போட்டி நடத்தனுங்கறதுக்காக செஞ்ச செலவை என்னால நிறுத்த முடியலே! அப்பப்போ போய் பார்த்தாலே அதிசயம் தான். அப்படி வேலை அதிகம். கடைசியில் என்ன ஆச்சு தெரியுமா? என்னை பைத்தியக்காரன், ஏமாளி இளிச்ச வாயன், பணத்தை வச்சுக் காப்பாத்தத் தெரியாத மடையன்னு-பல பேர் பல மாதிரி பல சந்தர்ப்பத்துல பேச ஆரம்பிச்சாங்க... நான் அதைப் பத்தியும் கவலைப்படலே.

இந்த நேரத்துல தான், என் பிசினஸ் கொஞ்சம் டல்லா போக ஆரம்பிச்சது. என் கம்பெனி நிர்வாகத்துக்கே சம்பளம் தரமுடியாத சூழ்நிலை வந்தது... இதைப்பார்த்துக்கிட்டிருந்த, என்னோட கூட இருந்தே தின்னு கொழுத்தப்பசங்க, என்னை விட்டு விலக ஆரம்பிச்சானுங்க... மாநில அளவில் இருந்த என் தலைமையை கூட மாத்தி விடனும்னு முடிவு கட்டி னானுங்க...

பொதுக்குழு கூட்டத்துல தகராறு பண்ணுனானுங்க, நான் பார்த்தேன். உடும்பு புடிக்கப் போனவன் உடும்பு கையைவிட்டா போதும்னு துடிச்ச மாதிரி, நானும் இந்த தலைமையை விட்டா போதும்னு ஓடி வந்துட்டேன்.

அது எனக்கு நல்லகாலம் தான். அந்தத் தலைமையை விட்டுட்டேன். அதுலயிருந்து 'தான் தோன்றித்தனமான'

கூட்டம் என்னை விட்டு ஒழிஞ்சது. என் நிலைமையும் சரியா போயிடுச்சு... பழைய வியாபாரம் நடக்குது பணம் நிறைய வந்தது. தப்பிச்சுகிட்டேன்.

தயாளன் பெருமூச்சு விட்டார். அது அவரது விடுதலை' பெற்ற இன்பத்தின் எதிரொலியாகத் தெரிந்தது.

'நன்றி கெட்ட கூட்டத்திலிருந்து நல்லதோர் விடுதலை' என்று தயாளன் தன் பேச்சை முடித்தார்.

'அளவோடு தந்திருந்தா, அவசரத்துக்கு மட்டும் உதவியிருந்தா, அப்பப்ப என்ன நடக்குதுன்னு கேட்டுத் தடுத்து வச்சிருந்தா, உங்களுக்கு இந்த உபத்திரவம், அவமானம் நேர்ந்திருக்காதுங்கறது என் கணிப்பு. நீங்க என்ன சொல்றீங்க!' குணசேகர் நேரடியாகக் கேட்டார்.

உண்மை தான், நான் ஏமாறுவேன்னு தெரிஞ்சு தானே ஏமாத்துறவங்க வந்தாங்க...நான் கொஞ்சம் விழிப்பா இருந்திருந்தா இந்த இழப்பும், பழிப்பும் வந்திருக்காதே; தப்பு என் மேலதான் என்ருர் தயாளன்.

நீங்க தவறை உங்க மேல போட்டு விட்டதுனுலதான். சரியா எடுத்துகிட்டிங்க... அதனுலதான் நிம்மதியா இருக்கிறீங்க என்ருர், இன்பநாதன்.

என்னை விடக் கெட்டிக்காரர் இந்த நண்பர் என்று தன் அருகிலுள்ள ஒருவரை அறிமுகப்படுத்தி வைத்தார் தயாளன் அவர்கள் வியப்புடன் அவரைப்பார்த்தார்கள். 'என் பெயர் சிந்தாமணி' என்று சிரித்துக் கொண்டே வணக்கம் செய்தார் அவர்.

ஐம்பது வயதிருக்கும் அவருக்கு. ஆனுல் நாற்பது மதிக்கத் தக்க உடல் அமைப்பு, சிரித்த முகம், சிவந்த தேகம், மடிப்பு கலையாத ஆடைகள், சென்ட் வீச்சு அவரிடமிருந்து இதமாக வந்து கொண்டிருந்தது, பிறவி பணக்காரர் என்பது அவரைப் பார்த்த உடனே புரிந்தது.

குணசேகர் தன் பெயரைக் கூறியவாறு கை குலுக்கினா. இன்பநாதன் வணக்கம் செய்தவாறு அறிமுகம் செய்து கொண்டார்.

இவர் பிரபல வியாபாரி என்று தான் கேள்விப்பட்டிருக்கிறேன். விளையாட்டுத்துறைக்கு எப்பொழுது வந்தார்? எப்படி கெட்டிக்காரர் என்று பெயரெடுத்தார் என்பது தான் எனக்குப் புரியவில்லை என்றார் குணசேகர்.

நான் சொல்வது இருபது வருடத்திற்கு முந்தைய கதை. அப்ப நானும் விளையாட்டுல கெட்டிக்கார வாலிபனுதான் இருந்தேன். பணக்காரங்க எல்லாம் நல்லா விளையாடினு தான், தான் வச்சிருக்குற பணத்தை நல்லா அனுபவிக்க முடியும். இல்லேன்னா, மருந்து சாப்பிட்டுகிட்டு பட்டினியா கிடக்க, மத்தவங்க அவங்க பணத்தை அனுபவிப்பாங்கங்கு கொள்கையை நான் முழு மனசா ஆதரிக்குறவன். அதனுல தான் நானும் அதிகமா விளையாண்டேன்.

என்னால இனிமே போட்டியில ஆட முடியாதுங்கற நிலைமை வந்தப்ப நான், என் பேருல ஒரு கழகத்தை நிறுவி அதுக்காக வெளியில இருந்து விளையாட்டு வீரர்களைக் கூட்டி வந்து, நானே எல்லா செலவையும் ஏத்துகிட்டு உருவாக்கு னேன். அப்பதான் எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. என்று சிந்தாமணி சிரித்தபடி நிறுத்திக் கொண்டார்.

இன்னொரு காபி சாப்பிட லாமே என்று ஆர்டர் கொடுத்தார் தயாளன். பேச்சு சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருந்தது. நேரம் போவதும் தெரியவில்லை. குணசேகருக்கோ ஒரு புதுமையான அனுபவத்தைக் கேட்கப் போகிறோம் என்ற படபடப்பு இருந்தது. இன்பநாதனுக்கும் அது புதுமையாகத் தான் இருக்கும் என்பது போல உணர்வு வந்தது.

சிந்தாமணி தன் அனுபவத்தை கூற முற்பட்டார்.

எனது விளையாட்டுக் குழுவிற்கு பத்துபேர்கள் தேவை என்பதால், நல்ல சிறந்த வீரர்களைத் தேடிப் பறப்பட்டேன்.

ஆண்களுக்கு ஒரு குழு, பெண்களுக்கு ஒரு குழு, என்று இரண்டு குழுக்களை நான் வைத்திருந்தேன்.

பெண்களைத் தேர்ந்தெடுப்பதில் எனக்கு சிரமம் இல்லை. கோடீஸ்வரக் குடும்பத்தில் பிறந்த ஒரு பெண், அவளையே நான் குழுத்தலைவியாகப் போட்டிருந்தேன். அவளுக்கு குழுவை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன். அதனால், எல்லாம் சுமுகமாகவே நடைபெற்றது

ஆண்கள் குழுவில் இரண்டு பேர் தேவை என்றதால், நான் பல போட்டிகளையும் பார்த்து அதிலிருந்து அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று நானும் தேடி அலைந்தேன்.

ஒரு கிராம விளையாட்டுப் போட்டியில், ஒரு இளைஞன் நன்றாக விளையாடியதை பார்த்து, அவனை என் குழுவில் சேர்த்துக்கனும்னு முடிவு பண்ணினேன் அவனோ படிக்காதவன். வேலை செஞ்சாதான் ஜீவனம் அப்படி ஒரு நிலைமை அவனுக்கு விறகு வெட்டுறது, மீன் கூடையை சைக்கிள்ல வாடகைக்கு ஏத்திகிட்டு போய் அடுத்த ஊரில் தர்ரதுதான் அவன் வேலை. அதுக்கு வர்ர கூலி வயித்துக்கே போதாது.

இங்கே கூட்டிகிட்டு வந்து, நல்ல வேலையா பார்த்து கொடுத்துட்டு, ஆட்டத்துல நல்ல பயிற்சி கொடுத்தோம். இங்கிலீஷ் பேசுற அளவுக்கும் அவனுக்கு, டியூஷன் வச்சோம். விளையாட்டுல தேர்ச்சி வரவர, அவன் பேச்சிலயும் போக்குலேயும் பல மாறுதல் வந்தது. ஒரு சில சமயத்துல ஏண்டா இவனை பார்த்தோம்னு கூட நினைச்சி வருத்தப் படுவேன். அவனுக்கு ஆகுற இவ்வளவு செலவும் நானே ஏத்துகிட்டிருந்தேன்.

ஒரு வருஷத்தை தாக்குபுடிச்சுட்டேன். ஆனா ஒரு சமயம் அந்த ரயில் வண்டியில் நடந்த நிகழ்ச்சி அதுதான் என்னையே மாத்திடுச்சு. அவ்வளவு கஷ்டமா போயிடுச்சு!

# 12. அந்த எதிர்காலம்

அந்த ஸ்டேனுக்கு ரயில் வந்த நேரம் காலை 8 மணி இருக்கும். 'பத்து நிமிஷம் வண்டி நிற்கும். அதுக்குள்ளே காலை டிபனை முடிச்சுக்கலாம்னு' முடிவு பண்ணுறோம்.

எல்லோரும் வண்டியை விட்டு இறங்கி வந்துட்டா, யாரும் சரியா நேரத்துக்கு சாப்பிட முடியாதுன்னு சொல்லிட்டு, நானும் என் மேனேஜருமே டிபனை வாங்கிக் கொண்டு போய் ஒவ்வொருத்தருக்கா கொடுத்துட்டு வந்தோம்.

எல்லோருக்கும் கொடுத்தாச்சு. வண்டியும் புறப் பட்டாச்சு. நானும் அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு வண்டிக்கு வந்து, அந்த புதிய ஆட்டக்காரர்கிட்டே பேசலாம்னு போனனேன்.

அவனே சாப்பிடாம உட்கார்ந்திருந்தான், ஏன்னு பக்கத்துல கேட்டேன். கையிலே எடுத்து சாப்பிடுறதுக்கு என்னவோ மாதிரி இருந்ததாம். ஸ்பூன் இல்லேன்னு அவர் சாப்பிடலேன்னு சொன்னுங்க.

பத்துபேரு இருக்கும் போது, தன்னை பெரிய அந்தஸ்து உள்ளவனுன்னு காட்டிக்கறதுக்காக அவன் பண்ணுன அந்த 'ஜபர்தஸ்தை' என்னால தாங்கிக்க முடியுலே...... என்னால மன்னிக்கவும் முடியலே !

பெரிய கோடீஸ்வரன் பொண்ணு, கிடைச்சதை சாப்பிட்டு, மத்தவங்க கூட சகஜமா பழகிக்கிட்டு இருந்ததையும் பார்த்தேன். சோத்துக்கே வழியில்லாம கிடந்தவனை கொண்டு வந்து, சகல உதவியும், செஞ்சு நானே வேலைக்காரனாக இருந்து உதவி செஞ்சா, டிபன் நல்லாயில்லே நான் கையாலே சாப்பிடுறதில்லே, ஸ்பூன் இருந்தாதான் சாப்பிடுவேன்னு அடம் புடிச்சது...... எனக்கு எப்படியோ இருந்தது.

அவ்வளவுதான். நான் அப்பவே முடிவு பண்ணிட்டேன். என் ஆசைக்கு கிடைச்ச அவமானம்... நமக்கு விளையாட்டு மேல இருந்த விருப்பத்துல தானே. பணத்தையும் செலவு பண்ணிட்டு, இப்படி அவமானப்பட வேண்டியதா போச்சு. அப்பவே முடிவு பண்ணிட்டேன். குழுவைக் கலைச்சிட்டேன்... யாரு எப்படிபோனா எனக்கென்ன. இந்த விளையாட்டுக்காக வீணா ஏன் மனசை புண்படுத்திக்கணும்னு ஒதுங்கிட்டேன்.

சிந்தாமணி பேசி ஓய்ந்ததும், அதிவேக ரயில் ஓடி வந்து பிளாட்பாரத்தில் நின்றது போல் இருந்தது. அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மௌன கீதங்களாக அவை ஒலித்துக் கொண்டிருந்தன.

தயாளனிடமும் சிந்தாமணியிடமும் விடை பெற்றுக் கொண்டு, குணசேகரும் இன்பநாதனும் புறப்பட்டனர்.

இந்த சம்பங்களைக் கேட்ட பிறகாவது, குணசேகர் தன் கருத்தை மாற்றிக் கொள்வார். கொள்கையை உதறி விடுவார் என்று இன்பநாதன் எதிர்பார்த்தார்.

குளத்திலே உள்ள பாசிகளை ஒதுக்கித் தள்ளத்தள்ள மீண்டும் இருந்த இடத்திற்கே வருவது போலஞ்சுவற்றில் பட்டெழுந்து, எதிர்த்தாற் போல் போன வேகத்தில் வந்து சேர்வது போல, குணசேகரும், தான் முன்பு கொண்டிருந்த கருத்திற்கே திரும்பி வந்து விட்டார்.

எப்படியும் என் மனசுல பட்டதை நான் செய்து தான் பார்ப்பேன். அடுத்தவங்க அனுபவங்களையெல்லாம் கேட்டு தெரிஞ்சிகிட்டேன். அதுமாதிரி நடக்காம நான் பார்த்துகிறேன்." இதுக்கு போய் அலட்டிக்கலாமா' என்று சிரித்துக் கொண்டே பேசினார் குணசேகர்.

மழை விட்டும் தூவாணம் விடவில்லை. இது அடைமழை யாயிருந்தாலும், செடி மழையாயிருந்தாலும், நான் ஒதுங்கி நிற்க முடியாது. நினைஞ்சாவது நினைச்ச இடத்துக்குப் போய் தான் ஆகவேண்டியிருக்கு என்று தனக்குள்ளே பேசிக் கொண்டார் இன்பநாதன்.

மீண்டும் தங்களது ஆள் தேடும் படலத்தை தொடங்கினார்கள்!

பணக்காரர்கள் காட்டுகின்ற பாசத்தினால்தான், காலங் காலமாக விளையாட்டுத் துறை வளர்ந்து வருகிறது. அன்று அரசர்களின் அன்புப் பிடியிலே ஆலோலம் பாடிய விளையாட்டுக்கள் பல, கடைநிலை மக்களுக்கும் அவை வந்து சேர நேர்ந்த போது, வளர்வதற்குரிய சூழ்நிலையை வசதியுள்ள செல்வந்தர்களால் தான் செய்து தர முடிந்தது.

தமது கதாநாயகன் குணசேகரும், தனக்குள்ள பெரும் பண வசதியைக் கொண்டு, பிரபல வீரர்களை உருவாக்கிக் காட்டி விட வேண்டும். பிறந்த பொன்னாட்டுக்குப் பெரும் புகழ் சேர்த்துத் தந்திட வேண்டும் என்று கங்கணம்கட்டிக் கொண்டார்.

கரை மோதிக் கிடக்கின்ற அவரது கட்டுக்கடங்காத. இலட்சிய வெள்ளத்தின் வேகம், இனி போகத் தான் தெரியும் எங்குமோதுமோ? எப்படிப் பாயுமோ? யார் கண்டார்?

பல்லவன் பஸ் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. ஆட்டோ ரிக்ஷா ஒன்று தலைகுப்புற விழப்போகும் வேகத்தில் போய்க் கொண்டிருந்தது லாரி ஒன்று விட்ட கரும்புகை. அவர்கள் இருவரையும் மறைத்து விட்டிருந்தது.

இதற்கிடையிலே சைக்கிள் மணி ஓசை ஒன்று படபட வென்று கேட்டது. விடாது அடித்த மணிக்காக, இருவரும் பாதை ஓரத்திற்கே போய் நின்று கொண்டார்கள். இருந் தாலும் சைக்கிள் வந்து அவர்கள் அருகிலே நின்றது. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

இரு கை கூப்பி வணக்கம் செய்தார் சைக்கிள்காரர். இன்பநாதனுக்குத் திகைப்பு. வாப்பா வடிவேல்! என்ன இப்படி ஆளை பயமுறுத்திட்டே என்றார் இன்பநாதன். வடி வேலு வாய்வலிப்பது போல பெரிதாகத் தெரிவது போல வாய் பிளந்து சிரித்தார்.

ஐயா, ஓங்க வீட்டுக்குப் போயிருந்தேன். நீங்க சார் வீட்டுக்குப் போனதாக சொன்னாங்க. அங்கே போய் பார்த்தேன். நீங்க வாக்கிங் போனதா சொன்னாங்க... நான் ஓங்களை வந்து சைக்கிள்ளில பிடிச்சிட்டேன். என்று சொல்லி விட்டுத் தானே சிரித்துக்கொண்டார் வடிவேலு. மற்றவர்கள் சிரிக்காததால், மீண்டும் அவரே பேச ஆரம்பித்தார்.

நீங்க சொன்னபடியே அலைஞ்சு திரிஞ்சி மூணு பேரை தயார் பண்ணி வச்சிருக்குறேன். ரொம்ப நல்ல பசங்க... தங்கக் கம்பிங்க விளையாட்டுன்னா உயிரையே விட்டுடு வாங்க... காலேஜில தான் படிக்குறாங்க... நீங்க எப்ப

சொல்றீங்களோ, அப்பவே கூட்டிக்கிட்டு வந்துடுறேனுங்க என்றார் வடிவேல்.

வடிவேலுவோ விளையாட்டுத்துறை பற்றி அதிகம் தெரிந்தவரில்லை. ஆனால் எல்லாம் தெரிந்தவர் போல் பேசுவதில் வல்லவர். எதிரிகளைக் கூட தான் பேச்சு நயத்தினால் வசப்படுத்தி, வயப்படுத்தி விடுவபர். கடைசிவரை காசு விஷயத்தில் குறியாக இருப்பவர். அதாவது லாபக் கணக்கு போடுவதில் மிகவும் கைதேர்ந்தவர்.

யார் யார் விளையாட்டுக்களில் ஆர்வம் உள்ளவராக இருக்கின்றாரோ, அவர்களையெல்லாம் அணுகிப் பேசி, அனுதாபத்தை முதலில் சம்பாதித்துக் கொள்ளுபவர் வலிந்து போய் உதவி செய்வதுபோல் போக்குக்காட்டி, அதற்குள்ளாக நல்ல வருமானத்தையும் தேடிக் கொள்வார்.

கொடுப்பவர்களும், வடிவேலுக்குக் கொடுத்தால் என்ன என்ற அளவுக்கு முழுமையாக நம்பிவிடுவார்கள் விளையாட்டு வீரர்களைப் பற்றிய முழு விவரமும், குடும்ப வரலாறும் கூட வடிவேலுக்கு அத்துப்படிதான்.

மூவரும் எந்த விளையாட்டில் கெட்டிக்காரர்கள் என்று கேட்டார் குணசேகர்.

மூன்று பேரும் ஓட்டப்பந்தயத்தில்தான் என்றார் வடிவேலு.

ஆமாம், குழு விளையாட்டு என்றால், பலரோடு சேர்ந்து பழக வாய்ப்புண்டு. அதனால் குறிக்கோள் கெட்டுப் போகலாம், இலட்சியம் பாழாகவும் வாய்ப்புண்டு. தனியாக இருந்து பழகினால் தான், முன்னேற்றம் பற்றித் தெரிந்து கொள்ளவும் முடியும். நமக்கும் இன்னது செய்து கொண்டிருக்கிறோம் என்பதும் புரியும் என்றார் குணசேகர்.

நல்லது வடிவேலு. நாளைக்கு மாலை 4 மணிக்கு நாங் ரெண்டுபேரும் வீட்டில் காத்திட்டிருக்கோம். அந்த மூனு பேரையும் அழைச்சுகிட்டு வந்துருங்க. மத்ததெல்லாம் நாங்க பேசிக்குறோம் என்றார் இன்பநாதன்.

கட்டாயமா அழைச்சுகிட்டு வந்துடுறேங்க என்று வடிவேல் பணிவாக வணங்கிவிட்டு, லாவகமாக ஒதுங்கி, சைக்கிளில் ஏறி பறந்தே போனார்.

விளையாட்டுத் துறையில் இப்படிப்பட்ட ஆட்கள் நிறைய இருக்காங்க. அவங்களால உருப்படியா எதுவும் செ முடியாது. ஆனா, எல்லாரையும் இணைக்குற ஆட்களா உதவுறவங்க இவங்கதான். இவங்ககிட்ட பேசும் போது, ரொம்ப ஜாக்ரதையா பேசனும். ஏன்னா, எல்லார்கிட்டயும் போய் பேசுறதுனால, தங்களை அறியாமலேயே எல்லாத்தை யும் உளறி விடுறதுக்கும் நிறைய வாய்ப்புண்டு.

இன்பநாதன் இப்படி ஏற்கனவே அனுபவப்பட்டவ ராயிற்றே! குணசேகருக்கு நிறைய யோசனைகளை அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

குணசேகரா, வரப்போகின்ற மூன்று வீரர்களின் முகங் களை, கற்பனை உருவகமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். தான் எதிர்பார்த்த ஒளிமயமான, புகழ்வாய்ந்த எதிர் லத்தை தன் மனக்கண்ணால் பார்த்து மகிழ்ந்து காண்டிருந்தார்!

அவரது இன்ப நினைவுகளை கலைக்க விரும்பாமல் இன்ப தன் குணசேகரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் காண்டிருந்தார்!

நாளை வரும் என்று விரும்புகிறோம்! அந்த நாளை மக்கு வராலாமா போய்விடும்?

# 13. கைக்கு வந்த கனிகள்

'அந்த நாளும் வந்திடாதோ' என்று ஆயாசப்படுவதும் அதற்காக ஆயத்தமாவதும் மனித இயற்கை தான்!

எதிர்பார்த்த நாளுக்காக மனம் ஏங்கித்தான் கிடக்கும் வராமல் போகுமா? என்று பேதைமனம் நினைப்பதில்லை. வரு நாளானது இன்பம் பெறும் நாளாகவும் அமையலாம். துன்ப தரும் நாளாக மாறினாலும் மாறலாமல்லவா!

எதிர்காலத்தைக்கற்பனையாக எண்ணி இன்பமடைவதி மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள் தான். இதில் படி தவர்கள், பாமரர்கள், அறிஞர்கள், அரசர்கள், இளையோ கள் முதியோர்கள் என்கின்ற பாகுபாடே இல்லை. மனி இனமும் மனமும் அப்படித்தான்.

'நாளைக்கு வந்து விடுகிறேன்' என்று வடிவே சொன்னதுதான் தாமதம். அந்த நொடியிலிருந்து, வர போகின்ற தன் 'இலட்சிய வீரர்களின்' முகங்களை கற்பனை யில் காணமுயன்று முயன்று, இன்பப்பதைப்புக்கு ஆளாகி போனார். குணசேகர்.

ஆயிரம் கற்பனைகளுடன் குணசேகர் இருக்கையிலே அமர்ந்திருக்க, பாயும் வெள்ளம் போல அந்த அறையிலே நடை போட்டுக் கொண்டிருந்தார் இன்பநாதன். பலமுறை மறுத்த இந்த நிகழ்ச்சியானது; பகற்கனவாகப் போய்விடும் என்று பட்டவர்த்தனமாகப் பேசிய காரியம், இன்று தன் கண் முன்னே நிதர்சனமான உண்மையாக தெளியப்போவதைக் கண்டுதான் இன்பநாதன் நடந்தார் நடந்தார். தன் நடையைத் தொடர்ந்தார்.

நான்கு மணியைத் தாண்டி அரைமணி நேரம் கடந்து விட்டது. நேரம் போவதைக் குறித்து குணசேகர் நெருப்பில் அமர்ந்திருப்பதைப் போல நெளியலானார்.

சொன்ன நேரத்தில் யார் வருகிறார் இந்த நாட்டில்... நம்மவர்கள் தாமதமாக வரும் வழக்கத்தைக் குறிப்பிடவே, இது இந்தியப் பண்பாடு (Indian Punctuality) எனவே கேலியாகக் குறிப்பிடுகிறார்கள் போலும்.

வடிவேலும் ஒரு இந்தியன்தானே! சொன்ன நேரத்திற்கு வர அவருக்கு என்ன 'அந்நிய மோகமா' பிடித்திருக்கிறது!

சரியாக ஒருமணி நேரம் கழித்து வடிவேலு வந்தார். அவருடன் 'அதக' மூன்று பேர்களும் வந்திருந்தனர். மூவரையும் குணசேகர் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். வடிவேலுவின் அறிமுகங்கள் ஜோராகத் தொடங்கியது.

தன் அருகிலிருந்த மாணவனைக் காட்டி, இவர் முத்துசாமி, மாநிலக்கல்லூரியில் இரண்டாம் பி. ஏ, படிக்கிறார். கல்லூரிகளுக்கிடையே நடக்கும் போட்டிகளுக்கிடையே விரைவோட்டத்தில் இவர் பல முறை வென்றிருக்கிறார். கொஞ்சம் கவனமாகப் பயிற்சி செய்தால், மாநில அளவிலும், இந்திய அளவிலும் வெற்றிபெற வாய்ப்பிருக்கிறது என்றார் வடிவேலு.

குணசேகர் முத்துசாமியை அழைத்து கை குலுக்கினார். 'என் இலட்சியம் உன்னால் வெற்றி பெறட்டும். உன் எதிர் காலம் நன்றாக அமையட்டும்' என்று பேசினார். முத்துச் சாமியும் நன்றி என்று 'பவ்யமாகக்' கூறி ஒதுங்கி நின்றான்

ஆறடி உயரம் இருக்கும் ஒல்லியான உடம்பு. கன்னத்தி லும் கண்களிலும் சற்று குழிவிழுந்து கிடந்தது. மாநிற உடம்பு' நன்றாக உணவு உண்டால், கொஞ்ச நாளில் உடல் நன்கு தேறிவிடும். அப்படிப்பட்ட அமைப்பு.

ஏற இறங்க முத்துச்சாமியைப் பார்த்து நோட்டம், விட்டுக் கொண்டிருந்த குணசேகரிடம், இவர் தான் வேணு. இரும்புக்குண்டு எறிவதில் கெட்டிக்காரர், என்றார் வடிவேலு. ஆள் கனமான தேகத்துடன் இருந்தார். கல்லூரி மாணவன் தான் என்றாலும், பார்ப்பதற்கு தோற்றம் அப்படி இல்லை

அதிக உழைப்பு அப்படி ஆளை மாற்றியிருக்கலாம் என்று குணசேகர் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு சமாதானப் படுத்திக் கொண்டார்.

மூன்றாவது நபரோ குள்ளமாக இருந்தார். ஐந்தரை அடி உயரம் இருக்கும். நீண்ட தூர ஓட்டக்காரர் என்று அறி முகப்படுத்தப்பட்டார். நேசலிங்கம் என்பது இவர் பெய என்றார் வடிவேலு.

மூன்று பேர்களுக்கும் தேநீர் விருந்தளித்தார் குணசேகர். கல்லூரி படிப்புக்கு ஆகின்ற செலவு மட்டுமல்ல, மிகவும் சிறப்பாகப் பயிற்சி பெறவும், வெற்றிகள் காணவும், தங்க, உண்ண உடுத்த ஏற்படும் செலவுகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொள்வதாகவும் வாக்களித்தார்.

உங்க லட்சியம் தாங்க எங்க லட்சியமும், நமது தமிழகத் தின் பெருமையை, ஒலிம்பிக் பந்தயத்துல நிலை நாட்டனும்னு துடிச்சுக்கிட்டு இருந்தோம். அரசாங்கம் எங்களி

அக்கரை காட்டல. பக்கத்துல இருக்குறவங்க, எங்களைப்பத்தி பலவிதமாக பேசுறாங்களே தவிர, பரிதாபப்படக் கூட இல்லிங்க. உங்க பாசமும் பண்பாடும் எங்களை ரொம்ப கவர்ந்துடுச்சுங்க. உங்களுக்காகவும் உங்க இலட்சியத்துக் காகவும், என் உயிரையே கொடுக்க தயாராயிருக்கிறேன்.

முத்துசாமி பித்துப்பிடித்தவன் போல பேசினான்.

இந்த கலிகாலத்திலும் இப்படி ஓர் ஆள் இருக்கிறாரே, அதுவும் நமக்குக் கிடைத்திருக்கிறாரே என்ற எண்ணத்தில் தான் முத்துசாமி இப்படிப் பேசினான்.

வேணுவோ முணுமுணுத்தான். அவன் பேசியதில் ரொம்ப சந்தோஷங்க' என்பதுதான் காதில் விழுந்தது.

நேசலிங்கமோ ஒன்றுமே பேசவில்லை. அவனது விழிகள் தான் படபடத்தன. கண்களின் மூலமாகவே, கலங்கிப்போன கண்களைத் துடைத்தவாறு வணங்கினான். அவ்வளவுதான்.

மூன்று பேரும் ஒரே குறிக் கோளில்தான் இருக்கின்றனர். என்றாலும், அவர்கள் நடந்து கொண்டவிதம் முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதை இன்பநாதன் கவனித்துக் கொண்டேயிருந்தார்.

அவரது மனதிலே ஆயிரம் ஆயிரம் குழப்பங்கள், அத்தனையையும் வெளியிட முடியாமல், விழுங்கிக் கொண் டிருந்தார்.

நீங்க எப்படி தினம் பயிற்சி பண்றீங்க என்றார் குணசேகர்.

எனக்கு சுந்தரய்யங்காரதான் 'கோச்சுங்க. அவர் எத்தனையோ பேரை சிறந்த ஓட்டக்காரர் ஆக்கி இருக்காரு என்றான் முத்துசாமி.

எனக்கு பயிற்சி தந்தவர் •மார்லண்டோங்க ஆங்கிலோ இந்தியர்ங்க...ஒரு ஆபீஸ்ல அதிகாரிய இருக்கிறாரு. காலையும் மாலையும் இதே குறிக்கோள்லதான் வாழுறாரு என்றான் வேணு.

உனக்கு யாருப்பா என்று நேசலிங்கத்தைக் கேட்டார் குணசேகர்.

யாரும் இல்லீங்க... நானே தான் ஓடிக்கிட்டு இருக்கேன் அப்பப்ப பத்திரிக்கைகள்ல வர்ர குறிப்புகளை பார்க்கிறேன் புரியாத போது, தெரிஞ்சவங்ககிட்ட போய் கேட்டுக்குறேன்.

நேசலிங்கத்தின் நெஞ்சம் குணசேகருக்குப் புரியவில்லை அதெல்லாம் சரிப்பட்டு வராது தம்பி... பயிற்சிக்குன்னு ஒருவர் நிச்சயம் வேணும். குருவில்லாத வித்தை அரங்கம் ஏறாது புரியுதா... என்னோட பையனா நீ ஆயிட்டபிறகு, செலவைபத்தி நீ கவலைப்படாதே! எல்லாத்தையும் நான் பார்த்துக்குறேன் என்று படபடத்தார் குணசேகர்.

நேசலிங்கம் சரி என்று தலையசைத்தானே தவிர, வேறு எதுவும் பேசவில்லை.

மூன்றுபேரும் மாணவர் விடுதியில்தான் தங்கி இருக்கின்றார்கள் என்பதையும், அவர்களைப் பற்றிய விவரங்களையும் பேச்சுவாக்கில் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

தினம் தினம் பயிற்சி நடக்கும் இடத்திற்கு தாம் வருவதாகவும், மற்ற விஷயங்களை நாளை பேசிக் கொள்ளலாம் என்றும் விடையளித்தார் குணசேகர்.

வெற்றிப் புன்னகையின் வெள்ளோட்டம் அவரது முகத்திலே வீற்றிருந்தது. என்றாலும், அரைகுறையாகவே தான் இந்தக் காரியங்களை செய்வது போன்ற குறுகுறுப்பும் அவரது மனத்தின் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டிருப்பதையும் அவர் உணர்ந்தார்.

வந்த மாணவர்கள் நல்லவர்களாகவே தோன்றுகிறார்கள். தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற வேகம் இருப்பதையும், அதற்கேற்ற மதியூகம் இருப்பதையும் அவரால் கணிக்க முடிந்தது. என்றாலும், தான் செல்கின்ற பாதை சரிதானா என்று அவரால் முடிவுகட்ட முடியவில்லை...

இன்பநாதனை ஏறிட்டுப் பார்த்தார் குணசேகர், இன்ப வடிவேலுவைப் பார்த்தார். வடிவேலுவோ தனது கூட இருந்த மூன்று பேர்களையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொருவரின் பார்வையும் வெளிப்படையில் பார்த்தால், சாதாரணமாத் தோன்றினாலும், உள்மனதின் உள்ளே எத்தனையோ கதைகளைக் கூறிக் கொண்டிருந்தன.

எப்படியோ அறிமுக நிகழ்ச்சி வெற்றிகரமாக முடிந்தது. அனைவருக்கும் திருப்தி தான்.

பயிற்சியாளர்களுக்கும் அறிவித்து விடுவதாக வடிவேலு வாக்குறுதியளித்து விட்டார். அவருக்கு வர வேண்டிய வரவுக்காக தலையை சொறிந்துபார்த்தார். குணசேகருக்கோ அவரது சைகைகளும், நயன பாஷைகளும் புரியவில்லை போலும். அவர் எதுவுமே கண்டு கொள்ளாமல் இருந்து விட்டார்.

இன்பநாதன் இதனை குறிப்பறிந்து கொண்டார், வடிவேலு! நாளைக்கு ஒய். எம். சி. ஏ. கல்லூரி மைதானத்துலே உங்களை சந்திக்கிறேன். கவலைப்படாதீங்க... என்று சைகை செய்து காட்டினார்.

வடிவேலு புரிந்து கொண்டார். அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். மூவரும் வணக்கம் செய்தனர், குணசேகரும் மகிழ்ச்சியுடன் விடைதந்தார்... விடைதந்தது அவர்களுக்கா மகிழ்ச்சிக்கா... எதிர் காலம் எப்படியிருக்கும் என்று யார் கண்டார்?

# 14. ஆரம்பத்தின் அமர்க்களம்

---

குணசேகர் காரிலிருந்து இறங்கினார். இன்பநாதனும் கூடவே வந்திருந்தார். மிகவும் வியப்புடன் கல்லூரியின் இடங்களைப் பார்த்துக் கொண்டே நடந்தனர் இருவரும்.

நான் இந்தக் கல்லூரியில் தான் படிச்சேன். விளையாட்டுக்குன்னு உருவான மாதிரியே இந்த இட அமைப்பு இருக்கு பார்த்தீங்களா! எல்லா சௌகரியமும் இங்கே இருக்குது! ஆனா, எதிர்ப்பார்த்த மாதிரிதான் எதுவும் இல்லேங்குற குறை இங்கே இருக்குதுங்கிற ஒரு அபிப்ராயம், எல்லோருடைய மனசுலயும் இருக்குது! இன்பநாதன் எதை எதையோ மனதில் வைத்துக் கொண்டு பேசினார்.

பரந்த விரிந்த இடப்பரப்பில், பசுமையான புல்தரைகள். நிழல் தரும் மரங்கள், கண்ணுக்கெட்டிய தூரம் ஆங்காங்கே விளையாட்டு மைதானங்கள். இளமை நிரம்பியவர்களின் எடுப்பான நடைகள். மிடுக்கான பார்வைகள், கலகலவென சிரிப்புக்கள், கத்திக் கத்தி பேசும் பேச்சுக்கள், கண் கவரும் காட்சிகளாக இருந்தன. கல்லூரியே இளமையாகத் தான் தோற்றமளித்தது.

நல்ல அமைதியான சூழ் நிலையில், அனைவரையும் கவர்ந்து இழுக்கின்ற மைதானங்களைக் கண்ட குணசேகர், இந்த நகரமக்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டால், எத்தனையோ மாறுதல்கள் இந்த சமுதாயத்தில் நடந்திருக்குமே! ஏன் இதைப் பற்றிய அக்கறை கொள்ளாமல் இருக்கின்றார்கள்!

சர்க்கஸ் நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற குழந்தையின் கண்களைப் போல, குணசேகரின் கண்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே வந்தன. மைதானங்களைத் தழுவின.

'நானாவது இதனை நன்கு பயன்படுத்தி, இந்த நாட்டின் பெருமையை சர்வதேச அரங்கில் உயர்த்த முயற்சிக்கிறேன்.' என்று மனதுக்குள்ளே உறுதி எடுத்துக் கொண்டார்.

என்ன யோசிக்கிறீங்க? வடிவேலு வந்து காத்துகிட்டு நிற்கிறார்! என்று குணசேகரை நினைவு உலகத்திலிருந்து மீட்டுக் கொண்டு இந்த உலகத்திற்கு இழுத்து வந்தார்.

கைகுவித்த வணக்கத்துடன் நின்றார் வடிவேலு. குணசேகர் அவர் நடத்தையை வியந்து பார்த்தபடியே வணக்கம் செய்தார்.

'வாங்க போய் பார்க்கலாம்' என்று அழைத்தார் வடிவேலு. மூவரும் நடந்து சென்றனர். அவர்கள் வருவதைப் பார்த்ததும், முத்துசாமி, உயரத் தாண்டும் நிகழ்ச்சியை மும்மரமாகப் பழகிக் கொண்டிருந்தான்.

அவரது பயிற்சியாளர் சுந்தரம் ஏதோ முக்கியமான 'திறனை' விளக்குவது போல ஆக்ஷன் செய்து கொண்டிருந்தார். குணசேகர் அருகில் வந்தவுடன், சுந்தரம் மிகவும் பணிவாக வணங்கினார்.

குணசேகர் கேட்காமலேயே, முத்துசாமியின் திறமையைப் பாராட்டிப் பேசினர் அவர். தன்னைப்பற்றியும் பலவாறு புகழ்ந்து பேசவும் ஆரம்பித்தார்.

இந்தத் தமிழ்நாட்டிலேயே என்னை விட்டால், 'கோச்' பண்ண வேறு யாரும் இல்லிங்க. நான் NIS படிக்கும்போது நான் தான் First. எனக்கு அதிர்ஷ்டம் இல்லே; இல்லேன்னு, நான் NISக்கே கோச்சா போயிருக்கணும். நீங்கள்லாம் இங்கே இருக்கிறீங்க. எனக்கு அதுதான் கொஞ்சம் நிம்மதியா இருக்குது...

ஆங்கில உச்சரிப்ப சரியாக வரவில்லை என்றலும், அடிக்கடி ஆங்கிலச் சொற்களை சுந்தரம் பயன்படுத்திய விதம், கேலியாகவே அமைந்திருந்தது. இன்பநாதன் சிரிப்பை அடக்கிக் கொண்டார். குணசேகர் இன்னும் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

'நீங்க எதுக்கும் கவலைப்படாம, நல்லா கோச் பண்ணுங்க. உங்க திறமைய வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வந்திருக்கு. நீங்க உங்க திறமையை 'புரூப்' பண்ணிட்டா, நல்ல தொரு எதிர்காலமே உங்களுக்காகக் காத்துகிட்டு இருக்கு. தைரியமா செய்யுங்க...என்று இன்பநாதன் சுந்தரத்தை ஆதரித்துப் பேசினர்.

அப்டப்ப எங்களுக்குத் தேவையானதை கொடுத்து வந்திட்டா, எங்க முயற்சியில் முன்னேற்றம் இருக்குமே தவிர லாஸ் ஆயிடாதுங்க...

'தேவையானது' என்றதும் வடிவேலு முகம் சுளித்தார். இன்பநாதன் கேள்விக்குறியை முகத்தில் காட்டினர். குணசேகரோ, பணம் என்று நினைத்துக் கொண்டார்.

நிச்சயமா கிடைக்கும். எல்லா ஏற்பாடும் நடந்துகிட்டு இருக்குது சுந்தரம், தேவையானதுக்காக, எந்த நேரத்திலும்

நீங்க என்னை பார்க்க வரலாம். நிச்சயமா கிடைக்கும் என்றார் குணசேகர்.

அங்கே ஒரு பக்கத்தில் வேணு இரும்புக்குண்டை எடுத்து வீசிக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் பயிற்சியாளர் மார்லண்டோ நின்று கொண்டிருந்தார்.

நேசலிங்கம் எங்கே என்று கேட்டபொழுது 'அதோ பாருங்கள். ஓடிக்கொண்டிருக்கிறான். என்று வடிவேலு காட்டினார்.

மார்லண்டோவிடம் அறிமுகம் ஆனபிறகு, சிறிது நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்து விட்டு புறப்பட்டார்கள். வடிவேலுக்கோ, வருமானம் பற்றிய யோசனையாகவே இருந்தது.

காரில் ஏறப்போகும் நேரத்தில், கவர் ஒன்றை எடுத்து இன்பநாதன் வடிவேலுவிடம் நீட்டினார். அது கனமாகத் தான் தோன்றியது.

எவ்வளவு இருக்குமோ என்ற எண்ணத்தில் நன்றி கூட தெரிவிக்காமல் நின்று விட்டார் வடிவேலு.

வடிவேலு! ரொம்ப நன்றி! அடிக்கடி அவங்களைப் பார்த்து நிறைய புத்திமதி சொல்லணும் லட்சியத்தை நினைவு படுத்தனும், முன்னேற்றம் இருக்குதான்னு பார்க்கணும். நானும் வந்து அடிக்கடி பார்க்குறேன். உங்களை நம்பித்தான் இந்த முயற்சியில இறங்கி இருக்குறேன்.

ஐயா! நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க! எல்லாம் நம்ம பசங்க, நல்ல பசங்க, வசதியில்லாம கஷ்டப்பட்டுகிட்டு இருந்தாங்க...சத்துள்ள உணவும், வேண்டிய டிரெஸும் வந்துட்ட பிறகு, அவங்களுக்கு ஒரு உத்வேகம் வந்திருக்குதுங்க நான் பார்த்துக்கிறேன். நீங்க நிம்மதியா புறப்படுங்க...

வடிவேலுவின் பேச்சில் ஒருவித 'கனம்' இருந்தது. ஆமாம் அவர் கை அந்தக்கவரினால் கனத்துக் கொண்டிருந்ததல்லவா !

கார் புறப்பட்டது.கையசைத்து விடைதந்தார் வடிவேலு!

'கற்பக மரம் ஒன்று கைக்கெட்டும் தூரத்தில் வந்திருக்கிறது என்று குளிர்ந்து போனார் வடிவேலு.

முத்துசாமியும் சுந்தரமும், வேணுவும் மார்லண்டோவும் தங்களை அதிர்ஷ்டசாலிகள் என்று எண்ணி மகிழ்ந்தனர்.

அன்றைய பயிற்சி நாள் ஆனந்தமயமான சுறுசுறுப்புடன் அமைந்துவிட்டிருந்தது.

நேசலிங்கமோ ஓடிக் கொண்டேயிருந்தான். அவனை யாரும் அழைக்கவே இல்லை. ஓடிக் கொண்டேயிருந்தான். ஒருவரை ஒருவர் கைகுலுக்கி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். அதை அவன் கவனித்ததாகவே தெரியவில்லை.

இனிமேல் தங்கள் தொழிலை திறம்பட நடத்திட வேண்டும். என்று அங்கேயே அவர்கள் சூளுரைத்துக் கொண்டனர். வடிவேலு 'வாத்தியார்' வார்த்தைகள் அவர்கள் மத்தியிலே கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தன.

முத்துசாமியோ தனக்கு ஆகும் செலவை. ஒரு பட்டியலில் போட்டுக் கொண்டு வந்திருந்தான். வேணுவும் தன்னால் எந்த நேரத்திலும் வாயால் சொல்ல முடியும் என்று தனது எழுதும் சோம்பேறித் தனத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டான். பயிற்சியாளர் இருவரும், தங்கள் மாதவருமானம் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

இன்னும் ஐந்தாறு குணசேகர்கள் கிடைத்தால் ஒரு வீடு வாங்குமளவுக்காவது பணம் சேர்த்து விடுவேன் என்று மனதுக்குள்ளே பாராயணம் பண்ணிக் கொண்டிருந்தார் இந்த வடிவேலு.

ஆற்றங்கரை துறைகளில், அகப்பட்டால் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் அலங்கோலமாகக் கிடக்குமாம். ஆறு ஏழு மாதங்கள் கூட ஒன்றும் உணவில்லாமல், வற்றிப் போய் கிடக்குமாம். வருகின்ற மிருகங்கள் வகையாக மாட்டிக் கொள்ளும் வரை, பட்டினி கிடக்குமாம். ஏதாவது ஒரு மிருகமோ மனிதரோ வந்து மாட்டிக் கொண்டால் தன்னால் எவ்வளவு முடியுமோ, அந்த அளவுக்கு உறிஞ்சுக் கொண்டு விடுமாம்..

இப்படிப்பட்ட அட்டைகளுக்கும், இத்தகைய வடிவேலு களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது ?

எப்படியோ ! ஆரம்பம் அமர்க்களமாக முடிந்துவிட்டது. அவரவர்கள் தங்கள் இதயத்திலே வைத்திருக்கும் "லட்சியத்துக்காகப்' பாடுபடத் தயாராகி விட்டார்கள்.

பரம்பரைக் குணத்தை பண்பு மாற்ற முடியுமா என்ன ? இங்கே ஒரு மர்மப் போராட்டம் தொடங்கிவிட்டது! மாட்டிக் கொண்டது யார் என்பது இறைவனுக்கே வெளிச்சம்!

# 15. வனவாசம் போன வாக்குறுதி

மூன்று வீரர்களிலே முத்துசாமி முதன்மையானவன். உயரத் தாண்டும் போட்டியில் உயர்ந்த நிலைக்கு வரக் கூடியவன்.

ஆற்றலும் ஆர்வமும் இருந்த அளவுக்கு, ஆதரவும் பண வசதியும் இல்லாத காரணத்தால், அடங்கிக் கிடந்தவன். அன்று அவன் மனதிலே ஆடித் திரிந்த நினைவுகளும் கனவுகளும் ஆயிரம் ஆயிரம்.

'ஆள்பிடிக்கும் குருப்' வடிவேலுவின் கண்களில் அகப்பட்ட முத்துசாமிக்கு அதிர்ஷ்டம் அடித்தது. குணசேகர் மூலமாகக் கனவுகளை கண் முன்னே கண்டு விடலாம் என்று களித்துப் போனான் முத்துசாமி.

வெறும் ஆசைகளும் விரக்தியான முயற்சிகளும் இலட்சியமாகாதல்லவா! முத்துசாமிக்கு அந்த நிலைதான். நொந்த நிலைதான்.

உயரவேண்டும் என்ற லட்சியம் அவனுக்கு இருந்ததே தவிர, அதற்காக அவன் எதையுமே இழக்கத் தயாராக இல்லை. எந்த இன்பத்தையும் துறக்கத் தயாரில்லை.

வயிறார சோறு இருந்தால் போதும் என்று விரும்பியவன். இப்பொழுது வகைக்கு ஒன்றாக, வாய்க்கு ருசியாக உணவு வேண்டும் என்று விரும்பினான்.

மாற்றுக்கு ஓரிரண்டு உடை இருந்தால் போதும் என்று, ஆசைப்பட்டவன், இப்பொழுது 'மைனரைப்' போல உடுத்திக் கொண்டு உலா வர வேண்டும் என்று முயன்றான்.

ஓரிரண்டு போட்டிகளில் பெற்ற அவனது வெற்றியைக் கண்டு, பலர் பாராட்டிய போது, அப்படிப்பட்ட பாராட்டு உரைகள் தனக்குத் தினம் வேண்டும் என்று கேட்க ஆசைப் பட்டான்.

இப்படி நாளொரு வண்ணமுமாக முத்துச்சாமி மாறிக் கொண்டே வந்தான்.

நண்பர்கள் அதிகமாயினர், சினிமா, நாடகம், ஓட்டல், பூங்கா என்ற நடைமுறைகள் மாறிக் கொண்டே வந்தன.

காலைமாலை உடற்பயிற்சி என்ற பயிற்சிமுறைகள் மாறியது, வாரத்திற்கு இருமுறை என்பது மாறி, வாரத்திற்கு ஒரு முறை என்று வந்தது. பின்னர், ஓய்ந்த நேரம் களத்திற்கு வந்து போவது என்ற ஒரு கடமை நிலையும் வந்தது.

அதற்குக் காரணம் இருக்கத்தான் இருந்தது.

அவனுக்குப் பாராட்டுக் கூற வந்த ரசிகைகளில் பாலா என்பவளும் ஒருத்தி, அவனது உயரத்தையும், தாண்டும் அழகையும் கண்டு மயங்கி அவள் அவனுடன் உறவு கொள்வதில் கொண்டே ஆசையில் சென்றுவிட்டாள்.

பழக்கம் பாசமாக மாறி பாசம், பாராட்டுதல் மூலமாக 'Friend' என்று ஆகி, பிறகு ரசிகை என்று ஒட்டிக் கொண்டு அதற்கும் மேலாக உயிர் என்று உள்ளே புகுந்து கொண்டது

தாண்டுவதில் கெட்டிக்காராஞன முத்துசாமி, இந்த ஆசைநிலையைத் தாண்ட முடியாதவஞகத் தத்தளித்தான், தடுமாறித் தடுமாறி விழுந்தான்.

கடுமையானபயிற்சிகள் செய்வதில் களித்த அவன், இப்பொழுது கட்டழகியின் காதலுக்கும் ஏங்கிஞன். நினைவுகள் அவனையே தேனீக்களாகக் மொய்த்துக் கொண்டு திரிந்தன.

கையில் 'காசு' வசதி வேறு இருக்கிறதே என்ன செய்வான் அவன் ?

பாலாவின் பக்கத்தில் இருப்பதையே அதிகம் விரும்பிஞன். பக்கம் இருக்கும் ஆசை வெட்கத்தை விரட்டியது. தன் நிலையை மாற்றியது. பிறகென்ன ?

பாலாவின் பின்னே பம்பரமாகச் சுற்றிஞன் முத்துசாமி.

குணசேகரைப் பற்றி அவன் கவலைப்படவே இல்லை. கொடுப்பதற்குத்தானே அந்த மனிதன் !

அவர் வருகின்ற நேரம் அவனுக்குத் தெரியுமே ! அந்த நேரத்தில் மிக ஆவேசமாகப் பயிற்சி செய்பவன் போல அற்புதமாக நடிப்பான். அதைப் பார்த்து பரவசப்பட்டு விட்டுப் போய் விடுவார் குணசேகர்.

தனக்கு ஏற்றம் தர வந்த வள்ளலை மட்டுமா அவன் ஏய்த்தான் ? தன் எதிர்காலத்தையுமல்லவா ஏய்க்கிஞன் ! அவனுக்கு அதை யார்தான் புரிய வைப்பது.

பாலாவின் பசப்பு வார்த்தைகளால், பருவ சேட்டைகளால் முத்துச்சாமி தன்னை முழுதும் மறந்தான். தன் முனைப்பையே இழந்தான்.

அதன் முடிவு இப்படியாகப் போனது. அதாவது ஒருநாள், பாலாவுடன் அவன் ஓடிவிட்டான். ஆமாம்.

பாலாவின் சொந்தக் கிராமத்திற்குத்தான். அவளை மணந்து கொண்டு, செட்டில் ஆகிவிடலாம் என்பது அவனது லட்சியமாகப் போய்விட்டது.

எத்தனை நாள் தாண்டமுடியும்! பிறகு தனது எதிர்கால சிந்தனையை பாலா ஊட்டி விட்டாள். அந்த சிந்தனை தந்த வலிமைதான். அவனை சொல்லாமல் கொள்ளாமல் செயல்பட வைத்தன. முடிவு...ஓடி விட்டான்.

இத்தனை விஷயமும் சுந்தரத்திற்குத் தெரியலாமா இருக்கும்! சுந்தரம் அறியாத விஷயங்கள் உண்டா? அதுவும் 'இதுபோல்' உள்ளதை? இதில்தான் அவர் எக்ஸ்பர்ட் ஆயிற்றே?

ஆரம்பத்தில் முத்துசாமியின் காதலைத் தடுப்பது போல் அவர் தடுத்தார். அப்பொழுது தானே முத்துசாமிக்கு அதில் வேகம் வளரும் என்ற சைகாலஜி அவருக்குத் தெரியாதாத என்ன?

அதை அறியாத முத்துசாமி, அவருக்கு 'லஞ்சம்' கொடுத்துத் தன் காதலை, காரியத்தை சரிகட்டிக் கொண்டான். இருபக்க வரவினால், சுந்தரம், தன் குடும்பத்தில் செலவை சரி கட்டிக் கொண்டார்.

இந்த நாட்டிலே, தான் தான் பெரிய கோச் என்று தருக்கித் திரியும் அவர், தன் நிலையிலேயே எப்படித் தாழ்ந்து போகிறார் என்பது அவருக்குத் தெரியாமல் இல்லை, ஆனால். வசதியாக வாழவேண்டும் என்ற ஆசை. தன் வறுமையை விரட்டிவிட வேண்டும் என்ற வேகம். அதனால், பாதை மாறிப் போனார். பலன்?

உருட்டி விழிக்கப் போய் உள்ள விழியும் போன கதை போல ஆகிவிட்டது.

எங்கே முத்துசாமி என்ற கேள்விக்கு, பதில் சொல்ல முடியமால் பட்டபாடு சுந்தரம் மட்டுமே அறிவார்.

குணசேகர் தலையில் ஒரு கோடி இடிவந்து விழுந்தது போல இருந்தது. முத்துசாமியின் தலைமறைவு அவர் மன அமைதியையே அழித்து விட்டது.

சுறுசுறுப்புடன் திரிந்த அவர், சோர்ந்து விட்டார், காதல் கிறுக்கேறி, அவன் ஒரு பெண்ணுடன் ஓடிவிட்டான் என்ற சேதி அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

தனது முனைப்பான இலட்சியத்தின் முதல் அடியாக இது இருக்குமோ! 'தனது நோக்கம் நொறுங்கிப் போய் விடுமோ' பிறர் கேலிக்கும் பழிப்புக்கும் ஆளாகிப் போவோமோ ?

இப்படி நினைக்க நினைக்க அவர் யாரிடமும் பேசக்கூட விரும்பாத நிலைக்கு ஆட்பட்டார்.

இன்பநாதன் எவ்வளவோ சமாதானம் கூறிப்பார்த்தார், நெஞ்சு வலிக்கிறது என்ற குணசேகர் கூறும் போதெல்லாம். 'டேக் கிட் ஈசி' என்று இன்பநாதன் சொல்வார்.

சரி என்று சொன்னாலும் சமாதானம் இல்லாத நெஞ்சினராக குணசேகர் நடமாடினார். நம்பும்படி நடந்து கொண்டார்.

சுந்தரம் தன் பயிற்சி வேலையை இழந்தார். அவர் செய்துவந்த 'பேச்சும்' பலப்பல. வேலைகளுந் தான் அவருக்கு இப்பொழுது உதவின.

வடிவேலு வந்து வந்து போனார், குணசேகரிடம் பலப்பட முத்துசாமியைத் திட்டினார்.

'நல்ல பையன்னு நினைச்சேனுங்க. இப்படி நாதாரித் தனமா நடந்துக்குவான்னு நான் நினைக்கவே இல்லிங்க

வசதி வந்தா, விளையாட்டு வரும்னு நினைச்சேன். இப்படி வாலிபத்துக்கு அடிமையா போயிடுவான்னு நான் நினைக்கவே இல்லே.' எனக்கு இருந்த மானம் மரியாதை எல்லாம் இந்தப் பயலாலே மண்ணு போயிடுச்சுங்க... என்னை மன்னிச்சுடுங்க' என்று வடிவேலு குணசேகரிடம் புலம்பினார். என்ன புலம்பி என்ன செய்ய?

மூன்று பேர்களில் ஒருவன் தன் வரலாற்றை முடித்துக் கொண்டான். உதவ வந்த உபகாரியின் உள்ளமோ பின் வாங்கிப் போகவும் முடியாமல், முன் சென்று பார்க்கவும் முயலாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது.

என்ன நடக்குமோ என்று தீனநாதன் பயந்தார்.

வருங்காலம் நமக்கு வறுமையாய் போய்விடுமோ என்று வடிவேலு பயந்தார்.

வசதி வந்தால் வலிமை பெருகும். வலிமை பெருகினால் திறமை பெருகும். திறமை பெருகினால் சாதனை பெருகும். சாதனை பெருகினால் நாட்டின் மதிப்பு உயரும் என்று எண்ணிய குணசேகர், வலிமை இப்படி வனவாசம் போய் விட்டதே என்று வாடினார்.

நிலத்தைப் பார்த்து விதைவிதைக்க வேண்டும். நீங்கள் நினைத்த இடத்திலெல்லாம் விதை போட்டு விட்டு, விளைச்சலை எதிர்பார்த்தால் எப்படி என்று குணசேகரின் மனைவி கேட்ட கேள்வி, அவரை உணர வைத்துக் கொண்டிருந்தது. உணர்வுகளை உலரவைத்துக் கொண்டிருந்தது.

# 16. ஆத்திரத்தின் ஆவேசம்

குணசேகரின் மனைவி கேட்ட கேள்வியில் நியாயம் இருந்தது. அது அவருக்கு வேதனை தருவதற்குப் பதிலாக விவேகத்தை அளிப்பது போல் இருந்தாலும், விளக்கம் தருவ தாக அமையவில்லை.

'நிலம் பார்த்து விதைக்கவேண்டும், பாத்திரம் அறிந்து பிச்சையிடவேண்டும். குலம் பார்த்து பெண் கொடுக்க வேண்டும்.'

இதெல்லாம் சொல்வதற்கும் கேட்பதற்கும் நன்ருகத்தான் இருக்கிறது. செயல்படும் பொழுது எப்படி முன்னதாக தெரியும்?

வாய்க்குள்ளே சோறு போன பிறகுதானே கல்லும் முடியும் இருப்பது தெரிகிறது! முன்னுலே தெரிந்து கொண் டால் எடுத்து விடலாம்! வாய்க்குள்ளே போனபிறகு தானே தெரிகிறது என்ருல் என்ன செய்வது?

அழகாக வாரிவிட்டுக் கொள்கின்ற முடி உதிரும் என்று நமக்கு எப்படி தெரியும்? எப்பொழுது புரியும்? விழுந்

பிறகு எடுத்துப் பார்த்துவிட்டு, தூக்கி எறிந்து விட்டுப்போய் விடுகிறோம். அப்படித்தான்.

ஓடிப்போன முத்துச்சாமியை இப்படித்தான் நினைக்க வேண்டும் என்றார் இன்பநாதன்.

நரைத்துப்போன முடிக்கு கறுப்புமையை அடித்துவிட்டு, சில நாட்களில் இரண்டுங்கெட்டான் நிறத்தில் மாற; அதை வைத்துக் கொண்டு மனம் கலங்குகிற ஆசைக்கார மனிதர்களின் அவல நிலையில் வடிவேலு வீற்றிருந்தார்.

உண்மையாக சேர்த்தப்பணம், உண்மையாக உதவ வேண்டும் என்கிற தனது கணவனின் மனம், இப்படி கேவலப்பட்டவர்களால் வீணாக்கப்படுகிறதே என்ற கவலை குணசேகரின் மனைவிக்கு.

மூள்ளு முனையிலே மூனுகுளம் வெட்டினேன். ரெண்டு குளம் பாழ்! ஒன்னுலே தண்ணியே யில்லே என்கிற பழம் பாடல் போல, தனது தத்தெடுக்கப்பட்ட மூன்று இளைஞர் களும் இப்படித்தான் தன்னை மோசம் செய்து விடுவார்களோ என்கிற கவலை நிலையிலே, குழப்பச் சூழ்நிலையிலே குணசேகர் வீற்றிருந்தார். நாட்களை ஓட்டினார்.

ஓடிப்போன வீரன் முத்துச்சாமியின் பயிற்சியாளர் சுந்தரம் சோகமே உருவெடுத்தாற் போல ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். பெண்டாட்டியைப் பறிகொடுத்தவர் போல, கன்னத்தில் கைகளை ஊன்றியபடி. வடிவேலு அவர் எதிரே அமர்ந்திருந்தார். அரைது லைது கைப்புறத்திலே வேணு அமர்ந்திருந்தான். எதிர்புறத்திலே அவனது பயிற்சி யாளர் பார்லண்டோ இருந்தார்.

அவர்கள் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்த இடம் விளையாட்டு மைதானம் அல்ல. நவநாகரிகமான ஓட்டல் ஒன்றில். எதிரே மதுப்புட்டி ஒன்று; நான்கு டம்ளர்கள்,

சோடா பாட்டில்கள் மற்றும்; பல 'சில்லறைத் தின்பண்டங்கள்.

ஆமாம்! அவர்கள் மனக்கலக்கத்தை மாற்றுவதற்காக வந்திருக்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கலக்கம். குழப்பம். வேணு கொஞ்சம் அடக்கத்துடனும், கூச்சத்துடனும் குந்தியிருந்தான்.

மார்லண்டோ அவனை வற்புறுத்தி ஒரு 'டோஸ்' சாப்பிடச்சொன்னார். சுந்தரம் இது ஒன்றும் தப்பில்லை என்று சமாதானம் கூறினார். வடிவேலுவோ; பரவாயில்லடா தம்பி! ஒன்னோட ஒடம்பு வலிக்கு இது கொஞ்சம் ஒத்தடம் கொடுத்ததுமாதிரி இருக்கும். என்று ஒத்துஊதினார்.

பெரியவங்க முன்னாலே நான் எப்படி? என்று சிணுங்கினான் வேணு.

கொஞ்ச நேரத்தில் அவன் குடித்த விதம், ஏற்கனவே அந்த விஷயத்தில் அவன் கெட்டிக்காரன் என்பது விளங்கி விட்டது. வேணுவை எல்லோரும் பாராட்டினார்கள்.

அந்த நிகழ்ச்சி அற்புதமாக அரங்கேறிக் கொண்டு இருந்தது.

குணசேகர் மனம் ஒடிந்துபோயிருக்கிறார் என்று வடிவேலு ஒரு வரலாறு கூறுவதுபோல சொல்லிக் கொண்டு வந்தார்.

இனி பணம் கிடைக்குமா? என்று வேணு மிகவும் கவலையுடன் கேட்டான். என்னோட பயிற்சி நின்னுபோயிட்டா எப்படி?...என்று நாக்குழறக் கேட்டான்.

இப்பொழுது அவனுக்குப் 'பயிற்சி' என்பது குடி தான்.

உடல்வலிக்கு என்று முதலில் தொடங்கியவன்' இப்பொழுது காசு கைக்கு வந்து கொண்டிருப்பதால், தினம் குடிப்பது என்று விரதம் எடுத்தவன்போல செய்து வந்தான்.

பகலில் கல்லூரி, மாலையில் இரும்புக்குண்டு எறியும் பயிற்சி, என்று மரியாதையாக இருந்தாலும், அவன் கூட இருந்த 'குடிகாரர்கள்' அவனை தனியே விட்டு வைக்க வில்லை, அற்புதமான 'போதை' தலைக்கேறிக் கொண்டு இருந்தது.

ஒரு நாள் வேணு, விளையாட்டுமைதானத்தின் ஓரத்தில் இருந்த ஒரு மரத்தடியில், இன்னொரு நண்பனுடன் குடித்துக் கொண்டிருந்தை குணசேகர் பார்த்துவிட்டார்.

குணசேகர் வந்தது வேணுவுக்குத் தெரியாது. அவர் கார் சென்றதைத் தான் பார்த்தான். அதனால். தான் செய்தது அவருக்குத் 'தெரியாது' என்று நண்பன் சொன்ன தைரியப் பேச்சை சமாதானமாக எடுத்துக் கொண்டான்.

வேணுவின் விவகாரம் வளர்ந்து கொண்டிருந்தது மார்லண்டோவின் பயிற்சியும் பேச்சும், அவன் மண்டைக் குள் போனாலும், அது திறமையை வளர்க்கும் செயலாகத் திரும்பி வரவில்லை.

என்ன காரணம் என்று மார்லண்டோவுக்குப் புரிய வில்லை

நாளுக்கு நாள் அவனது உடல்நிலை மாறிக் கொண்டிருப் பதை மட்டும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

எப்பொழுதாவது குடிக்கும் பழக்கம் உள்ளவர் மார்லண்டோ, அன்று அவர் மற்றவர்கள் வற்புறுத்தலுக் காகக் குடிக்க வந்தார். அதனால் தான் அவர், வேணுவை குடிக்க அனுமதித்தார்.

ஆனால் அது எந்த விதத்தில் இப்படி திசைமாறி வந்திருக்கிறது என்பதை அறிந்து அவர் திகைத்துப் போய் விட்டார்.

அவனைப் புரிந்து கொண்டவுடன், அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை, குடிப்பது தவறு, அதுவும் ஒரு முன்னேறிவரும் விளையாட்டு வீரன் மது அருந்துவது மகா பாவம் என்றெல்லாம் அறிவுரை கூறினார்.

கண்டிப்புடன் பேசினார். கட்டளையிட்டார் இனிமேல் உனக்குப் பயிற்சியாளனாக இருக்க மாட்டேன் என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார். அது செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போனது.

ஒருநாள் மாலை பயிற்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது, வேணுவால் இரும்புக் குண்டை எதிர்பார்த்தத் தூரத்திற்கு எறிய இயலவில்லை. சாதாரணமாகத் தூக்கி எறியும் தூரம் தான். அது கூட அவனால் முடியவில்லை என்ற பொழுது, மார்லண்டோவிற்குக் கோபம் வந்து விட்டது.

உன்னுடைய பலம் குறைந்து போகிறது. உனது பலவீனம் உன்னை மறைத்துக் கொண்டிருக்கிறது. இதை நான் குணசேகரிடம் சொல்லியாக வேண்டும். இனிமேல் இதைநான் பார்த்துக் கொண்டிருந்தாலும், பொறுத்துக் கொண்டிருந்தாலும், நான் துரோகியாகி விடுவேன் என்று கோபத்துடன் கூறி விட்டார் மார்லண்டோ.

இனிமேல் இப்படி நடக்க மாட்டேன். என்னைப்பற்றி அவரிடம் சொல்லி, என் வருமானத்தைக் கெடுத்து விடாதீர்கள், அவமானத்தைக் கொடுத்து விடாதீர்கள் என்றான் வேணு.

முடியாது இன்று மாலையே நான் சொல்லத்தான் போகிறேன் என்றார் பயிற்சியாளர்.

மெதுவாக கெஞ்சிக் கொண்டிருந்தவன் முகம் மாறி விட்டது. சொல்லவாபோறே...உன்னை விட்டத்தானே போய் சொல்லுவே ?......

என்று ஏக வசனத்தில் பேசியவாறு பக்கத்தில் கிடந்த ஜேவின் கம்பை எடுத்து அவரைத் தாக்க தயாராகி விட்டான்.

'எறிந்து விடாதே....அது என் நெஞ்சில் பாய்ந்து விடும்' என்று பயந்து பின் வாங்கிஞர் பயிற்சியாளர்.

'உன்னை இன்னிக்கு விடமாட்டேன்' என்று ஓங்கிக் குத்த முயலும்போது 'ஏய் வேணு' என்ற குரல் மிகக் கோப மாகக் கேட்டது.

திரும்பிப் பார்த்தான் வேணு திகைத்துப் போய் நின்ருன்! எங்கே வந்தார் இவர் ! எப்படி வந்தார் ?

பேயறைந்தது போலிருந்தது அவன் முகம்! அந்த 'அவரோ' ஆத்திரத்தின் சொருபமாக நின்று கொண்டிருந் தார்.

# 17. இருந்த பறவையும் பறந்தது!

ஏய் வேணு என்ற சத்தம் கேட்டு, ஓங்கிய ஜேவலினை அப்படியே நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான் வேணு. அங்கு குணசேகர் நின்று கொண்டிருந்தார்.

எதிர்பார்க்கவில்லை வேணு. பயிற்சியாளர் மார்லண டோவுக்கு அப்பொழுதுதான் போன உயிர் திரும்பிவந்தது போல தெளிவு பெற்றார்.

வேலை கீழே போடு—

குணசேகர் வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. கடுமை யான கட்டளை பிறந்தது.

தலை குனிந்தவாறு வேணு நின்று கொண்டிருந்தான். அவனருகில் சென்றார் குணசேகர். மதுவாடை மூக்கோடு கலந்து அவரது முகத்தில் படர்ந்தது. முகத்தை சுளித்துக் கொண்டார்.

"இப்படித்தான் நீ புகழ் வாங்கனும்னு விளையாட்டுத் துறைக்கு கொண்டு வந்தேன். நீயோ எப்படியும் புகழ் வாங்கிடலாம்னு கொலை வெறியில் நிக்கிறே! பரவாயில்லே— மத்ததெல்லாம் நாளைக்கு பேசிக்கலாம். நீ போ—

வெறி நாயைப் பார்ப்பதுபோல இருந்தது அவரது பார்வை. கூனிக் குறுகி நின்ருன் வேணு. மார்லண்டோ என்ன பேசுவது என்றே புரியாமல், ஒருவிதமான மயக்க மான குழப்ப நிலையில் நின்று கொண்டிருந்தார்,

தள்ளாடித் தள்ளாடிப் போய்க் கொண்டிருந்தான் வேணு. இந்திய நாட்டு விளையாட்டுத்துறை இப்படிப்பட்டவர்களால்தான் தள்ளாடித் தள்ளாடி வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நேரிடையாகக் கண்டு கொண்ட குணசேகர், தலையைப் பிடித்துக் கொண்டார்.

அவரது கால்கள் நடுங்குவது போல உணர்ந்தார். கண்கள் தீயாக எரிந்து கொண்டிருந்தன. தலையில் இடி இடிப்பதுபோல வலிகுத்துக் கொண்டிருந்தது. இலேசாக உடலில் நடுக்கம்.

அவரது நிலையை உணர்ந்த மார்லண்டோ அவரின் அருகில் சென்ருர். அவரது தோளில் தன் இடது கையைப் போட்டு "ப்ளீஸ் என்னைக் காருக்கு அழைத்துப் போங்கள்" என்ருர் குணசேகர்.

காருக்குள் பின்சீட்டில் உட்காரச் சென்றவர், அப்படியே படுத்துவிட்டார்.

என்ன செய்வது என்றுபுரியாமல், முன் சீட்டில் அமர்ந்து கொண்டு, 'டிரைவர்-சீக்கிரமாக வீட்டுக்குப் போ! ஐயாவுக்கு காய்ச்சல் மாதிரி இருக்குது—சீக்கிரம்...என்ருர்.

டிரைவர் பயந்தபடி, காரை வேகமாக ஸ்டார்ட் செய்து ஓட்டிக்கொண்டு போனுர்.

மார்லண்டோ பயந்தபடி, அது காய்ச்சல்தான். முதலில் சாதாரண காய்ச்சல் மாதிரி இருந்தது.

எந்தவித வைத்தியத்துக்கும் அது இறங்குவதாகத் தெரியவில்லை, வீட்டில் இருந்தால் பார்வையாளர்கள், நண்பர்கள் தொந்தரவு அதிகம் என்பதால், தனியார் மருத்துவமனை ஒன்றில் அவரை சேர்த்துவிட்டார்கள்.

குணசேகரின் மனைவி வற்றிய குளத்தில் கிடக்கும் தாமரையாக வதங்கிக் கிடந்ததைக் கண்டு, இன்பநாதன் பதறிப் போனார். அவருக்கு எப்படி சாமதானம், தைரியம் சொல்வது என்று அறியாமல் மனதுக்குள்ளே புலம்பிக் கொண்டிருந்தார்.

குணசேகர் கட்டிலுக்கு அருகிலே அமர்ந்து, வேண்டிய உதவிகளைச் செய்வது இன்பநாதனின் அன்றாடப்பணியாக ஆகிவிட்டது. அதாவது, குணசேகர் நன்றாக நலம் அடைந்து, வீடு திரும்பும்வரை, நான் வீட்டுக்கு போக மாட்டேன் என்று விரதம் எடுத்துக் கொண்டவர்போல, இன்பநாதன் அங்கேயே இருந்தார்.

குணசேகர் எப்பொழுதாவது கண் விழித்துப் பார்ப்பார். ஆனால் எதையும் பேச மாட்டார்.

இன்பநாதன் அவரிடம் பேசி, அவர் மனச்சுமையை குறைத்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும் என்று எவ்வளவோ முயற்சித்தார் எல்லாமே தோல்வியாகவே முடிந்தது.

சிறிதுநேரம் கண்விழித்தால், இன்பநாதனையே பார்த்துக் கொண்டிருப்பார். மனைவி இருந்தால், அவரைப் பார்ப்பார். ஆனால் அவர் எதுவுமே பேசமாட்டார், எதுவும் பேச விரும்பவில்லை.

குணசேகர் மனதுக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தார். பதிலும் கேள்வியும் புடைத்துக் கொண்டு எழுந்து குதிக்கத் தொடங்கினால், அவர் கண்களை மீண்டும் மூடிக் கொள்வார்.

மனப்போராட்டம்தான் அவரை படுத்த படுக்கையாக்கி விட்டது.

மனநோய்க்கு மருந்தேது !

வேணுவையும் இப்பொழுது கைகழுவியாகிவிட்டது. ஓடிப்போன முத்துசாமியைவிட, கொடூரமானவனாகத் தெரிந்தான் வேணு. பயங்கரமானவர்களை பண்பாளர்கள் என்று நினைத்து, இலட்சியமாக்கிக் கொண்டதை நினைக்கும் பொழுதெல்லாம், குணசேகர் கூனிக் குறுகிப் போனார். குற்றவாளி போலத் தவித்தார்.

வெளியே தலைகாட்ட முடியாத வெட்கம், வேதனை, அவமானம் அவரை அரித்து எடுத்தது. அனலாய் கிடந்தார்.

ஒருநாள், இன்பநாதன் எதிரே உட்கார்ந்திருந்தபோது, கண்விழித்த குணசேகரின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

'என்னை மன்னிச்சுடுங்க.. நிம்மதியா இருந்த உங்களை, இந்த விளையாட்டுப் பக்கம் கொண்டு வந்த பாவத்துக்கு, எனக்கு எந்தப் பிறவியிலும் மன்னிப்பே கிடையாது. அழகாகவே எல்லா காரியமும் பண்றவரு நீங்க இப்படி அலங்கோலமா படுக்கையிலே கிடக்குறதைப் பார்த்தா.... எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்குறேன். நான்பாவி!

இன்பநாதன் குலுங்கிக் குலுங்கி அழுததைக் கண்ட குணசேகர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் அவர் எதுவுமே பேசவில்லை மாறாக, அவரது கையை அழுத்திப்பற்றிக் கொண்டார். அதில் ஒரு 'இதம்' தெரிந்தது இன்பநாதனுக்கு.

இரண்டு வாரங்கள் இப்படியே கடந்தோடின. ஒருநாள் இன்பநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. குணசேகர் வாய் திறந்து பேசினார்.. அதுதான், பேரிடியாகப்போனது.

இன்னொரு பையன்... நேசலிங்கம் எங்கே ?

அவர் பேசிய ஆனந்தத்தில், இன்பநாதன் தன்னை மறந்து பதில் கூறிவிட்டார். "அவனையும் காணோம். அவனும் எங்கேயாவது ஓடிப் போய்ட்டானோ என்னவோ ? இங்கே ஒரு நாள் கூட வரலே... உங்களையும் வந்து பார்க்குலே...

"அப்படியா" என்றார் குணசேகர். அதற்குப் பிறகு அவர் எதுவும் பேசவில்லை.

குணசேகருக்கு வந்திருந்து காய்ச்சல் என்பதைவிட காய்ச்சல்கள் என்பதுதான் உண்மை. மலேரியா, டைபாய்டு, டபுள் நிமோனியா, இந்த மூன்றும் சேர்ந்துக் கொண்டுதான் அவரை வாட்டிக் கொண்டிருந்தன.

ஒரு காய்ச்சலுக்கு மருந்து கொடுத்தால், அது அடங்கிப் போகும். ஆனால், அடுத்தது ஏறிக் கொள்ளும். இப்படிப் போராடிக் கொண்டிருந்தபோது இந்த அதிர்ச்சி செய்தி அவருக்குக் கிடைத்ததும் உடல் நிலைமை மேலும் மோசமாயிற்று.

அதன் பலன் என்ன ஆயிற்று என்று கூறும் பொழுது நமக்கே மனது கஷ்டமாகத்தான் இருக்கிறது.

பக்கவாதம் அவரை பலமாகப் பற்றிக் கொள்ளவே, ஒரு காலும் விளங்காமல் போய்விட்டது.

எவ்வளவோ பணம் செலவழித்தும், எத்தனையோ பெரிய டாக்டர்கள் மருத்துவம் செய்தும், அவரைக் குணப் படுத்த முடியவில்லை. படுக்கை, அவரை வரவேற்று படுக்க வைத்துக் கொண்டது.

மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

'மனிதரால் ஆகக்கூடிய முயற்சியெல்லாம் முடிந்து விட்டது. இனி ஆண்டவனைப் பார்த்து ஏதாவது அதிசயம் நிகழ்த்தினால்தான் இவர் எழுந்து நடமாட முடியும்' என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள்.

குணசேகருக்குப் பணிவிடை செய்த நேரம்போக, பூஜை அறையிலே இருந்தார் அவரது மனைவி. உலகுக்கு ஊழியம் செய்யப் போய், இப்படி ஒன்றுக்கும் உதவாமல் எல்லாம் போய்விட்டதே என்ற கவலை அவரையும் அடிக்கடி பாடாய்ப் படுத்திக் கொண்டிருந்தது.

இன்பநாதனுக்கோ எதுவுமே விளக்கவில்லை, ஓர் உண்மையான நண்பனை, உயர்ந்த பண்பாளனை, உத்தமனை இப்படி படுத்தப் படுக்கையில் வீழ்த்தி விட்டோமே என்று அவரும் மனம் நொந்து கிடந்தார்.

மூன்று மூலையிலே
    மூனு குளம் வெட்டினேன்
ரெண்டு குளம் பாழ்
    ஒன்னுலே தண்ணியே இல்லே

என்ற பாட்டைத் தான் மனதுக்குள்ளே பாடிக் கொண்டு இருப்பது குணசேகருக்கு வழக்கமாகி விட்டது...

இன்பநாதன் எந்தப்பாட்டைப் பாடுவார்? கடவுள் கை விடமாட்டார் என்ற நம்பிக்கை மட்டும் அவரை நடமாடச் செய்து கொண்டிருந்தது.

# 18. வந்தவன் தந்த சேதி

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியை எழுப்பிக் கொண்டிருந்தன. சர்க்கஸ் கம்பெனி ஒன்று ஊருக்குள் வந்தால், அதை எப்படி பார்ப்பார்களோ எப்படிப் பேசுவார்களோ, அந்த பாணியில், இந்த விளையாட்டுக்களைப் பற்றியும் பொதுமக்களிடையே பேச்சுக்கள் நடைபெற்றன.

இவ்வளவு செலவு பண்ணி ஒரு போட்டியா? நம்ம நாட்டுக்கு இது தேவையா? அநியாயமா இப்படி பண்றாங் களே! ஒரு திட்டம் போட்டு மக்கள் தரத்தை முன்னேத்தக் கூடாதா? விளையாட்டுக்கு இப்படி ஒரு விழாவா! வெட்டிச் செலவா?

விமரிசனங்கள் பல மாதிரியாக விளையாடிக் கொண் டிருந்தன. யானையைப் பார்த்த குருடர்களைப் போல, அவரவர் அறிவுக்கேற்ப பேசிக் கொண்டிருந்தார்கள், ஏசிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது போகாதவர்கள், போக்கத் தெரிந்தவர்கள், என்ன தான் நடக்கிறது பார்க்கலாம் என்கிற சந்தேகம்

பேர்வழிகள், தவறு கண்டு பிடிக்க வேண்டும் என்று தூண்டில்கண் கொண்டவர்கள். எல்லோருக்கும் இந்த விளையாட்டு 'ஒரு தமாஷாக' இருந்தது.

குணசேகர் படுத்தப் படுக்கையிலேயே கிடப்பதால், இந்தப் போட்டிகளைப் பார்த்தால், கொஞ்ச நேரம் பொழுது போகுமே என்று, இன்பநாதன் அவரது அறையில் கொண்டு வந்து டெலிவிஷன் பெட்டியை வைக்க ஏற்பாடு செய்திருந்தார்.

விளையாட்டு பற்றிய செய்திகளையே காதில் வாங்கிக் கொள்ள மறுத்த குணசேகர், இதற்கும் ஒத்துக் கொள்ளவில்லை. இன்பநாதன் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, அரை மனதுடன் அவர் சம்மதித்தார்.

அவ்வப்போது. வேண்டும் போது நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்று நடந்தது. சைனாவுக்கும் வடகொரியாவுக்கும் தான், ஆட்டம் இன்னும் 1 நிமிடம் தான், பந்தை யாரிடமும் தராமல் தட்டிக் கொண்டு இருந்தார்கள் சீன ஆட்டக்காரர்கள். 1 வெற்றி எண் அதிகம் அவர்களுக்கு.

இந்த நேரத்தில், வடகொரிய ஆட்டக்காரர்கள் வசம் பந்து வந்ததும், உடனே தங்கள் பயிற்சியாளரைப் பார்த்தார்கள். அவர் ஒரு சைகை காட்டினார். உடனே ஒரு ஆட்டக்காரர் பந்தை வளையம் நோக்கி எறிந்தார். அது வளையத்திற்குள்ளே விழவும், விசில் ஊதவும் சரியாக இருந்தது.

1 வெற்றி எண் வித்தியாசத்தில், வட கொரியா வென்றது.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்த குணசேகரின் மனம் நெகிழ்ந்தது.

வடகொரியா தென்கொரியா வீரர்கள், மற்றும் வெளி நாட்டு வீரர்கள், ஆட்டத்தில் ஆட இறங்கியவுடன், பார்வையாளர்களைப் பார்ப்பதில்லை. கூக்குரல் போட்டு கலாட்டா செய்யும் சத்தத்தைக் கூட காது கொடுத்துக் கேட்பதில்லை.

பந்தும் இலக்கும் தான் அவர்களுக்குக்குறி. அவ்வப் போது பயிற்சியாளரின் கை அசைவையும் கண் அசைவையும் பார்த்து விளையாடுவதுதான். அது தான் அவர்களின் பயிற்சியும் பழக்கமும்.

அந்தப் பண்பட்ட பயிற்சியால் தான் வடகொரியா தங்கப் பதக்கத்தை வெல்ல முடிந்தது.

பயிற்சியாளரை குருவாக மட்டும் அவர்கள் கொள்ள வில்லை. தெய்வமாக மதித்தார்கள். அவர் சொல்லை வேத வாக்காக ஏற்றுக் கொண்டார்கள். அவர் காட்டும் பாதையை முன்னேற்ற பாதையாக மதித்து நடந்தார்கள். அவர் கண் அசைவு பார்த்துக் காரியம் செய்தார்கள்.

அந்த மதிப்பும் உழைப்பும்தான் அவர்களை, வெற்றி வீரர்களாக உயர்த்தியது. ஒழுக்கமும், உண்மையான விளையாட்டுப் பற்றுமே அவர்களை உயர்ந்த இடத்தில் அமர்த்தியது.

குணசேகரின் நினைவுகள் அவரையும் மீறி துயர நிலைக் குத்தள்ளிய நினைவுகளாகப் போய் அமிழ்ந்து கொண்டன.

வசதிகள் இல்லையென்றால் வறுமை என்கிறார்கள். வசதி செய்து கொடுத்து விட்டால், தற்பெருமை தலை தாங்க முடியாமல், சிந்தை கெட, தறுதலையாகிப் போகின்றார்கள் நம்மவர்கள்.

பயிற்சி தரும் குருவை, சந்தைத் தரகராக நினைக்கிறார்களே தவிர, தனது எதிர்காலத்தை உருவாக்கித் தரும் இணையற்ற ஆசான் என்று நினைக்கும் எண்ணமே இங்கு யாருக்கும் வரவில்லை.

தன்னை விட்டால் இங்கே ஆளில்லை என்ற மண்டைக் கனம். இதை ஒரு பொழுது போக்காக எண்ணும் புறம் போக்கு நினைப்பு. வாலிப கால சேஷ்டைக்கு வழிகாட்டும் வளர்ச்சியாக விளையாட்டைக் கருதும் இரண்டுங்கெட்டான் எண்ணம். 'பேரும் புகழும் கிடைக்கிறதே அது போதும்' என்ற அழுக்குக் கௌரவம், இப்படி மேறு மினுக்கிகளாக மேய்கின்ற ஆட்களே நம் நாட்டில் அதிகம் பேர் இருக்கின்றார்களே தவிர, இலட்சிய நோக்கத்தோடு, இந்த நாட்டின் பெருமையை உயர்த்துவோம் என்ற தாய் நாட்டுப் பற்றுள்ளவர்கள் எத்தனைபேர் இங்கே விளையாட்டில் இருக்கின்றார்கள்? உழைக்கின்றார்கள்?

இதை செய்தால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்று தான் பார்க்கின்றார்களே ஒழிய, இதனால் நமது திறமை எவ்வளவு உயரும்! எந்த அளவுக்கு நமது நாட்டின் மதிப்பு வெளிநாடுகளில் பரவும்? என்று யார் நினைக்கின்றார்கள்?

இந்த நாட்டுப்பற்றைக் குழந்தைப் பருவத்திலேயே பள்ளிகளில் வீடுகளில் நாம் ஊட்டத் தவறியிருக்கிறோம். மேடையிலே இது பேசப்படும் தலைப்பாகப் போனதே தவிர, மக்கள் நெஞ்சிலே வீற்றிருக்கும் வகையில் உணர்த்தத் தவறி விட்டோம்.

அந்த இழப்பு தான், எல்லா வகையிலும் இந்த நாட்டைக் கீழாக இழுத்துக் கொண்டு போகின்றன.

'இஷ்டம் போல் வாழும் இடத்திற்குப் பெயர் தான் இந்தியா' என்று வெளிநாட்டார் கேலி பண்ணும் அளவில் இங்கே மக்கள் வாழ்கின்றார்கள்.

ஒரு சட்டம் வந்தால், அதை எப்படி மீறுவது தப்பித்துக் கொள்வது என்றுதான் முயற்சிக்கின்றார்களே தவிர, அதற்கு எப்படி இணங்கிப் போவது மதித்து நடப்பது என்ற மனப்பாங்கே அற்றுப் போயிற்றே, வற்றிப் போயிற்றேஎன்று எண்ணும் அளவுக்கு விதிகளை நம்மவர்கள் மிதிக்கின்றார்...

இல்லையென்றால், இந்த மூத்துசாமியும் வேணுவும், நேசலிங்கமும் இப்படி அழிந்து போயிருப்பார்களா?

குணசேகர் மனதுக்குள்ளே குமுறிக் கொண்டிருந்தா[ர்] கோடி நினைவுகள் திமுறிக் கொண்டு கிடந்தன.

எவ்வளவு பெரிய நாடு இந்தியா? உலக மக்கள் தொகை நாட்டில், சீனாவுக்கு அடுத்த படியாக இடம் வகிக்கிறதே? தங்கப் பதக்கப் பட்டியலில் 5வது இடம் ஏன்

ஆற்றல் உள்ள மக்கள் இங்கே இல்லாமலா போய்விட்டார்கள்? பயிற்சியில் தவறா! எடுக்கும் முடிவில், போடும் திட்டத்தில் தவறா?

ஏன்? நான் போட்ட திட்டம் எப்படி தவறிப் போ...
ஏன் நான் இந்த நிலைக்கு ஆளானேன்! படுத்தே போனேன்

இப்படி எதிர்மாறாகப் பேசிப் பேசி, தனது சிந்தனை[யை] எரிமலையாக்கிக் கொண்டிருந்தார் குணசேகர்.

இன்பநாதன் அப்பொழுது தான் உள்ளே நுழைந்தார். அவரது முகபாவம், எதையோ குணசேகரிடம் சொல்லி விடவேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு செய்தி உங்களிடம் சொல்லியாக வேண்டும். நீங்க[ள்] சம்மதம் தெரிவித்தால் சொல்கிறேன் என்று பீடிகை போட்[டு] ஆரம்பித்தார்.

சரி என்று தலையசைத்தார் குணசேகர்.

'நம்ம முத்துசாமி இருக்குறனே! அவனை எதேச்சையா சந்திச்சேன்' என்ருர் இன்பநாதன்.

எங்கே? என்பது போல குணசேகர் விழிகள் மலர்ந்தன.

ஒரு பெண்ணுடன் ஓடிப்போய், தன் எதிர் கால வாழ்வை வளமுள்ளதாக மாத்திக்குறேன்னு போறனே, அவனை ஒரு ஆஸ்பத்திரியில சந்திச்சேன்....

குணசேகர் ஆச்சரியமாகப் பார்த்தார்....

ஆமாம்! காசநோய் ஆஸ்பத்திரியில...

அவனை மயக்கி அழைச்சிகிட்டு போன பொண்ணு, இவனை ஏமாத்திட்டு, வேருெருத்தன் கூட போயிட்டா! அவன் நல்ல பண வசதி உள்ளவனும்! முத்துசாமி வெத்தாள்னு தெரிஞ்சதுக்குப்புறம் அவளுக்கென்ன வேலை?

அதே கவலையில் இவன் அதிகமா சிகரெட் குடிச்சானும், ஏற்கெனவே, பெண்சகவாசம்...அதிகமா புகை...வறுமை... என்ன ஆச்சு? கடைசியில் டி.பி வந்தாச்சு...

விளையாட்டுல ஈடுபட்டா டி.பி. வந்துடும்னு பொது மக்கள் நினைச்சு நம்பற மாதிரி இப்படி ஆளுங்க இருந்தா, இந்த நாட்டுல விளையாட்டு எப்படி உருப்படும்?

இந்த முத்துசாமி பண்ணுன தப்பு யாருக்கு தெரியும்? இந்த நிலைமையில் இவனை யாராவது பார்த்தா, விளையாட்டுல சேர்ந்ததனுல்தான் இப்படி ஆயிட்டான்னுதான் நினைப் பாங்க...

அவன்கிட்ட பேசினேன்... ரொம்ப வருத்த
ஓங்களுக்கு செஞ்ச நம்பிக்கை துரோகம் தான், இப்படி
நெஞ்சு காய இருமிச் சாகுறேன், அவர் முகத்துல முழிக்க
கூட எனக்கு முடியலே! எந்த முகத்தை வச்சிக்கிட்டு அவரு
எதிர்த்தாப்புல வர்ரதுன்னுன் !

அவனை பார்க்கனுமே...என்று குழறிக் குழறிப் பேசினார்
குணசேகர்.

வாலிபத்தைத் தவரு பயன்படுத்துனதுனால வந்த
நோயை இப்ப அவன் அனுபவிக்கிருன்...கண் கெட்டபிறகு
பிறகு சூரிய நமஸ்காரம்னு சொல்வாங்களே, அந்த மாதிரி
இருக்கு அவன் நிலைமை......

இன்பநாதன் பேசி முடிப்பதற்குள்ளே, அழுகைச் சத்தம்
கேட்டது. இன்பநாதன் திரும்பிப் பார்த்தார். அவர் பின்னால்
முத்துசாமி நின்று கொண்டிருந்தான்.

மெதுவாக நடந்து வந்து, குணசேகரின் காலடியில்
நின்று குனிந்தான். அவர் கால்களில் தன் முகத்தைப்
பதித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்.

ஐயா ! என்னை மன்னிச்சுடுங்க... நானே என் தலையில்
மண்ணை அள்ளிப் போட்டுக் கிட்டேன். என் வாழ்க்கைய
குட்டிச்சுவராக்கிட்டேன். உங்க வாழ்க்கையையும பாழாக்
கிட்டேன்.

திக்கித் திக்கிப் பேசினான். இடையிடையே இருமினான்.
என்ன செய்வது ? வந்ததற்கு வருந்துவதைத் தவிர, என்ன
பண்ணுவது ?

குணசேகரின் கண்கள் நீரூற்ருக இருந்தன. இன்பநாதன்
மௌனமாக இருந்தார். மனதுக்குள்ளே அழுதார்

நாதன்...முத்துவுக்கு—வைத்தியம் பண்ண...பணம் குடு ... குணசேகர் இன்பநாதனுக்கு இப்படிக் கூறியதைக் கேட்டு முத்துசாமி திடுக்கிட்டான்.

பாவிக்கு இரக்கம் காட்டவேணும்யா...நான் இப்படியே இருமி இருமிச் சாகுறேன்...உலகம் புகழ வைக்குறேன்னு முன்வந்த உங்களை, படுத்த படுக்கையாக்கிட்டு, நானும், செத்த சவம்போல உலவிகிட்டு இருக்குறேனே—எனக்கு எதுக்கு மருத்துவம்? வேண்டாய்யா? வேண்டாம்!

முத்துசாமிக்கு சமாதானம் கூறினார் இன்பநாதன். அவனை அருகே இருந்த நாற்காலியில் உட்கார வைத்தார்... சிறிது நேரம் அமைதி நிலவியது. முத்துசாமி கண்களைத் துடைத்தவாறு பேசத் தொடங்கினான்.

சார்! இந்தப் பத்திரிக்கையை படிச்சீங்களா?

என்ன விஷயம்!

சார்! நம்ம வேணுவைப் பத்திய விஷயம்...

இன்பநாதன் ஆவலுடன் பத்திரிக்கையை வாங்கிப் பார்த்தார்!

வேணு! உனக்கு இந்த நிலைமையாவரணும்?

இன்பநாதன் தன்னையறியாமல் கத்தியதைக் கேட்ட குணசேகர் திடுக்கிட்டார்!

# 19. நல்லதைத்தானே நினைத்தேன்!

அந்தப் பத்திரிக்கையில் வந்த செய்தி இன்பநாதனை வீறிட்டு அலற வைத்தது.

படிங்க என்றார் குணசேகர் மெதுவாக...

கல்லூரி மாணவனுக்கு பயங்கர விபத்து.

மின்சார ரயிலில் பயணம் செய்த வேணு என்ற கல்லூரி மாணவன். மாம்பலம் சைதாப்பேட்டைக்கு இடையில் கீழே விழுந்து விட்டார். வலதுகை நொறுங்கிப் போனதால் மயக்க மடைந்த அந்த வாலிபரை, ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கின்றார்கள்.

அதிகமாக மது குடித்திருந்த காரணத்தால் தான் கீழே விழுந்து விட்டார். என்று போலிசார் கூறினார்கள்.

இன்பநாதன் படித்து முடித்ததும், குணசேகர் திகைத்த வாறு, முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார்.

குடிப்பழக்கம் இப்படி ஒரு கொடுமையா போச்சே! அவன் வலதுகை நொறுங்கிப் போச்சே! இனிமே என்ன பண்ணப் போறான்? இன்பநாதன் வேதனையுடன் பேசினார்.

சார்! இலட்சியம் இல்லாத வாழ்க்கை அவலட்சணமா போயிடும்னு சொல்வாங்க சார். அதுக்கு நாங்க ரெண்டு பேரும் தான் உதாரணம். நாங்க இனிமே எதுக்கும் லாயக்கு இல்லிங்க...

காலேஜ் ஸ்டுடன்ஸ்னு சொன்னா—கண்டபடி அலையனும், சுதந்திரமா திரியனும், நினைச்சதெல்லாம் பேசனும், நிலைகெட்டு குதிக்கனும்—யாரையும் மதிக்காம இருக்கனும்ங்கற ஒரு வரட்டுக் கொள்கை, எல்லாத்தையும் கெடுத்து, நம்ம சமுதாயத்தையே எப்படி கெடுக்குதுங் கறதுக்கு எங்களை பார்த்து எல்லாரும் புரிஞ்சுக்கனும்.

இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பம் யாருக்குக் கிடைக்கும்? எங்களுக்குத் தான் கிடைச்சது. ஒரு அரசாங்கம் கூட ஏத்துக்க முடியாத பொறுப்பை ஐயா தர்ரதுக்கு முன் வந்தாங்க—சாக்கடையில போட்ட சந்தனம் மாதிரி ஆயிடுச்சே!

நாங்க தான் இப்படி போயிட்டோம்....அந்த நேசலிங்க மாவது நல்லது பண்ணியிருக்கக் கூடாதா? முத்துசாமி மிகவும் வேதனைப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தான்.

வேணுவைப் போய் முத்துசாமியும் இன்பநாதனும் ஆஸ்பத்திரியில் பார்த்தார்கள்.

துணியாய் துவண்டு கிடந்தான் வேணு. ஆள் பிழைத்ததே அதிசயம் என்றார்கள் அங்கே—கைகளிலு தலையில் பலத்த கட்டுடன் படுத்திருந்தான்.

இன்பநாதனைப் பார்த்ததும் வேணு அலறித் துடித்தது. பார்க்க மிகவும் பாவமாக இருந்தது. அழுது முடியட்டும். அப்பொழுதுதான் அவன் மனம் இலேசாக இருக்கும் என்று மௌனமாக அமர்ந்திருந்தார் இன்பநாதன். முத்துசாமியோ அவன் இன்னொரு கையை பிடித்தபடி இருந்தான்.

நேத்து நான் Friends கூட சேர்ந்து நிறைய குடிச்சுட்டேன். மாப்பலத்துல, பாண்டிபஜார்ல உள்ள தியேட்டருக்குப் போய்தான் ஆகனும்னு பிடிவாதம் பிடிச்சேன். மற்றவங்களும் வந்தாங்க...டிரெயின்ல ஒரே கூட்டம். எல்லாம் அடுத்த டிரெயின்ல போகலாம்னு சொன்னாங்க...

நான் தான் முடியாது; இதில் போகலாம்னு சொல்லி ஏறினேன். கம்பியை பிடிச்சி தொங்கினேன். நான் தான் பெரிய ஸ்போர்ட்ஸ் மேன்னு நினைப்பு...அந்த அசட்டு தைரியம், அநியாய கௌரவம்...அடங்காததற்பெருமை... அறிவில்லாத ஆணவம்... இதுங்க விரட்ட நான் ஏறுனேன்... போதையில ஒன்னும் புரியலே...கீழே விழுந்துருக்கேன். இப்ப என்னை பார்த்தீங்களா ஐயா! இனிமே நான் எந்த கையால சாப்புடுவேன்...எந்த கையால இரும்புக்குண்டு எறிவேன்...என் தப்புக்கு சரியான தண்டனை. கடவுள் சரியான நீதிபதி தான்—அழுகையும் பேச்சுமாக வேணு பிதற்றிக் கொண்டிருந்தான்.

கெட்டு போனதுக்குப்புறம் தான் எல்லாம் தீருந்துருங்க.... அவங்களை என்ன செய்யுறது! மன்னிக்கத்தான் முடியும். மறுவாழ்வு தர முடியுமா!

விளையாட்டுல கெட்டிக்காரரா வரனும்னு ஒரு முறை தான் முடியும். உடம்பு சக்தியோட இருந்தாதான் முடியும். இப்படி கெட்டுப்போனபிறகு, மறுபடியும் முயற்சி செய்தா முடியுமா!

ரப்பர் பந்து ஒன்று... நல்ல வேளை. இதே கிரிக்கெட் பந்தாக இருந்தால் என்ன ஆவது!

சிறுவர்கள் பலர் சேர்ந்து கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந் தனர். சிலர் சடுகுடு ஆடினர். வேறு சிலர் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இயற்கையாக உள்ள இயக்கம்தானே இந்த விளையாட்டு. இதனை வளர்க்கத்தானே உடற்கல்வித்துறை. இதில்பாடு படத்தானே உடற்கல்வி ஆசிரியர்கள்!

வளரும் குழந்தைகள் உள்ள பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர்கள் இருந்தால் மைதானம் இல்லை. மைதானம் இருந்தால் விளையாட்டுப் பொருட்கள் இல்லை. இன்னும் எல்லா வசதியும் இருந்தால் ஆசிரியர்கள் இடையே பல பிரிவுகள்.

உடற்கல்வி ஆசிரியர்களிடையே எத்தனை பிரிவுகள்— லோயர், ஹையர், டைரக்டர் என்ற பிரிவுகள். ஒருவரை ஒருவர் குறைகூறியும். முறையில்லாமல் நடந்து கொண்டும் ஒருவாறு இந்தத் துறையையே தரம் தாழ்த்திக் கொண்டிருக் கின்றார்கள்.

விளையாட்டுக் குழுக்கள் என்று மாவட்ட மாநில அளவில் இருக்கிறது என்றால், அதில் உடற்கல்வி ஆசிரியர் கள் உள்ளே போக முடியாத அளவு அவல நிலை. மாவட்ட மாநில தேசிய அளவில் நடுவர்கள் என்றால், அதிலும் போய் போட்டியிட்டு ஒருவராக பணியாற்ற முடியாத சூழ்நிலை...

விளையாட்டைத் தெரிந்தவர்கள் விளையாட்டுத் துறையை ஆள்கிறார்கள். விளையாட்டைப் படித்தவர்கள். விளையாட்டு

தான் வாழ்வென்று வாழ்பவர்கள். அவர்களுக்கு ஏவலாளர்களாகப் பணியாற்றுகின்றார்கள்.

இந்த நிலையில் இளைஞர்கள் எப்படி சிறந்த வீரர்களாக வீராங்கனைகளாக வர முடியும்? அவர்களுக்கு வழிகாட்ட யார் இருக்கின்றார்கள்! திறமை உள்ளவர்கள்கூட சிபாரிசு இல்லாத காரணத்தால், அழுத்தப்படுகின்றார்களே!

சிபாரிசு தானே நமது விளையாட்டுத் துறையை கெடுக்கிறது?

உயர்ந்த நோக்கத்தை, கட்டுப்பாடான வாழ்க்கை முறையை, விளையாட்டு நுண்திறனை யார் கற்பிக்கின்றார்கள்?

விளையாட்டுத்துறை பணம் செலவு செய்யும் பணித்துறையாகப் போய் கொண்டிருக்கிறதே! லட்சியமில்லாத திட்டங்கள்—பணத்துக்காக பணியாற்றுகின்ற ஊழியர்கள், சிறந்த ஆசிரியர்களுக்கு மரியாதை கிடைக்காத சூழ்நிலைகள், முரண்பட்டான கருத்துக்கள்—முரட்டுத்தனமான பேச்சுக்கள்.

எப்படி இங்கே விளையாட்டுத்துறை வளரும்?

யாரிடம் கோபித்துக் கொள்வது? யாரைத் திருத்துவது? ஆத்திரப்படுவதில் அர்த்தமே இல்லைதான்—

நாலரை கோடி மக்கள் உள்ள தமிழகத்தில் ஒரு வீரர் வீராங்கனை கூட இந்தியப் பிரதிநிதியாகப் போக முடியவில்லையே...

இப்படி எல்லாம் இன்பநாதனின் மனக்கடலில் நினைவலைகள் வந்த வந்து போய்க் கொண்டிருந்தன—அலைகள் கரையோடு நின்று போவது போல அவரது ஆசைகள் மனத்தளவிலே நின்று போயின,

என் காலத்திலே ஒரு நல்ல வெற்றியைப் பார்க்கலாம் என்று முயற்சித்தேன். மலை யுயில் கட்டிய மணல் வீடுபோல ஆயிற்றே! புயலில் ஏற்றிய அகல் விளக்குபோல் அணைந்து போயிற்றே! செவிடர்கள் காதில் ஊதிய சங்காயிற்றே!

காலில்லாதவர்களுக்கு செருப்பு எதற்கு? லட்சியம் இல்லாதவர்களுக்கு உதவி எதற்கு?

யார் மேலேயும் ஆத்திரப்படவேண்டிய அவசியமில்லை. இந்த நாட்டின் தலைவிதி, என்று நினைத்துக் கொண்டபோது அவருக்கு மனதில் கொஞ்சம் இதம் தெரிந்தது!

ஆமாம்! இந்திய மக்களுக்கு 'தலைவிதி' என்ற சொல் தான் அத்தனை துன்பங்களையும் போக்கும் அருமருந்து. அந்த விதியை நினைத்து ஆறுதல் அடைந்தார்! ஆனால் விதியின் வேலை அவருக்குத் தெரியாதா என்ன?

போனதையே முடிச்சுக்கள் போட்டு முடிந்து கொண்டிருந்தது.

முறுக்கு சுண்டல், முறுக்கு சுண்டல், என்று கத்திக் கொண்டே ஒரு பெரியவர், கையில் டிபன் பாக்சுடன் வந்து பநாதனின் எதிரே நின்றார். இன்பநாதனோ அவரைப் பார்த்தாரே ஒழிய, எந்தவித சலன பாவமும் அவர் முகத்தில் தான்றாமல், பார்த்துக் கொண்டேயிருந்தார்.

என்ன சார் பார்க்கறீங்க? இந்த வயசுலயும் இப்படி தூக்கித் தூக்கி அலேஞ்சி வியாபாரம் பண்ணி, வயித்தைக் கழுவுறேன்னு பார்க்குறீங்களா! நான் ரொம்ப நல்ல நிலையில் இருந்தவன் சார். பெத்த புள்ளைங்க என்ன மோசம் பண்ணி வீட்டைவிட்டே விரட்டிடுச்சுங்க. வெளியே தலே காட்ட வெட்கப்பட்டுகிட்டு, பட்டணத்துக்கு ஓடி வந்துட்டேன். வயிறுன்னு ஒன்னு இருக்கே...அதுக்குத்தான் இந்த வேலே. என்ன பண்றது? எதிர்பார்த்தது எல்லாம் நடந்துட்டா; இந்த உலகத்துல இருக்குறவன் எல்லாம் தன்னேயே தெய்வம்னு சொல்லிடுவானுங்க...அப்படி இல்லடா...நீங்கள் லாம் மனுஷனுங்கதான்னு மண்டையில் அடிச்சு சொல்ற மாதிரிதான், நாம் நினேக்காதது எல்லாமே திரும்பத் திரும்ப நடக்குது...தெய்வம் தெய்வம்தான்.மனுஷன் மனுஷன்தான்...

பெரியவர் தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டே நின்றார்.

இன்பநாதனுக்கு மனசு இலேசாக நெகிழ்ந்தது. இப்படி உட்காருங்க என்றார்.

எல்லாத்தையும் வித்தாகனும் சார்...அப்பதான் ஏதாவது கிடைக்கும். இன்னேய பொழைப்பை ஓட்டனுமே என்றார்...

'மொத்தமா என்கிட்ட கொடுத்துடுங்க...நானே வாங்கிக்குறேன்' என்று இன்பநாதன் சொல்லி முடிக்கு முன்னமே அந்தப் பெரியவர் எதிரே உட்கார்ந்து கொண்டார்...

நீங்க ஏதோ கஷ்டத்துல வந்து உட்கார்ந்துகிட்டு இருக்குறீங்க—நான் ஏதோ, என் கஷ்டத்துக்குப் பேசிக்கிட்டு இருக்குறேன். நஷ்டத்துக்கு வியாபாரம் பண்ணுன குடும்பத்தலைவன் நான். அதுதான் என் அனுபவம்... நீங்களும் என் மாதிரிதானு?...பெரியவர் உரிமையுடன் பேசினுர்.

நீங்க ஒங்க சொந்தப் புள்ளைங்களாலே வேதனை அடைஞ்சிங்க... நானே தத்துப் புள்ளைங்களாலே தத்தளிச்சுப் போய் நிக்குறேன்.

எந்தப் புள்ளைங்களா இருந்தா என்னங்க...இனிமே வரப்போற வாரிசுகளும் வாலிபர்களும்—சரிப்பட்டு வரமாட்டாங்க—கண்டதே காட்சி கொண்டதே கோலம்ங்குற குரங்கு கொள்கையா இருந்து, கூரையில நெருப்பை வச்சிட்டு அதுலயே குந்திகிட்டு வேடிக்கை பார்க்குற ஆளுங்க மாதிரி ஆய்ட்டாங்க—

நீங்க தான் பார்க்குறீங்களே ! நம்ம காலத்து ஆளுங்க எவ்வளவு வாட்டசாட்டமா இருந்தாங்க...உடம்பு பெரிசா இருந்தது : அது மாதிரியே மனசும் விசாலமா இருந்தது. இப்ப பாருங்க...பசங்க சைஸ் எப்படி குறைஞ்சுகிட்டே வருது—குரங்கிலிருந்து மனுஷன் வந்தான்னு சொன்னுங்க— இன்னும் கொஞ்சகாலம் போய்ட்டா, மனுஷன் உயரமும் குரங்கு அளவுக்குப் போயிரும்போல இருக்குது—

பெரியவர் ஏதோ புதுமையான கருத்தை சொல்லி விட்டது போல சத்தம் போட்டு சிரித்தார் அவர் முகம் பிரகாசமாக இருந்தது. இன்பநாதனும் சிரித்து விட்டார்....

உண்மைதான்... பசங்க சைசு குறைஞ்சு தான் போச்சு எப்படியோ வாழ்ந்தா போதும்னு நினைப்பு எல்லாத்துகிட்டயும் வந்துடுச்சு... இப்படியே போனு நாடு எங்க உருப்படும்....

பெரியவர் டக்கென்று அதற்குப் பதில் சொன்னார். நீங்க ஒன்னு... நரி வலம் போனா என்ன இடம் போனா என்ன மேலவிழுந்து பிடுங்காம இருந்தா சரின்னு போயிடுறதுதான் புத்திசாலித்தனம்... யாரும் யாருக்கும் புத்தி சொல்லக்கூடாது. புத்தி சொல்றவன் மடையனாயிடுறான்... உதவி பண்றவன் இளிச்சவாயன் ஆயிடுறான்......

இன்பநாதன் இந்த ஆழமான அனுபவ வார்த்தைகளில் மயங்கிப் போனார், எவ்வளவு இலேசாக இவர் பேசுகிறார்? அந்த அளவுக்கு அவர் கஷ்டப்பட்டுப் போயிருக்கிறார் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

ஒரு பெரிய பேப்பரை எடுத்து, எல்லா முறுக்கையும் கட்டத் தொடங்கினார்.

இது ரொம்ப பழைய பேப்பருங்க....

இருக்கட்டுமே...பார்த்தபிறகு பொட்டலம் கட்டலாம்.

அவசரமாக வாங்கினார். அந்தப் படத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தார். திருப்பித் திருப்பி, பல கோணங்களிலும் வைத்துப் பார்த்தார்...

இந்தத் தாடியை எடுத்துட்டா, நம்ம நேசலிங்கம் மாதிரி தான் இருக்கும்...பேரும் நேசம்னு போட்டிருக்கு : 'சிப்பாய்னு போட்டிருக்கு....நம்ம நேசமா இவன்...

சார்! எனக்கு நேரமாவுது...புறப்படுறேன் என்றார் பெரியவர்...

இந்தாங்க...10ரூபாய் என்று அவர் கையில் திணித்து விட்டு நீங்க போங்க....ஒங்க அன்பான பேச்சுக்கு நன்றி

என்று பெரியவரை அனுப்பி வைத்துவிட்டு, மீண்டும் பத்திரிக்கையைப் பார்த்தார்...

ஆசிய விளையாட்டுக்களில் இந்தியாவுக்குத் தங்கம் வாங்கித் தந்த வீரன் நேசன் என்று எழுதியிருந்தது.

பத்தாயிரம் மீட்டர் ஓட்டத்தில் முதல் பரிசு...எல்லைப் படையில் ஒரு சிப்பாய்... ஆனல் ஓட்டத்திலோ மேஜர் என்று வருணிக்கப்பட்டிருந்தது.

ஒருவேளை... நமது நேசசிங்கம்தான் வெற்றி வீரன் ஆகி விட்டானே... இதைப் போய் குணசேகரிடம் சொல்லவேண்டும் என்ற வேகம் அவருள் எழுந்தது...

கவிழ்ந்து போய் விடுமோ என்று பார்ப்பவர்கள் அச்சப் பட்டு விலகிக் கொள்ளும் அளவில் ஆட்டோ வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அது என்னவோ அட்டை ஊர்வது போலப் போகிறது என்று இன்பநாதன் குறைபட்டுக் கொண்டே உள்ளே பதணியாக உட்கார்ந்திருந்தார்.

குணசேகர் வீடு வந்ததும், பத்து ரூபாயைக் கொடுத்து விட்டு சில்லறைகூட வாங்கிக் கொள்ளாமல், சிறுத்தை பாய்வது போல, இன்பநாதன் பாய்ந்து சென்றார்.

டாக்டர் இன்ஜெக்ஷன் போட்டுக் கொண்டிருந்தார். குணசேகர் காய்ச்சலால் முனகிக் கொண்டிருந்ததை சகிக்க முடியாமல், முகத்தை மூடியவாறு அழுது கொண்டிருந்தாள் அவரது மனைவி.

சீக்கிரம் காய்ச்சலோட வேகம் குறைஞ்சுடும். நான் சொன்ன மாதிரி மருந்தை கொடுத்துகிட்டு வாங்க...என்று சொல்லி விட்டு டாக்டர் புறப்பட்டார்.

இன்பநாதன் வந்த வேகத்தைப் பார்த்த குணசேகரின் மனைவி, அவரை தொந்தரவு செய்ப வேண்டாம் என்பது போல ஜாடையாகச் சொல்லிவிட்டு, உள்ளே போய்விட்டார்.

இன்பநாதனுக்கோ தர்ம சங்கடமாகப் போய்விட்டது. குணசேகரின் மனைவியின் எச்சரிக்கையை மீறவும் முடிய வில்லை... தான் கொண்டுவந்த சேதியை அவரால் சொல் லாமல் இருக்கவும் முடியவில்லை—

உட்கார்ந்திருந்த அவரால் அமைதியாக இருக்க முடிய வில்லை, எழுந்து இப்படியும் அப்படியுமாக நடக்க ஆரம்பித் தார். கைகளைப் பிசைந்து கொண்டார். இருப்பு கொள்ளாமல் தவித்த அவரது நிலை, பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

# 21. நடந்து வந்த நன்மை!

"எப்படி குணசேகரை சந்திப்பது? எப்பொழுது நேசலிங்கத்தைப் பற்றிப் பேசுவது? ஆட்டோவில் அவசரமாக வந்துங்கூட, இப்படி வீணைக் காத்திருக்கும் விபரீதம் ஏற்பட்டு விட்டதே! குணசேகர் மனைவி கொடுத்த கட்டளையை மீறி நடந்து, அவர்களையும் ஏன் ஆத்திரப்படச் செய்ய வேண்டும்?

என்னை நம்பித்தானே இந்தப் பணியில் குணசேகர் இறங்கினர்? என்னால் தானே பணத்தை அள்ளி அள்ளி இறைத்தார்? என்னால்தானே இன்று இந்த அவல நிலைக்கு ஆளாகி, படுத்தப் படுக்கையாகிக் கிடக்கிறார்?

எப்படி இவரைத் தேற்றுவேன்? எப்பொழுது இவர் நடந்து வருவதைப் பார்ப்பேன்? இந்த விளையாட்டுத்துறை வளர்ந்தால் என்ன? விழுந்தால் என்ன? எரிச்சலுடன் இன்பநாதன் தனக்குத் தானே பேசிக் கொண்டார்

உடும்பு பிடிக்கப்போய் உடும்பிடம் கையைக் கொடுத்து விட்டு உடும்பு போனாலும் பரவாயில்லை. கையை விட்டால்

போதும்' என்ற கதைபோல, இன்பநாதன் எண்ணமிட்டபடியே நடந்து கொண்டிருந்தார்.

யாரோ ஒருவர் குணசேகர் படுத்திருந்த அறைக்குள்ளே நுழைவது போல தோன்றியது. அந்த அறையிலிருந்தவாறே எட்டிப் பார்த்தார் இன்பநாதன்.

உள்ளே சென்ற அந்த உருவம் குணசேகரைப் பார்த்து ஸ்தம்பித்துப்போய் நின்றது. பிறகு கைகுவித்து வணங்கியது. அவரது கால்களைத் தொட்டுக் கும்பிட்டு, தன் கண்களில் ஒற்றிக் கொண்டது. சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு தன் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தது.

இன்பநாதன் என்ன நடக்கப் போகிறது என்று பரபரப்புடன் அந்த உருவத்தின் செய்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஏதாவது தவறாக நடந்தால், உடனே ஓடிப்போய் தாக்கி விடுவித்திட வேண்டும் என்ற ஒரு நினைவுடனும் தயாராக இருந்தார்.

குணசேகர் கண்களை மூடியவாறு படுத்திருந்தார், நல்ல காய்ச்சல். அவரை அறியாமலே அவரது வாய் எதை எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அவர் படும் வேதனைகளை பார்க்க சகிக்காமல் அந்த உருவம் தேம்பித் தேம்பி அழத் தொடங்கியது.

"அய்யா! ரொம்ப நாளைக்குப் பிறகு ஒங்களை பார்க்க வந்திருக்குறேன்யா! ஆனா நீங்க இப்படி ஆயிட்டீங்களே! இந்த நிலையில் உங்களை பார்க்கவா நான் ஓடோடி வந்தேன்....ஒங்க கனவை நான் நனவாக்கிட்டேன். இதோ பாருங்க, நான் ஆசியப் போட்டியில ஜெயிச்ச தங்கப்பதக்கம்....

ஒரு அழகான பெட்டியில் வைத்திருந்த தங்கப்பதக் கத்தை எடுத்து அவரது கால்களின் மேல் வைத்துவிட்டு கீழே அமர்ந்து அவரது கால்களைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது அந்த உருவம்.

இன்பநாதனுக்கு என்ன செய்வது, என்ன சொல்வ தென்றே புரியாமல், அந்த அறைக்குள் ஓடிவந்தார்.

நேசலிங்கம் நீயா? என்று கூறிக் கொண்டே அந்த உருவத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

நீங்க எப்ப வந்தீங்க? எப்படி இருக்குறீங்க? என்று நேசலிங்கம் அன்போடும் ஆச்சரியத்தோடும் கேட்டான்.

நான் எங்கேப்பா போனேன்! எப்பவும் இங்கேதான் இருக்குறேன். உங்க மூணு பேரையும் நம்பி இருந்த இவரு அதே விசாரத்திலல் படுக்கையில விழுந்துட்டாரு. கால் கை விளங்காம போச்சு...எந்த வைத்தியமும் இவரைக் குணப் படுத்த முடியலே...உன்னை பார்த்த பிறகுதான் எனக்கு உயிரே வந்துச்சு...

நேசலிங்கத்திற்கு இப்பொழுதுதான் உண்மை விளங் கியது. குணசேகர் முகத்தை உற்று நோக்கினான். பிரகாச மாக கவர்ச்சிகரமாகத் தோன்றும் அவரது முகம், மங்கிய நிலவாகத் தெரிந்தது. அவனையறியாமல் அவன் செயல்படத் தொடங்கி விட்டான்.

அய்யா! உங்க நேசலிங்கம் வந்திருக்குறேன். கண்ணை தொறந்து பாருங்க. உங்க லட்சியம் வெற்றியடைஞ்சிடுச் சுங்க. இதோ பாருங்க தங்கப்பதக்கம்...உங்க நம்பிக்கை வீண் போகல. உங்க லட்சியம் தோல்வி அடையல, நீங்க எடுத்த முயற்சி வீணா போகலே...இதோ பாருங்க...

அவரது கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறினான் நேசலிங்கம். குணசேகர் மெதுவாகக் கண்விழித்துப் பார்த்தார்.

நேசலிங்கம் வந்திருக்கான். தங்கப்பதக்கத்தோட வந்திருக்கான். நம்ம நேசலிங்கம்... நம்ம நேசலிங்கம். இல்பநாதன் உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டிருந்தார்.

குணசேகர் மெதுவாகக் கண்களைத் திருப்பி நேசலிங்கத்தைப் பார்த்தார். 'அய்யா நான் தான் நேசலிங்கம். நான் உங்களை மோசம் பண்ணலே. உங்களை விட்டுவிட்டுத்தான் ஓடினேனே தவிர, நான் ஒரு நிமிஷம் கூட, உங்களை மறக்கலே, உங்களை வந்து பார்க்க வெட்கப்பட்டுட்டுதான் நான் சண் காணாத இடத்துக்கு ஓடினேன். நான் திரும்பி வந்துட்டேன்யா...

குணசேகர் நேசலிங்கத்தைப் பார்த்து யாரென்று புரிந்து கொண்டார். எழுந்திருக்க முயற்சி செய்தார் சுவாதினம் இழந்த கையை தூக்க முயற்சித்தார். கால்களை அசைத்துப் பார்த்துக் கொண்டார். முடியவில்லை. ஒன்றும் முடியவில்லை.

அய்யா ! இந்தாங்க தங்கப்பதக்கம்... தங்கப்பதக்கம். உங்க நேசலிங்கம் கொண்டு வந்திருக்குறேன்.

அசைக்க முடியாத கையோ அதிர்ந்து கொண்டிருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு அசைக்க முயற்சித்தார். படபடத்துப் போய் முகம் வியர்த்து விட்டது.

இன்னொரு கையால் தங்கப்பதக்கத்தை வாங்கி வாஞ்சையுடன் அழுத்திப் பிடித்துக் கொண்டார் குணசேகர். இருபுறமும் மாறி மாறி விரல்களால் தடவிப் பார்த்தார். அவர் மனதில் பொங்கும் மகிழ்ச்சியை முகம் மிகத் தெளிவாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தது...

நேசலிங்கத்தை அருகில் வருமாறு சைகை செய்து முகத்தைத் தடவிக் கொடுத்தார், அவனை அருகில் படுக்கையின் மீது அமருமாறு சைகை காட்டினார்.

பேச விரும்பாத அவர் மனம் பேச ஆசைப்பட்டது. பேசத் திறக்காத அவர் வாய், பேசத் துடித்தது. ஊறித் தவித்த நாக்கோ, உற்சாகம் பெற்றதுபோல துடிக்கத் தொடங்கியது.

எப்படி....எப்படி என்று உளறியபடி குணசேகர நேசலிங்கத்தைக் கேட்டார். இன்பநாதனும் பேசும்படி அவனைத் தூண்டினார். நேலிங்கம் தனது கதையைச் சொன்னான்.

முத்துச்சாமியும் வேணுவும் செய்த கொடுமையைப் பார்த்தபிறகு, எனக்கே பொறுக்க முடியலிங்க, அவமானமா போயிடுச்சு, யார்கிட்டேயும் சொல்லாம நான் வடநாட்டுக்கு ஓடிப் போயிட்டேன்.

பசியும் பட்டினியுமா அலைஞ்சி திரிஞ்சேன். காஞ்ச ரொட்டியைக்கூட கண்ணுல பார்க்காம, நாலைஞ்சி நாள் கூட பட்டினியா கிடந்தேன். இனிமே பிச்சையெடுத்துத் தின்னா தான். உயிர் பிழைக்க முடியும்னு உறுதியா நம்புனேன்.

பிச்சைக் கேட்குறதுன்னு முடிவு பண்ணிட்டு பஸ் ஸ்டாண்டு கூட்டத்துக்குப் போனேன். நான் போய் கேட்ட முதல் ஆளு என் கூட படிச்ச நண்பனா இருந்தான்.

என்னை அவன் யார்ன்னு புரிஞ்சிகிட்டான். கட்டி புடிச்சிகிட்டான், என்னோட பரிதாப நிலையை அறிஞ்சி கண்ணீரே விட்டான். ஓட்டலுக்குக் கூட்டிகிட்டுப் போய், வயிறு நிறைய வாங்கிக் கொடுத்தான்.

பசி போனபிறகு என் கதையைச் சொன்னேன். இப்படி ஒருத்தரு இந்தக் காலத்துல இருக்காரான்னு ஆச்சரியப் பட்டான். அவனோட வீட்டுக்கு அழைச்சுகிட்டுப் போனான். அப்பாகிட்ட உண்மையைச் சொன்னான்.

என் நண்பனோட தகப்பனார் உதவி செய்தாரு. எல்லை பாதுகாப்புப்படையில் போய் ஒரு சிப்பாயா சேர்த்து விட்டாரு. அங்கே போன சமயத்தில் நடந்த ஒரு பந்தயத்துல நானும் கலந்துகிட்டேன். என் திறமையை பார்த்த அவங்க எனக்கு உதவி செய்யத் தொடங்கினாங்க ...

எனது லட்சியம் ஈடேர்ற வரைக்கும் நான் மீசை தாடியை எடுக்குறதுல்லன்னு முடிவு பண்ணிகிட்டேன். வெற்றி பெற்றபிறகு தான் உங்களை வந்து பார்க்கனும்னு பிரார்த்தனை பண்ணிகிட்டு இராப்பகலா, நேரம் கிடைக்குறப் பெல்லாம் ஓடத் தொடங்கினேன்.

என்னோட மனசுல ஓட்டப்பந்தயத்தைத் தவிர எதுவுமே இடம் பெறலே. உங்களை நினைச்சு கைபெடுத்துக் கும்பிட்டுட்டுத் தான் ஓட்டத்தை ஆரம்பிப்பேன். என் உடம்புல சக்தி இருக்குறவரைக்கும் ஓடிக்கிட்டே இருப்பேன்.. இனிமே முடியாதுன்னு நினைச்சாலும், தள்ளாடித் தள்ளாடி ஓடுவேன். நிறுத்த மாட்டேன்.

என்னோட உடம்பு ரொம்ப பலவீனமா போயிடுச்சு. அதிகமான ஓட்டம் உடம்புக்கு ஒத்துக்கலே...... இரண்டு தடவை இரத்த வாந்தி எடுத்தேன்.

ஆஸ்பத்திரியில் பெட்ல என்னை அட்மிட் பண்ணினாங்க. இனிமே ஓடினா உயிருக்கு ஆபத்து வந்திடும்னு சொன்னாங்க... என் உயிரே போனாலும்சரி, நான் என் முடிவை மாத்திக்க முடியாதுன்னுஉறுதியா சொல்லிட்டேன்.

கொஞ்ச நாள் கழிச்சி உடம்பு குணமானதும், மீண்டும் ஓடினேன். இந்த நேரத்தில்தான் ஆசியப் போட்டியும்

வந்தது. என்னை இந்திய நாட்டு சார்பாக ஓடுறதுக்கு தேர்ந்தெடுத்தாங்க. ஆனா, என் பேரை நேசான்னு தான் தந்தாங்க. தலைமுடியும் மீசையும் என்னை வடநாட்டு ஆளா காட்டுச்சே தவிர, தமிழனு அடையாளம் காட்டலே...

தங்கப் பதக்கம் வாங்கி. வெற்றி பெற்ற உடனே உங்களை வந்து சந்திக்கலாம்னு புறப்பட்டேன் ஆனா மறு நாளே எனக்கு மலேரியா காய்ச்சல் வந்துடுச்சு. பல மாதங்கள் கஷ்டப்பட்டேன்.

'நேசம் ஒரு கடுதாசி போட்டிருக்கலாமே' என்றார் இன்ப நாதன்.

உங்களை வந்து நேரா பார்த்து கால்ல விழுந்து இந்த வெற்றிச் செய்தியை சொல்லத்தான் நான் ஆசைப்பட்டேன். வெறும் கடுதாசியிலே என் மனசைக் காட்ட ஆசைப்படலே.

யார் கிட்டேயும் இந்த விஷயத்தை சொல்லாம மனசுக்குள்ளே போட்டு குமுறிக்கிட்டே இருந்தேன். லீவு கிடைக்க இத்தனை நாளாச்சு...அதுக்குப் பிறகு தான் இங்கே வந்து பார்த்தா...ஐயா இப்படி இருக்காரு...

வார்த்தையை முடிக்காமல் கண்களை மூடியவாறு நேசலிங்கம் அழுது கொண்டிருந்தான். இன்பநாதன் மறுபுறம் திரும்பிக் கொண்டு, கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

நேசலிங்கம் தன்னை யாரோ கட்டிப்பிடிப்பதைப் போல உணர்ந்து திடுக்கிட்டுப் பார்த்தான். படுத்திருந்த குணசேகர் தான் எழுந்து உட்கார்ந்து, அவனை ஆரத் தழுவிக் கொண்டிருந்தார்.

அய்யா !

இன்பநாதன் திரும்பிப்பார்த்தார். குணசேகர் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து, வீட்டிற்குள் ஓடி குணசேகரின் மனைவியை அழைத்துக் கொண்டு வந்தார்.

என்னங்க... ஒங்களுக்கு நல்லா போயிடுச்சுங்க என்று மற்றவர்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல் குணசேகரின் மனைவி அவரை கட்டித் தழுவிக் கொண்டார்.

நேசலிங்கம் எழுந்து நின்று கொண்டான். இப்பொழுது இன்பநாதனின் அன்புப் பிடியிலே கிடந்தான் நேசலிங்கம்.

தங்கப்பதக்கத்தை எடுத்து தன் மனைவியிடம் நீட்டினார் குணசேகர்.

தன் கணவன் காட்டிய பதக்கம் தங்கப் பதக்கமாக அவளுக்குத் தெரியவில்லை. தனக்கு வாழ்வு தருவதற்காக வந்த தெய்வ பரிசாக, தேவாமிர்தக் கலசம் போலவே அது தெரிந்தது. அப்படியே வாங்கி மார்புற வைத்துத் தழுவிக் கொண்டாள்.

மனதுக்குள்ளே அந்த நேசலிங்கத்தை மனமார வாழ்த்தினாள். மண்டியிட்டு வணங்கினாள். மீண்டும் புனர்ஜென்மம் அளித்த ஒரு புத்திரனாக எண்ணி மகிழ்ந்தாள்.

தனக்கும் ஒரு குழந்தை இதுவரை இல்லையே! இவனையே தன் குழந்தையாக தத்தெடுத்துக் கொண்டால், வீட்டிலும் இன்பமயமாக இருக்குமே என்று ஒரு நினைவு எழுந்ததும், உடல் சிலிர்த்துப் போனாள். அந்த ஆசையைத் தன் கணவனிடம் மெதுவாகக் கூறினாள்.

நேசலிங்கம் இனிமே எங்கேயும் போக வேணாம். நம்ம மகனா வீட்டிலயே இருக்கட்டும். என்னங்க சரிதானே என்றாள் குணசேகரின் மனைவி.

'ஆகா' என்பது போல தலையாட்டினார் குணசேகர்.

நேசலிங்கத்திற்கு ஏதோ கனவுலகில் சஞ்சரிப்பதுபோல இருந்தது. சொல்லாமல் ஓடிப்போன சூதுக்காரன் என்று தூற்றி ஒதுக்கிவிடுவார்களோ என்று அஞ்சி வந்த அவனுக்கு, சொர்க்கத்தில் இடம் கிடைத்தது போல மகிழ்ந்து போனான்.

வந்து போகக்கூட யோக்கிதை இல்லாத தன்னையும் ஒரு பொருளாக மதித்து, வீட்டிலே ஒருவராக ஏற்றுக் கொள்ளும் அவர்களை மனிதர்களாக அவன் நினைக்கவில்லை. கண்முன்னே நடமாடும் கலிகாலத் தெய்வங்களாகவே நினைத்தான்.

இந்த ஒரு வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்! தனக்கு விளையாட்டு வாங்கிக் கொடுத்த வரப் பிரசாதமான வாழ்வை மனமார வாழ்த்திக் கொண்டான்.

அம்மா...

"அம்மா" என்று வணங்கினான் நேசலிங்கம். துயரமே வீடாக இருந்த அந்த இடம், இப்பொழுது தூய அன்புக்கும் லட்சியத்துக்கும் உறைவிடமாகவும் இன்பக் கோயிலாகவும் விளங்கிக் கொண்டிருந்தது.

நாட்கள் பல நகர்ந்தன.

ஒருநாள் வெற்றி காட்டிய விளையாட்டினை, இன்ப நாதனும் குணசேகரும் உட்கார்ந்தவாறு மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நான் உதவி செய்யத் தான் விரும்பினேன். ஆனால் இப்படித் தோல்வி மேல் தோல்வியாக வந்து என்னை சித்ர வதை செய்யும் என்று நான் நினைக்கவே இல்லை... நான்

அப்படி அயர்ந்து போயிருக்கக் கூடாது என்று குணசேகர் பேச்சைத் தொடங்கினார்.

நீங்கள் உங்கள் நோக்கத்தில் வெற்றிபெற வேண்டும் என்று மனமார விரும்பினீர்கள். அந்த தூய்மையான ஆசையில் விழுந்த ஒரு சிறு கீறலைக் கூட உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த அதிர்ச்சி தான் உங்கள் உடலையை ஆக்ரமித்து அல்லோலகல்லோலப் படுத்தி விட்டது. இனிமேல் எந்தப் பிரச்சினையும் இல்லை.

விளையாட்டு தான் வேடிக்கைகாட்டும் என்பார்கள். நமக்கோ வெற்றியே விளையாட்டு காட்டி விட்டது. நல்ல விளையாட்டு — திருவிளையாடல் போல என்றார் இன்பநாதன்.

குணசேகர் வாய்விட்டுச் சிரித்துவிட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு குணசேகரிடமிருந்து வந்த சிரிப்பு அது.

இன்பநாதனும் கூடவே சேர்ந்து சிரித்தார். இந்த சிரிப்பு கூட்டத்தில் நேசலிங்கமும் குணசேகர் மனைவி முத்துலெட்சுமியும் சேர்ந்து கொண்டார்கள்.

இப்படியாக குணசேகர் வாழ்க்கை செழித்துக் கொண்டது. மனமும் உடலும் தெளிவு பெறப் பெற குணமாகிக் கொண்டு விடுகிறார். நாமும் அவரது நல்ல மனதை வாழ்த்துவோம்.

இதோ குணசேகர் தாங்கித் தாங்கித் தள்ளாடித் தள்ளாடி நடைபழகுகிறார் நமது நாட்டு விளையாட்டுத் துறைபோல. நேசலிங்கம் அவருக்கு நடைபழகிட உதவிக் கொண்டிருக்கிறான் உண்மையான ஆர்வமுள்ள நல்லவர், கள் விளையாட்டுத் துறைக்கு உதவுவது போல.

எழுந்து நின்று நடக்கத் தொடங்கிய குணசேகர் போல, நமது நாட்டு விளையாட்டுத் துறையும் நடக்கும் என்று நாமும் நம்புவோம்.

அதிகப் பிரசங்கிகள். அகங்காரிகள், ஆணவக்காரர்கள், அற்ப சந்தோஷக்காரர்கள், அனர்த்த புத்தி உள்ளவர்கள் விளையாட்டுத் துறையை எப்படி நாசப்படுத்தி நலிவுபடுத்த முயற்சித்தாலும் நாம் ஆத்திரப் படவேண்டிய அவசிய மில்லை. அதில் அர்த்தமுமில்லை.

நாலாந்திர புத்தி உள்ளவர்கள் வாழ்வதற்கு இடையே நல்லவர்கள் இடையிடையே வரத்தான் வருவார்கள். தேசிய உழைப்பை லட்சியமாகக் கொண்டு நாட்டின் பெருமையை உயர்த்துவார்கள். நிச்சயம் நல்லதுதான் நடக்கும்.

நாம் அல்லவைகளை மறப்போம். மன்னிப்போம். நல்லவை களையே நினைப்போம். வளர்ப்போம். மகிழ்வோம். மகிழ்விப் போம். அது தான் விளையாட்டுப் பெருந்தன்மையாகும்.

லட்சியம் ஒரு போதும் தோற்பதில்லை. வெற்றி ஒரு போதும் நிற்பதில்லை. இடையே தோற்பதுபோல் தெரியும். இறுதி வெற்றி உண்மையான லட்சியத்திற்கும் உறுதியான உழைப்பிற்கும் உண்டு என்று குணசேகர் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார். அது உண்மை தானே! நாமும் நம்பி உழைப்போம். நன்றிக்குடன் பிழைப்போம்.

வாழ்க குணசேகர், வளர்க நேசலிங்கம், இன்பநாதனின் இனிய முயற்சி வெல்க என்று நாமும் வாழ்த்துவோம். ஏனென்றால், ஆத்திரப்படுவதில் எப்பொழுதும் அர்த்தமே யில்லை. வெற்றி காட்டும் விளையாட்டில் நாமும் பங்கு பெற்று, போராடி மகிழ்வோம், புளகாங்கிதம் பெறுவோம்.

# ஆசிரியரின் பிற நூல்கள்

## விளையாட்டுக்களின் வரலாறு
(History of Games)

| | | |
|---|---|---|
| விளையாட்டுத்துறையில் ஆங்கிலம் தமிழ் அகராதி | 15 | 00 |
| விளையாட்டுக்களின் கதைகள் (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 15 | 00 |
| விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும் | 11 | 00 |
| ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 5 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கதை | 4 | 50 |
| விளையாட்டுகளுக்குப் பெயர் வந்தது எப்படி ? | 3 | 25 |
| விளையாட்டு உலகில் வீரக் கதைகள் | 3 | 00 |
| வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் | 3 | 25 |

## முதன்மை விளையாட்டுக்கள்
(Major Games)

| | | |
|---|---|---|
| கால்பந்தாட்டம் | 4 | 00 |
| கைப்பந்தாட்டம் | 4 | 00 |
| கூடைப்பந்தாட்டம் | 4 | 00 |
| வளைகோல் பந்தாட்டம் | 4 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கேள்வி பதில் | 4 | 00 |
| பூப்பந்தாட்டம் | 5 | 00 |
| மென்பந்தாட்டம் | 6 | 00 |
| வளையப்பந்தாட்டம் | 2 | 50 |
| சடுகுடு ஆட்டம் | 7 | 00 |
| கோ கோ ஆட்டம் | 7 | 00 |
| விளையாட்டுக்களின் விதிகள் | 14 | 00 |
| நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் | 6 | 00 |
| கேரம் விளையாடுவது எப்படி ? | 6 | 00 |
| சதுரங்கம் விளையாடுவது எப்படி ? | 4 | 00 |

## பொழுதுபோக்கு சிறு விளையாட்டுக்கள்

(Minor Games)

| | | |
|---|---|---|
| ஒரு சிறு நூறு விளையாட்டுக்கள் | 5 | 50 |
| கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | 4 | 00 |
| பொழுது போக்கு விளையாட்டுக்கள் | 3 | 50 |

## விளையாட்டுத் துறையில் பொது அறிவு நூல்கள்

(General Knowledge Books)

| | | |
|---|---|---|
| விளையாட்டு விருந்து | 5 | 00 |
| விளையாட்டு விழா நடத்துவது எப்படி ? | 5 | 00 |
| விளையாட்டு அமுதம் | 3 | 50 |
| விளையாட்டு உலகம் | 3 | 50 |
| விளையாட்டுச் சிந்தனைகள் | 3 | 00 |
| விளையாட்டுக்களில் வினாடி வினா விடை | 3 | 50 |
| விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும் | 4 | 50 |
| விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் | 5 | 00 |
| வாழ்க்கைப் பந்தயம் | 6 | 00 |
| பாதுகாப்புக் கல்வி | 2 | 50 |
| சிந்தனைச் சுற்றுலா | 4 | 50 |
| தெரிந்தால் சமயத்தில் உதவும் | 5 | 00 |
| விளையாட்டு ஆத்திசூடி | 5 | 50 |
| விளையாட்டுக்களில் விநோதங்கள் | 6 | 00 |
| இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள் | 8 | 50 |
| நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம் | 5 | 50 |
| நீங்களும் நோயில்லாமல் வாழலாம் | 5 | 50 |
| நீங்களும் வலிமையாக வாழலாம் | 6 | 80 |
| Quotations on Sports and Games | 7 | 00 |
| General Knowledge in Sports and Games | 1 | 50 |
| How to Break Ties in Sports and Games | 3 | 00 |

## உடற்பயிற்சி நூல்கள்

| | |
|---|---|
| பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | 8 00 |
| இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள் | 6 00 |
| நீங்களும் உடலழகு பெறலாம் | 5 00 |
| நீங்களும் உயரமாக வளரலாம் | 4 50 |
| பெண்களும் பேரழகு பெறலாம் | 4 00 |
| உடலழகுப் பயிற்சி முறைகள் | 3 25 |
| தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 5 00 |
| எதற்காக உடற்பயிற்சி செய்கிறோம் | 4 00 |
| நல்ல கதைகள் பாகம் I | 3 00 |
| நல்ல கதைகள் பாகம் II | 1 50 |
| நல்ல கதைகள் பாகம் III | 1 50 |
| கடவுள் கை விடமாட்டார் | 2 00 |
| பண்புதரும் அன்புக் கதைகள் | 3 00 |
| நல்ல நல்ல கதைப் பாடல்கள் | 3 00 |
| நல்ல பாடல்கள் | 1 75 |
| செங்கரும்பு | 2 00 |
| மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் | 3 75 |
| நவனின் நாடகங்கள் | 5 00 |
| நல்ல நாடகங்கள் | 2 25 |
| நவரச நாடகங்கள் | 8 00 |
| சுவையான நாடகங்கள் | 4 00 |
| வேஷங்கள் விளையாடுகின்றன (சிறு கதைத் தொகுப்பு) | 6 00 |
| தெய்வமலர் (சிறுவர் சிறுகதைத் தொகுப்பு) | 3 00 |
| மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி ? (உடல் நல நூல்) | 4 00 |



திரு. எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் விளையாட்டுத்துறை நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும் என்ற முயற்சியில், இது வரை 80க்கும் மேற்பட்ட நூல்களையும், 20க்கும் மேற்பட்ட கதை, கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூல் 1977ம் ஆண்டும், 'விளையாட்டுக்களின் கதைகள்' எனும் நூல் 1981ம் ஆண்டும் "விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும்" எனும் நூல் 1984ம் ஆண்டும் தேசிய விருதினைப் பெற்று இருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்டம் (M.A., M.P.Ed.) பெற்றுள்ள ஆசிரியர், வானொலி, டெலிவிஷன், வாரப் பத்திரிகைகளில் தொடர்ந்து விளையாட்டுத்துறை பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன்முறையாக "விளையாட்டுக்களஞ்சியம்" எனும் விளையாட்டுத் துறை மாத இதழை 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்தி பணியாற்றி வருகிறார்.

Printed at : Grace Printers, Madras-33.